# பெண்மணி

கடவுள்களின்
திருவிழா மாதம்
ஆவணி
- ஆன்மிக கட்டுரை

ஆகஸ்டு 2010
ரூ.18



ராஜசியாமளா பிரகாஷ்

## கனவு மெய்ப்பட வேண்டும்

(முழு நாவல்)

யாரும் கவனிக்காவிட்டாலும் கவலைப்படாமல் தம் கடமையான மலர்தலை அழகாய்ச் செய்திருந்தன தெருவோரப் பூக்கள். கருமையிலிருந்து வெளிச்சத்திற்கு மாறுவதற்குள் ஏற்படும் நிற மாறுதல்களை ஓவியனின் திறமையோடு வானம் நிறைவேற்றி முடித்து விட்டது. உடல் சிலிர்க்க வைக்கும் குளிர்காற்று, மெல்ல வெப்பம் ஏறி தகிக்கத் துவங்கி விட்டது.

அழகான இயற்கை மாற்றங்கள் மெல்ல நிகழ்ந்து கொண்டிருப்பதை நின்று நிதானித்து கவனித்துப் பார்க்கும் அவகாசமில்லாமல் வழக்கம் போல் இயந்திர கதியில் ஓடத் துவங்கி விட்டது மனிதவர்க்கம்.

அந்த மனிதவர்க்க ஓட்டத்தில் ஹரியின் வீடு மட்டும் விதிவிலக்கா என்ன? ஹரி பிரஷ்ஷும் கையுமாய் பின்பக்கம் செல்ல, துளசி சின்ன பக்கெட்டில் தண்ணீர் கொண்டு வந்து பளிச் பளிச் என்று வாசல் தெளித்தாள். வரட் வரட் என்று பெருக்கி மணி மணியாய் புள்ளி வைத்தாள். வளைந்து நெளிந்து அவள் கைவண்ணத்தில் நிமிடத்தில் பூக்கள் கோலமாய் மலர்ந்தன. அதை நின்று ரசிக்கும் அவகாசம் இல்லா விட்டாலும், ஒரு முறை ஓரக் கண்ணால் அதன்



நாத்தனாருடன் ரேஷன் கடை வரிசையில் நின்று அரிசி, பருப்பு வாங்கி சுமந்து கொண்டு நடக்க முடியுமா?

பாலும் பாதாமும் பிஸ்தாவும் பிட்சாவுமாய் சாப்பிடுபவள் பழைய சோறை நினைத்தாவது பார்க்க முடியுமா?

எல்லா சவுகர்யங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் போது அவற்றை இழப்பதால் ஏற்படப் போகும் பாதிப்புகள் தெரிவதில்லை. ஏசி அறையில் உட்கார்ந்து கொண்டு செல்போனில் குருவிடம் கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் போது, குருவின் வசீகர முகம்தான் மனதில் நின்றதே தவிர, அந்த ரசிக்கும் கைபேசிக்கும் பின்னால் இருக்கும் அப்பாவின் பணம் தெரியவில்லை. அனாயாசமாய் ஆயிரக்கணக்கில் அப்பா தானே ரீசார்ஜ் செய்கிறார். அவளுக்கென்ன?

அவனோ, ஒரு தீபாவளிக்குப் புதுத் துணிகள் வேண்டாம் என்று கூறிவிட்டு ஐந்நூறு ரூபாய் செல்போனை செகன்ட் ஹாண்டாக முன்னூறு ரூபாய்க்கு வாங்கி, பத்துக்கும் இருபதுக்கும் அண்ணனிடம் அல்லது நண்பர்களிடம் கை மாற்று வாங்கி தன் கைபேசியை உயிரோடு வைத்திருக்கவே அரும்பாடுபட வேண்டி இருந்தது. பல சமயங்களில் அவளுக்கு மிஸ்ட்கால்கள் தான்.

இந்த அதலபாதாள வேற்றுமைகள் உரைக்காமல் இருக்க காதல் என்ன மாயம் செய்கிறதோ? காதலுக்குக் கிடையாது என்று சொல்லப்படும் கண் மட்டுமல்ல மற்ற எல்லா ஐம்புலன்களும் மயங்கிக் கிடந்த ஒரு ஜால உலகில் அவர்கள் திரிந்தார்கள்.

ஆனால், பிசினசில் பெரும்புள்ளியாய்த் திகழும் அவள் அப்பா சிவலிங்கத்திற்கோ திரும்பிய பக்கமெல்லாம் கண்கள். உடல் முழுதும் மூளை. அதுவும் குறுக்கே பாயும் மூளை. அவர் காதுக்கு எட்டாமல் போகுமா இந்த விஷயம்? அவர் பதறவில்லை, கத்தவில்லை, கோபப்படவில்லை. பையனைப் பற்றி ரகசியமாக விசாரித்தார்.

"வறுமையான குடும்பம். அப்பா ஏழை வாத்தியார். போய்ச் சேர்ந்துட்டார். அக்கா வாழாவெட்டியாய் பிறந்த வீட்டுக்கே இரண்டு குழந்தைகளோடு திரும்பி விட்டாள். அண்ணனின் சொற்ப சம்பளத்தில் தான் இவன் உட்பட ஆறு ஜீவன்கள் வாழ்க்கை ஓடுது. படிப்பு பி.காம். பைனல் இயர். படிப்புல புலி. அதனாலதான் நம்ம பாப்பா கவுந்திருக்கா. ஒண்டுக்குடித்தன வீடு..."

அமெரிக்காவில் கலிபோர்னியா கடலில் அலைகள் உயரே கிளம்பி எழும்போது 'திடீர்' என சிவப்பாக மாறி விடுகிறது. இதில் சில நேரங்களில் இந்த சிவப்பலைகளால் எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆனால் ஒரு சில நேரங்களில் ஆபத்து ஏற்படுகிறது. அப்போது இந்த சிவப்பு அலைகளில் விஷக்கிருமிகள் உருவாகின்றன. இந்தக் கிருமிகள் கடல் உயிரினங்கள், மீன்களை கொன்று விடுகின்றன. பறவைகளும் சில நேரங்களில் செத்து மடிகின்றன.

இந்த சிவப்பு அலைகளால் மனிதர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. ஆனால் உயிரைப் பறிக்கும் அளவுக்கு இந்த பாதிப்பு இருப்பதில்லை.

கடல் அலைகள் சிவப்பு அலைகளாக

போதும் என்று கை காட்டியவர் தகவல் தந்தவனை அனுப்பி விட்டு, சில ஏற்பாடுகளைச் செய்தார். பின் மகளையும் மனைவியையும் அழைத்தார்.

"என்னங்க?" என்றபடி வந்தாள் மனைவி பார்வதி.

"உட்காரு, பாரு. சுஜா எங்கே?"

புள்ளி மானாய்த் துள்ளி வந்து சிவலிங்கத்தின் கழுத்தை கட்டிக் கொண்டு, "இங்க இருக்கேன்ப்பா" என்றாள் அவள்.

தான் பெற்று, ஒன்றுமே தெரியாது என்று பார்த்துப் பார்த்து வளர்க்கும் தன் குழந்தைகளே பெற்றோர் முன் எத்தனை பொய்களைச் சொல்லி உண்மைகளை மறைத்து வேலை காட்டுகின்றன. தன் மகள் சுஜா ஒருவனை காதலித்துக் கொண்டு தன்னிடமே ஒன்றும் தெரியாத குழந்தை போல் எப்படி நடிக்கிறாள்?

உள்ளே குமைந்தாலும் வெளியே சிரித்துக் கொண்டார்.

"என்னப்பா சிரிக்கறீங்க?"

"குழந்தையா இருக்கே! உனக்கு 'குரு' பலன் வந்தாச்சுன்னு ஜோசியர் சொல்றாரே. அதான், சிரிச்சேன்."

குருவில் அவர் கொடுத்த அழுத்தமும் சொன்ன செய்தியும் அவளை மிரட்டியது.

"என்னப்பா சொல்றீங்க? விளையாடாதீங்க. நான் இன்னும் நிறையப் படிக்கணும்" முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டாள்.

"நான் ஒண்ணும் உன் ஜாதகத்தைத்




மாறுவது எப்படி? விஷக்கிருமிகள் இதில் உருவாவது எப்படி என்பது புரியாத புதிராக உள்ளது. இதை கண்டறிய கடல் இயல் ஆராய்ச்சியாளர்கள் மூளையைப் பிய்த்துக் கொண்டு வருகிறார்கள்.

- ராதா.

தூக்கிக்கிட்டு அலையலைம்மா. புது கம்பெனி ஆரம்பிக்க நேரம் பார்க்க ஜோசியரை வரவழைச்சேன். பேச்சுவாக்கில் உன் படிப்பு விஷயமா கேட்டேன். அவருக்குத்தான் நம்ம குடும்ப ஜாதகம் எல்லாமே அத்துப்படி ஆச்சே. கணக்குப் பண்ணி இந்த விஷயத்தைச் சொன்னார்."

சற்று நிறுத்தி மகளின் முகபாவத்தை ரசித்தார். திருடனுக்குத் தேள் கொட்டியது போல் அவள் தவித்து, விழித்துக் கொண்டிருந்தாள். துப்பட்டாவை வெடுக் வெடுக் என திருகியவள்,

"நான் இப்பக் கல்யாணம் பண்ணிக்கறதா இல்லை. பி.ஜி. பண்ணனும்..." என்றாள்.

"முதல்ல யு.ஜி.ல இருக்கற அரியரை எல்லாம் கிளியர் பண்ணுடாம்மா. எப்பல்லயிருந்து படிப்புல இவ்வளவு ஆர்வம் வந்தது?"

மகளை சீண்டினார். சுஜாவின் முகம் கன்றிச் சிவந்தது.

அவர் சுதாரித்துக் கொண்டார். தனக்குக் காரியம் நடக்க வேண்டுமே. சந்தேகம் வந்து அவள் பாட்டுக்குத் தன் போக்கில் அவனோடு ஓடிப் போய் விட்டால்!

"இங்க பாரு சுஜா, நான் கையில மாப்பிள்ளையை வச்சுக்கிட்டு உன்கிட்ட பேசலை. நீ பார்த்து, உனக்குப் பிடிச்சாத் தான் எந்தக் கொம்பனானாலும், எனக்கு மாப்பிள்ளை ஆக முடியும். புரியுதா? ஏதோ ஜோசியர் நம்ம நல்லதுக்குச் சொல்றாரு... செஞ்சுட்டுப் போயிருவோமே."

"செஞ்சுட்டுப் போறதா? என்ன செய்யணும்?" பார்வதி கவலையுடன் குறுக்கிட்டாள்.

"பார்வதி, நம்ம பொண்ணுக்கு நல்ல இடமா அமையுமாம். அவ தன் புருஷனோட ரொம்ப காலம் சந்தோஷமா வாழ்வாளாம். பையன் தானே விரும்பி வந்து பெண் கேட்பானாம்..."

அவள் மனதில் குருவின் முகம் மலர்ந்து மறைந்தது.

"ஆனா, இதெல்லாம் நல்லபடி நடக்க ஒரு சின்ன பரிகார பூஜை செய்யணுமாம்."

"செஞ்சுடலாம். ஐயரைக் கூப்பிட்டா எந்த பூஜையானாலும் நல்லா செஞ்சு கொடுத்துடுவாரே."

"இது அப்படிப்பட்ட பூஜை இல்ல, பாரு. நம்ம கிராமத்துல இருக்கற குலதெய்வம் கோவிலுக்கு சுஜா போய் ஒருவாரம் தங்கி பூஜை செய்யணும்."

"செஞ்சுடலாங்க. நாளைக்கு அவ பரீட்சை முடியுது. நம்ம கிராம வீட்டை சுத்தம் செஞ்சு வச்சுடச் சொல்லிடறேன். போய் இருந்து பூஜையை முடிச்சுட்டு வந்துடலாங்க."

"இரு பாரு, அவசரப்படறியே. நான் முழுசா சொல்லி முடிச்சுடறேன். நம்ம வீட்ல சொகுசா தங்கிக்கிட்டு நடத்தற பூஜை இல்ல இது. ரொம்ப எளிமையா, விரதம் இருந்து செய்ய வேண்டிய பூஜை இது. சுஜா பாயில் படுத்து, பச்சைத் தண்ணீரில் குளித்து, கஞ்சி மட்டுமே குடிச்சு ஒரு வாரம் விரதம் இருக்கணும்..."

சிவலிங்கம் சொல்லச் சொல்ல, அவள் முகம் சிறுத்தது. "டாடி..." என்று சிணுங்கினாள்.

"சுஜா... ஒரு வாரப் பூஜைதானே. செஞ்சுட்டு வந்துடு. துணைக்கு அம்மா வருவாங்க. நம்ம பூசாரி வீட்லயே நீங்க தங்கிக்கலாம். எல்லா ஏற்பாடும் செஞ்சுட்டேன். நாளை மறுநாள் நீங்க கிளம்பலாம்."

ஃ ஃ ஃ

மறுநாள் குருவை பார்த்துப் பேசினாள் சுஜா.

"குரு, அப்பா எனக்கு குருபலன் வந்தாச்சுன்னு சொல்றாரு. திடீர்னு மாப்பிள்ளையைக் கொண்டு வந்து நிறுத்திடுவாரோன்னு பயமா இருக்கு."

"என்ன சுஜா, இப்படி சொல்றே?"

"வேற எப்படி சொல்றதாம்? நீ சீக்கிரமா ஒரு வேலையைத் தேடிக்கற வழியைப் பாரு"

அவனுக்கு உள்ளே காய்ச்சல் அடித்தது. தன் படிப்பிற்கு உடனே யார் வெற்றிலை பாக்கு வைத்து வேலையை தரப் போகிறார்கள்.

ஏதோ கொஞ்சம் கம்ப்யூட்டர் தெரியும். ஆனாலும், எடுத்தவுடன் இருபதாயிரம் ரூபாய் சம்பளத்திலா வேலை கிடைக்கப் போகிறது? எந்த முகத்தை வைத்துக் கொண்டு இவள் அப்பாவிடம் பெண் கேட்க முடியும்? முதல் முறையாய் எதார்த்தம் அவன் முகத்தில் அறைந்தது.

"என்ன இப்படி முழிக்கற? உன் புத்திசாலித்தனத்துக்கு வேலை உடனே கிடைச்சுடும்."

"அதெல்லாம் சரி, சுஜா. வேலை கிடைக்கறது சுலபமில்லை. அப்படியே கிடைச்சாலும் சில ஆயிரங்களை சம்பளமா வாங்கிக்கிட்டு ஒரு கோடீஸ்வரரோட பெண்ணை எப்படி..."

"இங்க பாரு, நான் எப்பவுமே சொல்றது ஒண்ணே ஒண்ணுதான். எங்கப்பா சம்மதிச்சாலும் சம்மதிக்காம போனாலும், நான் உன்னைத்தான் கல்யாணம் செஞ்சுப்பேன். அப்பா சம்மதிச்சா, ஆசீர்வதிக்கட்டும். அவர் கம்பெனி ஒண்ணுலேயே பெரிய பதவியா உனக்குப் போட்டுக் கொடுத்துடுவாரு... இல்லாட்டி, கஞ்சியோ கூழோ உன் வீட்ல வந்து, அதைப் பகிர்ந்துகிட்டு நான் வாழத் தயார்."

அவள் பேசப் பேச அவன் கண்கள் கலங்கின. இந்த அன்பிற்காக எதையும் செய்யலாமே. ஒரு வேலையா தேடிக் கொள்ள முடியாது? வங்கித் தேர்வு, அரசாங்கத் தேர்வு என்று எல்லாம் எழுதி பெரிய பதவியில் அமர்ந்து நன்கு சம்பாதித்து இவளை ராணி மாதிரி வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

"பூஜையை நல்லபடி முடிச்சுட்டு வா, சுஜா. நீ திரும்பி வரும் போது நான் நல்ல சேதியோட காத்திருப்பேன்."

ஃ ஃ ஃ

## 5

சுஜா நினைத்தது போல் எதுவும் சுலபமாக இல்லை. 'ஏதோ ஒரு வார விரதம் தானே' என்று அப்பா சொன்ன போது அவளுக்கும் பெரிதாய்ப்படவில்லை. ஆனால், உண்மையில் முதல் நாளே பெண்டு நிமிர்ந்து விட்டது.

இவர்கள் போய் தங்கிய பூசாரி வீடு கோயிலுக்கு அருகிலேயே இருந்தது. வீட்டின் பின்பக்கம் ஆறு சலசலவென்று ஓடியது. மரமும் செடியும் பூக்களும் பறவைகளுமாய் போய் இறங்கியவுடன் காட்சி ரம்மியமாய்த் தான் இருந்தது. வருடாவருடம் பார்த்து ரசிக்கும் இயற்கை எழில் தானே!

போகும் வழியிலேயே ஓட்டலில் இரவு உணவை முடித்துக் கொண்டு கிட்டத்தட்ட ஒன்பது மணிக்கு பூசாரியின் வீட்டை அடைந்தார்கள். ஊரே உறங்கி விட்ட சூழலில் இவர்களின் சுமோவின் மெல்லிய ஓசையே பேரிரைச்சலாய்க் கேட்டது.

பூசாரி வீட்டினர் விழுந்து விழுந்து வரவேற்றார்கள். சின்ன ரேழியை ஒட்டிய அறுபது சதுரடி அறையை இவர்களுக்கு ஒதுக்கி இருந்தார்கள். பூசாரி வீட்டினர் முற்றத்தை ஒட்டிய ஹாலில் புழங்கிக் கொண்டார்கள். அதை விட்டால் சின்ன சமையல் அறை. அவ்வளவு தான் வீடே!

இவள் அம்மாவுக்கு கயிற்றுக் கட்டிலும், தலையணை போர்வையும் கொடுக்கப் பட்டன.

"சின்னம்மா விரதமாமே. ஐயா எல்லா விவரத்தையும் சொன்னாரு" என்றபடி வெறும் பாயையும் கல் போன்ற சின்ன தலையணையையும் மெல்லிய போர்வையையும் தந்து விட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போனார்கள்.

அம்மாவுக்கு அலுப்போ, வயது காரணமோ அல்லது கயிற்றுக் கட்டில் சுகமாய் இருந்ததோ என்னவோ சுகமாய்த் தூங்கிப் போனாள்.

ஆனால், சுஜாவால் ஒரு நொடி தூங்க முடியவில்லை. படுத்தால் அரையடி உள்ளே மெத்தென உள்வாங்கும் போம் மெத்தை கட்டில், தலையணை என்று எந்த வசதியும் இல்லை. உடை இல்லாத இடத்தில் எல்லாம் அழுந்தப் பதியும் பாய், கல் போல் ஒரு தலையணை - இரண்டும் அவள் பூ உடலுக்கு வலி ஏற்படுத்தின. தரை சில்லிப்பு தவிர கூரையிலிருந்து இறங்கிய பனி வேறு ஏதோ பத்து டிகிரியில் ஏ.சி. ஓடுவது போல் உடலை சிலீரெனத் தாக்கியது. அதற்கு வாகாய் போர்வை இதமாய் இல்லாமல் துண்டு துணி போல் இருந்தது. கொசு வேறு பிடுங்கி எடுத்தது.

தூக்கமே வராமல் புரண்டு புரண்டு படுத்தவள், தன்னை அறியாமல் நான்கு மணி வாக்கில்தான் கண் அயர்ந்தாள். ஒரு மணி நேரம் முழுதாய் போவதற்குள் எழுப்பப்பட்டாள். நல்ல நாளிலேயே எட்டு மணிக்குக் குறைந்து அவள் எழுந்ததில்லை.

இப்போது இரவு முழுதும் உறங்காமல் ஒரே ஒரு மணி நேரத்தில் எழுப்பப்பட, மூர்க்கமாய் ஒரு கோபம் எழுந்தது. யாரிடம் காட்ட முடியும். கண்களில் நீர் குளம் கட்ட, சொல்லத் தெரியாத ஒரு சுயபச்சாதாபத்தில் அம்மாவிடம் முணுமுணுத்தாள். எரிந்து விழுந்தாள்.

பார்வதியா அசருபவள்? "நான் இதை எல்லாம் எதிர்பார்த்தேன், சுஜா. உனக்குப் பழக்கமே இல்லாத விஷயம். என்னம்மா செய்ய முடியும்? வேற எந்த விஷயமானாலும் காசு கொடுத்து ஆளை ஏற்பாடு செஞ்சுடலாம். ஆனா, இது தெய்வ காரியமாச்சேம்மா. முழுமனசோட நீதான் செஞ்சாகணும். எழுந்து வாடாம்மா."

"சரி, குடிக்க காம்ப்ளான், ஹார்லிக்ஸ் ஏதாவது எடுத்து வா. எழுந்துக்கறேன்."

"அதெல்லாம் பேச்சே கிடையாது. இங்கே எதுவும் கிடையாது. எனக்கே டிகாஷனை டீ மாதிரி இறுத்து தண்ணியா காபிங்கற பேர்ல ஏதோ கொடுத்தாங்க. குளிச்சுட்டு வா. உனக்குப் பால் தரச் சொல்றேன்."

"பின்னாடி கிணறு இருக்குப் பாரு. போய்ப் பல் தேய்ச்சுடு. அங்கேயே குளிக்கறியா, இல்ல, குளத்துல குளிக்கறியா?" பூசாரியின் அம்மா கேட்டாள்.

ஆடு மாடு முதல் மனிதர் வரை குளித்து, அதிலேயே தோய்த்து பல் கூட கொப்பளித்து துப்பும் தண்ணீரில் குளிப்பதைப் பற்றி அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடிய வில்லை.

"கிணத்தடியிலயே குளிக்கறேன்" என்று முணகியபடி சோப்பு, டூத் பிரஷ், துண்டுடன் பின்பக்கம் போனாள். துருப்பிடித்த வாளியில் நீர் நிரம்பி இருந்தது. கிணற்றில் கட்டப்பட்டிருந்த வாளி சற்று சுத்தமாய்த் தெரிந்தது. அதனால், தானே தண்ணீர் சேந்தி அதில் பல் தேய்க்க கிணற்றில் வாளியை விட்டாள். கயிற்றைப் பிடித்து இழுப்ப தற்குள் கைகளிரண்டும் புண்ணாகி எரிந்தன. எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"அப்படியே வாளியில் தண்ணீர் சேந்தி தலையில விட்டுக்கோ. தலையை மட்டும் துவட்டிக்கிட்டு ஈரத் துணியோட, ரெண்டு குடம் தண்ணியை கோயிலுக்கு எடுத்துப் போகணும். பிரகாரம், வாசல் எல்லாம் பெருக்கி, தண்ணி ஊத்திக் கழுவி, கோலம் போடணும்."

கேட்கக் கேட்க அவளுக்கு மலைப்பாக இருந்தது. எல்லா வேலைகளையும் பழக்கமில்லாத காரணத்தால் தட்டுத் தடுமாறி செய்து முடிக்கவே இரண்டு மணி நேரமானது அவளுக்கு. அதற்குள் வயிறு பசியில் சுருண்டது.

வீடு திரும்பியவளுக்கு உப்பு, மோர் கலந்த ராகிக் கூழும், பச்சை மிளகாயும் காலை உணவாகத் தரப்பட்டன. என்ன தான் பசி என்றாலும் ஒரு டம்ளருக்கு மேல் இறங்க மறுத்தது.

உடை மாற்றியவள் அப்படியே உறங்கிப் போனாள். உறங்கி எழுந்தவள், தன் உடைகளைத் தானே தோய்க்க வேண்டி இருந்தது. மாலை மீண்டும் கோயிலைக் கழுவி, பெருக்கி, கோலம் போட்டாள். இரவு உடம்பு நூறு யானைகள் மிதித்தது போல் வலித்தது.

அந்த செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அவளுக்கு மேலும் வேலை பெண்டு கழண்டது. அம்மா கோயிலில் பொங்கல் வைக்க வேண்டும் என்றாள். சமைக்கவே தெரியாத அவளுக்கு விறகு பற்ற வைத்து அரிசியைக் களைந்து சுடுதண்ணீரில் போட்டுக் கிளறி பொங்கலை இறக்குவதற்குள் கண்ணிலும் மூக்கிலுமாய் தண்ணீர் கொட்டியது. கை அங்கங்கு சுட்டது.

மதியம் களியும் ஏழு காய்களைப் போட்டு கூட்டும் செய்யச் சொன்னாள் அம்மா. நூறு நூறு கிராம் காய்கள்தான். நறுக்குவதற்கே அவளுக்கு ஒரு மணி நேரம் பிடித்தது. ஒரு படி அரிசியைப் போட்டு களி கிளறுவதற்குள் அவள் நொந்து நூடுல்ஸ் ஆனாள்.

ஒரு வாரத்திற்குப் பின் ஊர் திரும்பிய போது ஐந்து கிலோ எடை குறைந்து கண்ணில் அலுப்பும் தூக்கமுமாய் பரிதாப மாய் இருந்தாள். சிவலிங்கம் சிரித்தபடி வரவேற்றார்.

"என்னடாம்மா, ரொம்பக் களைச்சுப் போயிட்டியா?"

"ஐயோ, அப்பா! ஏதோ சாமி பேரைச் சொன்னதால பல்லைக் கடிச்சுக்கிட்டு சமாளிச்சேன். சத்தியமா நம்மால இதெல்லாம் முடியாதுடா, சாமி! குடம் குடமா தண்ணி பிடிச்சு, கிலோ கிலோவா காய் நறுக்கி, சமைச்சு, துவைச்சு, வீடு பெருக்கி, மெழுகின்னு எப்படித்தான் சில பொம்பளைங்க தினம் அலுக்காம செய்யறாங்களோ! ஆளை விடுங்க!"

தோளைக் குலுக்கி மகள் சொல்ல,

சிவலிங்கம் வெற்றிகரமாய் சிரித்துக் கொண்டார். மனைவியை அர்த்தத்துடன் பார்த்தார்.


"சரிடா செல்லம், அப்பா ஒரு வாரம் பிசினஸ் விஷயமா சுவிஸ் போறேன். கூட வரியா?"

"சுவிஸ்சா?" என்று முகம் மலர்ந்தாள். ஒரு வாரம் சக்கையாய் தான் பட்டபாட்டிற்கு குளிர் மலைப் பிரதேச வாசம் தேவையான நல்ல மாற்றமாகப்பட்டது.

"ஆனா, பிசினஸ் விஷயமா நீங்க வெளியே போயிட்டா, நான் கொட்டு கொட்டுனு ரூம்ல என்ன செய்வேன்? கைடோட வெளியே போற வேலையெல்லாம் எனக்குச் சரிபடாதுப்பா."

"நீ ஏன்டா கைட் அது இதுனு போகணும்? என் நண்பன் குடும்பம் அங்கே இருக்கு. அவங்க வீட்லதான் நாம தங்கப் போறோம். உன்னையும் அம்மாவையும் அவங்க கவனிச்சுப்பாங்க."

உற்சாகமானாள் சுஜா. அடுத்த ஒருவாரம் பேக்கிங், விசா என்று பரபரப்பாய் ஓடியது. குருவை நேரில் கூட சந்திக்க முடியாத அவசர ஓட்டம்.



கைபேசியில் தான் "ஹாய் குரு, ஊர்ல யிருந்து வந்துட்டேன்" என்றாள்.

"வாவ்! உன்னை உடனே பார்க்கணுமே."

"என்னாச்சு? வேலை எதுவும் கிடைச்சுடுச்சா?"

"அதுக்குள்ளயா? போ, சுஜா..."

"ஏன் குரு? நீ நல்லா படிக்கறவன் தானே?"

"வெறும் பி.காம். தானே சுஜா நான். அதுவும், இன்னும் ரிசல்ட் கூட வரலை. என்னை மாதிரி லட்சக்கணக்கான டிகிரி ஹோல்டர்ஸ் இருக்காங்க. வேலை கிடைக்கறது அவ்வளவு சுலபமா?"

அவளுக்கு இந்த உலக நடப்பெல்லாம் புரிபடவில்லை. பணத்தில் புரண்டு, வீடு, பணக்கார நண்பர் வட்டம், கல்லூரி என்று மட்டுமே வளைய வரும் அவளுக்கு, அவனுடைய கீழ் மத்தியதர குடும்பப் பிரச்சினைகள் பிடிபடுவதில்லை.

"சரி... நீ டிரை பண்ணு. வேலை

கிடைச்சுடும். அப்பா நல்ல மூடுல இருக்கும்போது நான் உன்னைப் பத்தி பேசறேன். அவர் கம்பெனியிலேயே வேலை போட்டுத் தரச் சொல்லிடறேன். சரியா? அப்புறம் டும் டும் டும் தான்."


அவள் சொல்வது நடைமுறைக்குக் கஷ்டம் என்று தோன்றினாலும், சொல்லும் போது இனித்தது, குருவிற்கு.

"சரி, நேர்ல பார்த்துப் பேசுவோமா?"

"அதுக்குத்தான் போன் பண்ணினேன், குரு. ஊர்ல சக்கையா பிழிஞ்சுட்டாங்க. செம டயர்டா ஆயிட்டேன். இப்ப அப்பா சுவிட்சர்லாண்ட் போகப் போறாரு. ஜஸ்ட் ஒரு ஒன் வீக். நானும் கூடப் போயிட்டு வரப் போறேன். பேக்கிங், ஷாப்பிங்னு ரொம்ப பிஸியா இருக்கேன்..."

"ஓ!" அவன் குரலில் சுருதி இறங்கியது.

"என்ன ராஜாவுக்குக் கோபமா? ஜஸ்ட் ஒன் வீக்தானே."



"அது சரி"

"என்ன குரல் கம்முது!"

"இல்ல, உன்னை ஒரு வாரமா பார்க்கலை... இன்னும் ஒரு வாரம் பார்க்க முடியாதுனு..."

"ஜஸ்ட் ஒன் வீக் தான்டா செல்லம். அதுக்குள்ள நீயும் சீரியசா ஒரு வேலையைத் தேடிக்கோ. அப்பாகிட்ட பேசும்போது உன்னைப் பத்தி உசத்தியா சொல்லலாமில்லை. சுமாரான வேலை கூடப் போதும்... அப்பா என் விருப்பத்துக்குக் குறுக்கே நிக்க மாட்டாரு. அப்புறம் என்ன, என் அப்பா கம்பெனிகளுக்கு நீதான் எம்.டி. ஹனிமூனுக்கு நாம ரெண்டு பேரும் சேர்ந்தே சுவிஸ் போகலாம், சரியா?"

இத்தனை வருடங்களில் தோன்றாத பயம் அவனுள் எழுந்தது.

"சுஜா..."

"என்னப்பா?"

"பயமா இருக்கு, சுஜா"

"எதுக்குடா?"

"நீ என் கைக்கு எட்டாத தூரத்துக்குப் போயிட்டா மாதிரி இருக்கு."

"சீ, போடா. நான் என்ன வேற்று கிரகத்துக்காப் போறேன்? யூரோப் தானே!"

"அதில்ல, சுஜா..."

அவன் தயங்கி இழுத்தான். அவளுக்குப் பொறுமை இல்லை. ஒரு வாரம் இயல்புக்கு மாறாய் செய்த உடல் உழைப்பு ஏற்படுத்தி இருந்த அசதியில் அவன் தயக்கமும் அலுப்பைத் தந்தது.

"ப்சூ... பளிச்சுனு சொல்லு, குரு."

"உன் அந்தஸ்து பயமுறுத்துதுடா."

"ப்சூ. இதுதானா குரு? நான் தான் சொல்லிட்டேனே. என் விருப்பத்துக்கு அப்பா குறுக்கே நிக்க மாட்டார்னு. அப்படி ஏதாவது தடுத்தாருன்னா, எல்லாத்தையும் விட்டுட்டு உன் கூட வந்துடுவேன். அதுக்குத்தான் ஒரு வேலை தேடிக்கோனு சொல்றேன்... புரியுதா? அப்புறம் என்ன அந்தஸ்து அது இதுனு பேசிக்கிட்டு?"

அவன் அரைமனதாக சமாதானமாய், "சரி" என்றான்.

❀ ❀ ❀

## 6

அவள் பலமுறை பல நாடுகளுக்குப் போயிருந்தாலும், சுவிட்சர்லாந்துக்குப் போவது இதுவே முதல் முறை. அப்பாவின் நண்பர் ராம்கோபாலின் வீடு அரண்மனை போல் இருந்தது. பிரமித்துப் போனாள், சுஜா. வீட்டின் பின்னால் பனி படர்ந்த மலைத் தொடர்கள். நீல வானமும் பச்சைப் பசேல் புல்வெளிகளும் ஏதோ ஓவியம் போல் இருந்தது. மற்றவர்கள் உள்ளே போக, வெளியே நின்றபடி இயற்கையில் லயித்து சுஜா, "வாவ்!" என்று வாயைப் பிளந்தவள் தான்!

"வாம்மா" என்று ராம்கோபாலின் மனைவி நீரஜா கைப்பிடித்து உள்ளே அழைத்துப் போனாள். உயரமாய் சிவப்பாய் மகன் வருணை அறிமுகப்படுத்தினாள். இன்னொரு "வாவ்!' சொல்லும்படி அவன் இருந்தான். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்த பின் சாப்பிட வந்தார்கள்.

சிவலிங்கம் ராம்கோபாலோடு பேசியபடி சாப்பிட்டு பிஸினஸ் விஷயமாய்க் கிளம்பும் முன் வருணிடம், "ரெண்டு நாள் உன் வேலையெல்லாம் ஒதுக்கி வச்சுட்டு இவளைக் கூட்டிப்போய் ஊர் சுற்றிக் காட்டுப்பா" என்றார் இயல்பாய்.

"ஷ்யூர் அங்கிள்" என்று அவன் சிரித்ததில் அவள் சற்று லயித்துத்தான் போனாள். சீரான பல்வரிசையை மூடிய மெல்லிய சிவந்த உதடுகள். ஆப்பிள் போல் சிவப்பும் மஞ்சளும் கலந்த கன்னம். ஆண்கள் கூட இத்தனை நிறமாய் இருப்பார்களா என்ன? ஊரின் மகிமையா? தான் கண்கொட்டாமல் அவனையே பார்ப்பதை அவள் பல நிமிடங்கள் உணரவேயில்லை.

அவள் பெற்றோர் கவனிக்கத் தவறவில்லை.

❀ ❀ ❀

'நீ காற்று
நான் மரம்
என்ன சொன்னாலும்
தலையாட்டுவேன்...'

ஹரிஹரனின் குரல் காதலியிடம் குழைந்து கொண்டிருந்தது. பேட்டரி தேய்ந்த அந்த பழைய டிரான்சிஸ்டரால் கூட அந்த குரலின் மென்மையை, அழகைக் கெடுக்க முடியவில்லை.

சட்டையை மாட்டிக் கொண்டபடி குரு அந்த வரிகளில் லயித்தான்.

'சுஜா, நீ என்ன சொன்னாலும் நான் தலையாட்டுவேன்டா' என்று அவளிடம் கல்லூரியில் ஒரு முறை இந்தப் பாட்டைப் பாடி உருகியது நினைவில் மோதியது.

'கல்யாணத்துக்குப் பிறகு மாறிடுவடா.

ஆண்கள் எல்லாருமே அப்படித்தான்.' அவள் சீண்டினாள்.

'என்னைப் பார்த்துச் சொல்லு. நீ இல்லாட்டி நான் செத்துருவேன்டி. அந்த அளவு உன்னை நேசிக்கிறேன். புரியுதா? அப்படிப்பட்ட நான் மாறுவேனா?' அவன் ஆவேசமாய் அவளை உலுக்கினான்.

'நீ இல்லாட்டி நான் மட்டும் உயிரோட இருப்பேனா, குரு?' அவள் கண்கள் கலங்கி விட்டன.

இப்போது நினைத்தாலும் மனது நெகிழ்ந்து தான் போகிறது, குருவிற்கு.

"குரு, டிபன் வெச்சிருக்கேன். சாப்பிடு..." அம்மா சொல்ல, நினைவு கலைந்தான்.

"டியூஷன் சாயந்திரம் தானே, இப்ப எங்க கிளம்பிட்ட?"

"பக்கத்துல ஒரு டுடோரியல்ல தினம் ஒரு ரெண்டு மணி நேரம் வகுப்பெடுக்க முடியுமானு கேட்டாங்க. போய்ப் பார்க்க லாம்னு..."

"நல்லது. ஏதோ அந்த கடவுள் அருள்ல உனக்கும் ஒரு நல்ல வேலை கிடைச்சுட்டா, நம்ம நிலைமை கொஞ்சம் சீரடையும். பாவம், ஹரி. அவன் பாரம் குறையும்."

அம்மா பேச ஆரம்பித்தால் ஓயமாட்டாள் என்று தெரியும். இட்லிகளை நாலே வாயில் தின்று விட்டு வெளியேறினான்.

அவன் நண்பன் சொன்ன டுடோரியலை நோக்கி நடந்தான். இரண்டு ஸ்டாப்பிங் தள்ளி இருந்தது அந்த கல்வி நிலையம். அதற்கு எதற்காக பேருந்து என்று நடக்க முடிவெடுத்தான்.

அவனுள் குழப்பமான எண்ணங்கள் அலை மோதின. அரசுத் தேர்வு, வங்கித் தேர்வு என்று எல்லாம் எழுதுவதாக இருந்தான். ஆனால், சுஜாவின் அவசரத்திற்கு அவை உதவாது. நல்ல நிறுவனத்தில் வேலை கிடைப்பது மட்டும் சுலபமா?

வேலை தேடிக் கொள்- என் அப்பாவை சந்திக்கும் போது பெருமையாய் சொல்ல உதவும் என்கிறாள்.

அவர் நிறுவனத்தில் நீதான் எம்.டி. என்கிறாள்.

அவர் சம்மதிக்காவிட்டால் நீ தேடிக் கொள்ளும் வேலை உதவும் என்கிறாள்.

என்ன சொல்ல வருகிறாள்?

'குருவை விரும்புகிறேன். நல்ல வேலை போட்டுக் கொடுங்கள்' என்று நேரடியாய் சொல்லும் தைரியம் இல்லையா? அல்லது சொன்னால் எடுபடாதா?

ஏன் இந்தத் தயக்கம்?

ஆனால், அவள் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கிறது. 'குரு' என்று இவனை அறிமுகம் செய்தால், இவனிடம் என்ன இருக்கிறது பெருமையாய்ச் சொல்ல? ஒரு நல்ல வேலையாவது இவனுக்கு நல்ல விலாசம் கொடுக்கும்.

'டுடோரியலில் வேலை பார்க்கிறார்.'

என்ன பி.ஈ., எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுக்கும் புரொபஷனல் படிப்பு படித்தவனா? பத்தாம் வகுப்பும் பன்னிரெண்டாம் வகுப்பும் பெயிலான மாணவர்களுக்கு கணக்கும் அக்கவுண் டன்சியும் வகுப்பெடுக்கப் போகிறான்!

அதை விட்டால்...

'கடையில் கணக்கு எழுதுகிறார்..'

சம்பளம்?

எடுத்தவுடன் ஐந்தாயிரம் கிடைத்தால் பெரிது!

பெரிய வேலை கிடைக்கும் வரை அம்மா, அண்ணனைப் பொருத்தவரை, 'ப்பா! கொஞ்சம் தாராளமா மூச்சு விடலாம்பா! தாராளம்' என்பார்கள்.

ஆனால், சுஜா வீட்டில் எடுபடுமா?

வங்கி வேலை, அரசாங்க வேலை இல்லை என்றாலும், தான் படித்த படிப்புக்கு எடுத்தவுடன் கிளார்க் வேலை கிடைக் கலாம். முதலில் வேலை கிடைக்குமா? நூற்றுக்கணக்கான காலி இடங்களுக்கு லட்சக்கணக்கானவர்கள் பரீட்சை எழுதும் போது வாய்ப்பு கிடைப்பது கடினம். கிடைத்தாலும் எடுத்தவுடன் என்ன ஏழாயிரம் கிடைக்குமா?... அவனுக்குத் தலை சுற்றியது.

கடவுளே!

'கோயில்ல செம வேலைடா. பெண்டு கழண்டுடுச்சு. ஒரு வாரம் ஒரு சேஞ்சுக்காக சுவிஸ் போயிட்டு வந்துடறேன்.'

சுஜாவின் குரல் காதில் குழைந்தது.

ஒரு மாற்றம் வேண்டி, அனாயாசமாய் உலக சுற்றுலா போகும் அவள் எங்கே? அடுத்த இரண்டு நிறுத்தத்தில் இருக்கும் இடத்திற்குப் பேருந்தில் போகாமல் காசை மிச்சம் செய்யும் தான் எங்கே? இத்தனை வருடங்கள் இந்த புத்திக்கு இந்த பேதங்கள் ஏன் உரைக்க வில்லை.

"ஐ லவ் யூ குரு" என்று அவள் சொன்ன போது பாகாய் உருகி விட்டது அவன் இதயம் மட்டுமல்ல, மூளையும்தான். இல்லா

விட்டால், முளையிலேயே கிள்ளி இருக்க மாட்டானா?

ஆனால், ஆரம்பத்தில் அவன் தயங்கித் தவிர்த்த போதெல்லாம், அவள்தானே வலிய வலிய வந்து அவனை சம்மதிக்க வைத்தாள். அவள் அன்பை புறக்கணிக்க முடியாமல் ஏற்றது அவன் பலவீனமா?

இப்போதும், 'அப்பா சம்மதிக்காட்டா அடுத்த நிமிஷம் உன் கூட வந்துடுவேன் குரு. அதில் மாற்றமே கிடையாது' என்று தானே கூறுகிறாள். அந்த அன்பு ஒன்று போதாதா? மலையைப் பிளந்து, நிலவை தொட்டுவிட மாட்டானா?

ஐந்தாயிரம் சம்பளத்தில் வேலை கிடைத்தால், அது துவக்கம் தானே, முடிவு இல்லையே. அப்பா இறந்த போது அந்த சின்ன வயதில் அண்ணன் ஹரி வீட்டுப் பொறுப்பை தோளில் சுமக்கவில்லையா? மனம் இருந்தால் மார்க்கம் உண்டு.

தன்னால் முன்னேற முடியும்.

ஜெயிக்க முடியும்.

சுஜா மட்டும் தன் அருகே இருந்து விட்டால் போதும்!

இந்த உத்வேகம் வந்தவுடன் இன்னும் வேகமாய் நடந்தான்.

டுடோரியல் ஒரு சின்ன கட்டிடத்தின் முதல் மாடியில் இருந்தது.

"இப்பத்தான் சின்ன லெவல்ல ஆரம்பிச்சிருக்கோம். பத்தாம் வகுப்பிலும் பன்னிரெண்டாம் வகுப்பிலும் பெயிலான மாணவர்களுக்கு கோச்சிங் கொடுக்கணும். தினமும் மாலையில் ஒரு மணி நேரம் நீங்க கணக்கு, அக்கவுண்டன்ஸி எடுத்தாப் போதும்.."

"ம்... ச... சம்பளம்"

"ஆயிரம் ரூபாய். இப்ப அதுதான் தர முடியும். போகப் போக மாணவர்கள் சேர்க்கை, உங்க பர்பாமென்ஸ் இதையெல் லாம் வெச்சு... பார்க்கலாம்."

'வெங்காயம், லட்ச ரூபாயா தரப்போற?' என்று நினைத்துக் கொண்டவன், "சரி" என்று ஒப்புக் கொண்டான். முப்பது மணி நேர உழைப்பிற்கு வெறும் ஆயிரம் ரூபாய். வீட்டு வேலையாட்கள் கூட வரவர அதிகம் சம்பாதிக்கிறார்கள்.

மனம் தளராதே! இது முதல் படி. நிதானமாக ஏறலாம். சுஜா அருகில் இருந்தால் போதும், அவள் அப்பாவே தன் சாம்ராஜ்யக் கதவுகளை விரியத் திறந்து விடுவார். பின் வறுமையாவது ஒன்றாவது?

சுஜாவிடம் தனக்கு டுடோரியலில் வேலை கிடைத்ததை சொல்ல வேண்டும். அடுத்த வாரம் செல்ல இருக்கும் மூன்று நேர்முகத் தேர்வைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

ஆனால், அவளாக பேசினால் தான் உண்டு.


அவள் போய் ஒரு வாரம் ஆகப் போகிறது. ஊர் போய்ச் சேர்ந்தவுடன், "வந்து சேர்ந்து விட்டேன்" என்று சுருக்கமாக சொன்ன கைபேசி அழைப்பிற்குப் பின் வேறு எந்தத் தகவலும் அவளிடமிருந்து இல்லை. ஏன் ஊர் திரும்பவில்லை? அட்லீஸ்ட், ஏன் அவள் பேசவில்லை?

கூடவே பெற்றோர் இருப்பதால் இருக்கலாம். அங்கே இரவு இங்கே பகல் என்று கால பேதங்களால், அவர்கள் உறங்கும் சமயம் கூட இவள் பேச முடியாமல் இருக்கலாம். அதுவும் நல்லதுதான். பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிலிருந்து ஆசையாக அவள் பேசும் போது வெறும் ஆயிரம் ரூபாய் வேலையில் சேர்ந்திருப்பதை

## பாலஸ்தீன குழந்தைகளின் காற்றாடித் திருவிழா!

இஸ்ரேலில் காஜா பகுதி முழுமையாக தடை செய்யப்பட்ட பகுதியாகும். இப்பகுதிக்குள் செல்ல அதிகாரிகளுக்கு இஸ்ரேல் முழுமை யான தடை விதித்துள்ளது. இருந்தாலும் ஆண்டு தோறும் இந்நகரில் காற்றாடித் திருவிழா நடத்தப்படுகிறது. பாலஸ்தீன குழந்தைகள் இத்திருவிழாவில் கலந்து கொண்டு விதவித மான காற்றாடிகளை பறக்க விடுவார்கள்.

6,000 குழந்தைகளுக்கு மேல் ஒரே சமயத்தில் காற்றாடி பறக்க விடுவார்கள். இதில் பாதிக்கு மேற்பட்ட குழந்தைகள் காற்றாடி பறக்க



சொல்வதை விட, வேறு நல்ல வேலையும் அடுத்த வாரம் கிடைத்து விட்டால் அதை சொல்வது தானே உசத்தி! அதற்குள் வேலை தேடிக் கொள்ள வேண்டும்.

முதலில் இப்போதைக்கு அம்மாவிடம் இந்த விஷயம் சொல்ல வேண்டும்.

"அப்பாடா! கடவுள் மெல்ல கண்ணைத் திறக்கிறார்" என்பாள்.

பாவம், கடவுளின் கருணைப் பார்வை முழுதும் தன் மேல் விழப் போவதையும், கூடிய விரைவில் செல்வத்தில் திளைக்கப் போவதையும் அவள் அறிய மாட்டாள்! சிரித்துக் கொண்டான்.

'சுஜி, எப்ப நீ வரப் போறே? நீயும் நானும் சேரும் அந்த இனிய பொழுது எப்போது? நீ இல்லாமல் இரு வாரங்களாய்த் துடித்துப் போகிறேனடி. உன் மௌனம் என்னைக் கொல்கிறதே.'

'மண்
மழைக்கு
ஏங்குவது பொய்.
என்
மனம்
உனக்கு
ஏங்குவதே மெய்!'

அவன் ஏங்கித் தவித்தான்.

ஃ ஃ ஃ




அந்த ஏரியில் கப்பல் போன்ற சொகுசு படகு மிதந்து கொண்டிருந்தது. அதிலேயே பலதளங்கள். ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கேளிக்கை மையம் - நீச்சல் குளம், திரையரங்கம், ஜிம், பார்லர், உணவகம், நூலகம்... ஒரு சின்ன ஊரே அந்தப் படகில் இருந்தது. கூப்பிட்ட குரலுக்கு ஏவலாள்!

"இ... இந்த படகு உங்க சொந்தப் படகா?" சுஜா கண்கள் அகல வருணிடம் கேட்டாள்.

"யா! திஸ் யாட்ச் ஈஸ் அவர்ஸ்..." அவன் தோள் குலுக்கி அலட்சியமாய் சொன்னான்.

அவளுக்கு பிரமிப்பு அடங்கவே இல்லை.

"பல லட்சங்கள் இருக்குமில்ல?"

"ம்ஹூம்... பல கோடிகள்."

"எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு." காற்று சிலுசிலுவென அவள் கூந்தல் கலைக்க, ஏரிநீரைப் பார்த்தபடி அவள் சொன்னாள்.

மிக அருகே வந்து நின்ற அவன், "எனக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு" என்றபடி அவள் இடை பற்றி தன் மீது சாய்த்துக் கொண்டு "உன்னை..." என்றான். அப்படியே அவள் இதழ்களில் தன் இதழ்களைப் பதித்தான்.

அவள் மெய்மறந்தாள். அதுவரை கண்ணியமாய் காதலித்த குருவையும் மறந்தாள்.

ஃ ஃ ஃ

அன்று இரவு சிவலிங்கம் அவளை அழைத்தார்.

"சுஜாம்மா, உன்கிட்ட ஒரு முக்கிய விஷயம் பேசணும்."

"என்னப்பா?"

"வருணைப் பத்தி என்ன நினைக்கறே?"

மதியம் அவன் மேல் ஏற்பட்ட கிறக்கம் இன்னும் அவளுள் தகித்துக் கொண்டிருந்தது. காட்டிக் கொள்ளாமல்,

"ஏம்பா திடீர்னு கேட்கறீங்க?" என்றாள்.

"ராம்கோபால் நம்மை விட இரண்டு மடங்கு பணபலம் படைச்சவர். அவரோட அத்தனை சொத்துக்கும் இந்த வருண் தான்

விடும் போட்டியில் வெற்றி பெற்று விடுவார்கள். 20 குழந்தைகளில் 17 பேர் எப்படியும் வெற்றி பெற்று விடுகிறார்கள். ஒரு நாலில் ஒரே சமயத்தில் 713 காற்றாடிகளை பறக்கவிட்டு, ஜெர்மனியின் சாதனையையும் முறியடித் துள்ளனர்.

ஆனால் உலக சாதனையை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யத்தான் காஜா பகுதிக்கு அதிகாரிகளோ அல்லது நடுவர்களோ வருவதில்லை. இஸ்ரேல் அரசு காஜா பகுதி மீது விதித்துள்ள தடைதான் இதற்கு காரணம். ஆண்டுதோறும் கோடைகாலத்தில் இந்த போட்டியை ஐ.நா. மறுவாழ்வு நிவாரண அமைப்புதான் நடத்துகிறது. இந்த போட்டியின் மூலமாவது காஜா நகர் மீது இஸ்ரேல் விதித்துள்ள தடை நீங்குமா என்று பார்க்கிறது. விடைதான் தெரியவில்லை.

'இந்த காற்றாடி மூலம் நான் வாழ நினைக்கிறேன். இந்த காற்றாடியாவது எங்கள் குரலை உலகுக்கு எடுத்துச் சொல்லுமா என்று பார்க்கிறேன். இதன் மூலமாவது தடை நீங்குமா என்று ஏங்குகிறேன்' என்று 13 வயது சிறுவன் காற்றாடியில் எழுதப்பட்ட வாசகமும் காற்றோடு பறப்பதை பார்க்கும் போது நெஞ்சு நெகிழத்தான் செய்கிறது. -சுகன்.

ஏக வாரிசு. எம்.பி.ஏ. படிச்சுட்டு பிஸினசைப் பார்த்துக்கறான். அவனுக்கு..." என்று தயங்கி இழுத்தார்.

ஒருவாரமாய் வருணோடு சுற்றுவதில் மகளுக்கு அவன் மேல் ஒரு ஈர்ப்பு ஏற்பட்டிருப்பதை அவரும், அவர் மனைவியும் உணரவே செய்திருந்தார்கள். ஆனாலும், 'குருவின் மேல் காதல். இது வெறும் நட்பு தான்' என்று ஏதாவது மகள் பிதற்றுவாளோ என்ற பயமும் எழுந்தது. பளிச்சென்று நேரடியாய் விஷயத்திற்கு வந்தார்.

"சுஜா, அப்பா உனக்கு நல்லதைத் தானே செய்வேன்?"

"இதுல என்னப்பா சந்தேகம்?"

"போன வாரம் பூசாரி வீட்ல இருந்ததுக்கும் இந்த வாரம் நீ இங்கே இருப்பதற்கும் வித்தியாசத்தை உணர முடியுதா?"

"இது என்னப்பா கேள்வி?"

"இல்லம்மா... பூசாரி வீட்ல கிணத்துல தண்ணி எடுத்து, கொசுக்கடியில பாயில படுத்து, சமைச்சு, துவைச்சு, கோயில் கழுவி இப்படி நீ ஒரு வாரம் செஞ்ச வேலையை இன்னும் நாலு பேருக்காக சேர்த்து தினப்படி செய்ய வேண்டி வரும், குருவை கல்யாணம் செஞ்சுகிட்டா. உன்னால முடியுமா?... வருணுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. நீ இவனைக் கட்டிக்கிட்டா, தினம் ஒரு கார், மாசம் ஒரு புது ஊர், தொட்டதுக்கெல்லாம் ஆள்னு ராணி மாதிரி வாழலாம். வேலைக்காரியா இருக்கப் போறியா, ராணியா அரசாளப் போறியா? நீ தான் முடிவெடுக்கணும். நீ மட்டும்தான் முடிவெடுக்கணும். அப்பாவுக்கு உன் சந்தோஷம்தான் முக்கியம்."

அவள் அரண்டு போய் நிமிர்ந்து பார்த்தாள்.

"அப்... அப்பா குரு பத்தி... உங்களுக்கு?...."

"எனக்கு எல்லாம் தெரியும்மா. உனக்காக அவனுக்கு நம்ம கம்பெனியில முக்கிய பொறுப்பைக் கொடுக்கலாம். எனக்குப் பிறகு நம்ம பிஸினஸ் வாரிசா அவன் வருவான். ஆனால், நம்ம நிலை இதேபோல் தான் இருக்கும். ராம்கோபால் உயரத்தை என்னால் எட்ட முடியாது.... இங்க மட்டுமில்லை லண்டன்ல, அமெரிக்காலன்னு பெரிய நகரங்களில்இவங்களுக்குபங்களாக்கள்உண்டு. சொந்த படகு, விமானம்னு நாம நினைச்சே பார்க்க முடியாத உயரம் இவங்க. எத்தனையோ பொண்ணுங்க வருணை சுத்தியும், அவனுக்கு என்னவோ உன்னைப் பிடிச்சிருக்கு... நீ என்ன சொல்ற? யோசிக்க டயம் வேணுமா? ரெண்டு நாள் எடுத்துக்க. நாளை மறுநாள் நாம ஊருக்குக் கிளம்பறதுக்குள்ள சொன்னாப் போதும்."

அப்பா சொன்னவற்றை யோசித்தபடி தன் அறைக்கு வந்தாள். ஒரு தராசில் குருவையும் மற்றதில் வருணையும் நிறுத்தினாள்.

குரு குறுகுறு என்ற பார்வையும், பளீர் சிரிப்புமாய் வசீகரிப்பான். ஆனால், நிறம் சற்று மட்டுதான்.

வருணோ அசத்தல் நிறம் மட்டுமல்ல, அந்த சிரிப்பிற்கு உலகையே தரலாம். கம்பீரமாய் கோட் சூட் விளம்பரங்களில் வரும் ஆணழகன் போன்ற பேரழகன்!

குரு படிப்பில் புலி. ஆனால், இன்றைய நிலையில் பி.காம். தான்.

வருணின் பெயரின் பின்னால் அமெரிக்கப் பல்கலைக்கழக பட்டங்கள் நான்கைந்து அணி வகுத்தன.

குரு வேலையில்லாப் பட்டதாரி.

வருண் பெரிய வியாபார சாம்ராஜ்யத்தின் வருங்கால சக்கரவர்த்தி!

குருவின் பின்னால் வறுமையான குடும்ப உறவுகள்.

வருணின் பின்னால் பணக்காரப் பெற்றோர்.

அப்பா கை தூக்கி விட்டால் குரு தன் அருகே வந்து அமர முடியும்.

ஒரு 'ம்' சொன்னால் வருண் பல அடிகள் உயரத்தில் அவளை ஏற்றி தன் அருகே சமமாய் வைத்துக் கொண்டு விடுவான்.

அப்பாவை எதிர்த்துக் கொண்டு குருவை மணந்தால், அவள் முன்பு அவனிடம் கூறியது போல் அவன் வீட்டில் போய் அவளால் வாழ முடியுமா? பகீரென்றது அவளுக்கு. அப்பா சுட்டிக் காட்டியது போல் பூசாரி வீட்டில் வாழ்ந்த வாழ்க்கையை அவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை!

மாறாக குருவுடன் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டு, அப்பா குருவின் செல்வாக்கை உயர்த்தினால், அவன் உறவுகளும் அவனுடனே ஒட்டிக் கொண்டு வந்து விடுமா? தனியே அவர்களை வைத்தாலும், அவர்கள் சவுகரியத்திற்காகவும் பணம் செலவழிக்க வேண்டுமா? தேவையா?

வருணைத் திருமணம் செய்து கொண்டால் இந்தத் தொல்லைகள் எதுவும் கிடையாது!

'இதழ் பிரித்தால்,
பூவுக்குள்
தேனுண்டு!
இதழ்களே
தேனாய் மாறும்
வித்தை
உன்னிடம் தான் உண்டு!'

என்று குருவால் கவிதை தான் எழுத முடிந்திருக்கிறது. நேராய் அந்தத் தேனைப் பருகும் தைரியம் வருணிடம் தானே இருக்கிறது! இது படிப்பும் செல்வமும் கொடுக்கும் தன்னம்பிக்கை அல்லவா! தன் அப்பாவின் தயவில் வாழத் துவங்கினால் குருவிடம் அந்தத் தன்னம்பிக்கை, தன்மானம் அடிபடாதா?

காலை முதல் வேலையாய் அப்பாவிடம் போனாள்.

"அப்பா, வருண்கிட்ட சம்மதம் சொல் லிடுங்க" என்றாள்.

சிவலிங்கம் வெற்றி பெற்ற களிப்பில் மனைவியை நோக்கிச் சிரித்தார்.

ஃ ஃ ஃ



குரு, அண்ணன் ஹரியிடம் வந்து நின்றான்.

"என்னடா?"

''டுடோரியல்ல இப்பதான் டியூஷன் எடுக்க சேர்ந்துருக்கேன். நாளைக்கு ஒரு இன்டர்வ்யூ இருக்கு. பணம் வேணும்."

பர்சை எடுத்துப் பார்த்தான் ஹரி. ஒரே ஒரு நூறு ரூபாய் இருந்தது. அம்மா மளிகை சாமான்கள் வாங்க வேண்டும் என்று பணம் கேட்டிருந்தாள். பணத்தை ஹரியிடம் நீட்டியவன்,

"நூறு ரூபாயை மாத்தி அம்பது ரூபாயை அம்மாகிட்ட கொடு. நீ இருபத்தஞ்சு எடுத்துக்கிட்டு எனக்கு மீதி இருபத்தஞ்சு கொடு" என்றான்.

குருவின் மனதில் சலிப்பு ஏற்பட்டது. இந்த ஒருவாரத்தில் கிட்டத்தட்ட நான்கு நேர்முகத் தேர்வுகளைச் சந்தித்து விட்டான். எல்லாமே மிகச் சாதாரண கணக்கெழுதும் வேலை. ஆனால், அதற்குக் கூட எத்தனை போட்டி. ஒன்றிலும் இவன் தேறவுமில்லை. சிபாரிசுகள், முன் அனுபவம் என்ற ஏதேதோ காரணங்களால் அடிபட்டு போனான்.

"என்னடா, பணத்தைப் பார்த்துக்கிட்டே நிக்கற?"

"இல்லண்ணே, சர்விஸ் கமிஷன் எழுத அப்ளிகேஷன் பார்ம் வாங்கணும். அதுக்குப்... பணம்"

"நாளைக்கு ஏற்பாடு பண்ணித் தரேன்."

"ச...சரி"

மேலும் இரண்டு நாட்கள் இப்படியே ஓடியது. ஒரு நேர்முகத் தேர்வுக்குப் போன போது உடன் படித்த வந்தனா வந்திருந்தாள்.

"ஹாய், குரு. எப்படி இருக்கே? மேலே பி.ஜி. பண்ணலையா?"

"ப்சூ, ஒரு நல்ல வேலை தேடிக்கிட்டா குடும்ப சுமை கொஞ்சம் குறையும். அப்படியே கரஸ்ல எம்.காம். படிச்சுக்கலாம்னு தான் வேலை வேட்டையில இறங்கிட்டேன்."

"நல்லதுதான். ஆமாம், நீயும் சுஜாவும் பிரிஞ்சுட்டீங்களா?"

அவனுக்கு 'நங்' என்று மண்டையில் குட்டியது போல் இருந்தது.

"எ... என்ன சொல்ற வந்தனா? அவ ஜஸ்ட் சுவிஸ் போயிருக்கா. மத்தபடி பிரிவெல்லாம் இல்லை."

அவள் அவனைப் பரிதாபமாய் பார்த்தாள்.

"சுவிஸ்ல அவளுக்கும் வருண்ங்கற பணக்காரப் பையனுக்கும் நிச்சயமாயாச்சு. நேத்துத்தான் சுஜா ஊர் திரும்பி இருக்கா. நம்ம லல்லி அதான் அவளோட பெஸ்ட் பிரண்ட் அவளை நேத்தே போய்ப் பார்த்துட்டு வந்திருக்கா. இந்த மாசக் கடைசியில கல்யாணமாம்! உனக்கு எதுவுமே தெரியாதா? சாரி நான் போட்டு உடைச்சுட்டேன்."

அவனுக்கு கொஞ்ச நேரம் பேச்சே வரவில்லை. பின் மெல்ல "நீ... நீ சொல்றது... இ... இல்லை வந்தனா. லல்லி ஏதாவது தப்பா சொல்லி இருப்பா... சுஜாவும் நானும் எவ்வளவு உயிரா நேசிச்சோம்னு நம்ம காலேஜுக்கே தெரியும்."

"ஐ'ம் சாரி, குரு. இல்லன்னு சொல் லலை. ஆனா, இப்ப உள்ள சூழல் வேற... அவங்க வேற. நாம வேற. பணத்துக்கு சிங்கி அடிச்சாலும், அன்பு பாசம்னு சொல்லி மனசை இழந்து தவிக்கற ஜாதி நாம. ஏழை வர்க்கம்! அவங்களுக்கு எதையுமே பணம் கொடுத்து சுலபமா வாங்கிப் பழக்கம். மனசையும் சுலபமா மாத்திக்க முடியும். அந்த வருணுக்கு சொந்தக் கப்பல் இருக்காம். விமானம் இருக்காம். இதிலெல்லாம் ஒரு பயணியாக் கூட நம்மால போக முடியாது. புரியுதா

வித்தியாசம்?"

"இல்ல வந்தனா. சுஜா அப்படிப்பட்டவ இல்லை. ஏதோ கட்டாயப்படுத்தி நிச்சயதார்த்தம் செஞ்சிருப்பாங்க. நான் அவளை நேரா போய்ப் பார்க்கப் போறேன். வீட்ல சம்மதிக்காட்டி என் கூட வந்து வாழ அவ தயாரா இருக்கா. அவ வீட்டை எதிர்த்து என் வீட்டுக்குக் கூட்டிப்போய், அவளை வாழ வைப்பேன்..." பளிச்சென நேர்முகத் தேர்வையும் மறந்து எழுந்தான்.

அவன் எழுந்த வேகத்தில் ஏற்பட்ட சப்தத்தில் எல்லோரும் ஒரு நொடி அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அவன் கைப்பற்றி அவனை இழுத்து அமர வைத்தாள் வந்தனா. எல்லோரும் பார்த்ததில் ஒரு மாதிரி உணர்ந்தவன், மறுப்பு சொல்லாமல் உட்கார்ந்தான். அவள் மெல்லிய குரலில்,

"குரு, நான் சொல்றதைக் கேளு. லல்லி சுஜா கிட்ட தெளிவா பேசிட்டு வந்து சொன்னா.. நீ இப்ப அவ வீட்டுக்குப் போனா, அவ இருக்க மாட்டா. எல்லோரும் பட்டுப்புடவை எடுக்க காஞ்சிபுரம் போயிருக்காங்க... மனசை மாத்திக்கோ குரு. கஷ்டமாத்தான் இருக்கும். ஆனா, நிதர்சனம் இதுதான், புரியுதா? உனக்கு ஒரு நல்ல வேலையைத் தேடிக்கோ. உனக்கு ஏத்த பொண்ணாப் பார்த்து கல்யாணம் செஞ்சுக்கோ. காலம் எல்லா ரணத்தையும் மாத்தும்... நம்பலைனா போனை ஸ்பீக்கரில் போடறேன்... கேள்" என்றவள் எண்களை அழுத்த, சுஜாவின் குரல் ஆனந்தமாய், "ஹேய், வந்தனா. எனக்குக் கல்யாணம்டி. தெரியுமா?" என்று துள்ளியது, கைபேசியில்.

அவன் அப்படியே பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்தவன் தான்! பின் தெளியவே இல்லை.

ஃ ஃ ஃ




தம்பி ஒரு வேலை தேடிக் கொண்டால் தன் பாரம் குறையும் என்று ஆவலாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஹரிக்கு மேலும் ஒரு பாரமாய் சேர்ந்து கொண்டான் குரு. அவன் சம்பாத்தியம் இல்லாமல் போனதோடு அவனுக்கான வைத்திய செலவும் சேர்ந்து கொண்டதில் ரொம்பவே ஆடிப் போனான். எம்.எம். ஆர். டெஸ்ட் பத்தாயிரம். டிஜிட்டல் ஈ.ஈ.ஜி. ஆயிரம் ரூபாய். கன்சல்டேஷன் இருநூறு ரூபாய். நாலைந்து முறை டாக்டரைப் பார்ப்பதற்கே ஆயிரம் ரூபாய், போக வர ஆட்டோ செலவு என்று அவன் திணறிப் போனது தான் மிச்சம்.

"காதலாம், கத்தரிக்காயாம்! எவளோ பணக்காரி காதலிச்சுக் கழுத்தறுத்தாளாம்... இவன் புத்தி பேதலிச்சுக் கிடக்கான்." அம்மாவால் தன் ஆற்றாமையை மறைத்துக் கொண்டு கத்தத்தான் முடிந்தது.

துளசி தன் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிப் புலம்பிக் கொண்டு தன் தலையெழுத்தை நொந்து அழுதாளே தவிர, அவளால் யாருக்கும் எந்த உபயோகமும்

## ஒலிம்பிக் தேவன்

'சியஸ்' சிற்பம். ஒலிம்பிக் போட்டியுடன் மிக நெருக்கமான தொடர்புடையது. ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கியதே, இந்த சியஸ் தேவனின் திருவிழாவாகத்தான் என்கிறார்கள். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கிய ஒலிம்பியா நகரில்தான் இச்சிலையும் இருந்தது.


கிரேக்கர்களுக்கு இருக்கும் நாட்காட்டி ஒலிம்பிக் உருவானதாகக் கருதப்படும் கி.மு. 776-ல்தான் தொடங்குகிறது. அப்போதிலிருந்தே சியஸ் தேவன் வழிபாடு இருந்திருக்கிறது.

தேவர்களுக்கு எல்லாம் அரசனான தேவேந்திரனைப் போலத்தான் கிரேக்கர்களுக்கும் இந்த 'சியஸ்' தேவன். தேவேந்திரனைப் போலவே சியஸுக்கும் நிறைய மனைவி, குழந்தைகள் என கிரேக்கக் கதை கூறுகிறது.

சியஸ் தேவன் இப்படித்தான் என்று நேரில் யாரும் பார்த்தது கிடையாது என்றாலும் அக்காலத்து நாணயங்களில் பொறிக்கப்பட்ட உருவத்தை வைத்தே சியஸ் தேவன் சிலை ஒலிம்பிக் விளையாட்டுடன் தொடர்புள்ளது என்கிறார்கள்.

கிருஷ்ண அவதாரத்தில் மகாவிஷ்ணு மனித உருவெடுத்து கம்சனை அழித்து அவனது கொடுமையில் இருந்து மக்களை காப்பாற்றினார் என்கிறது, மகாபாரதம். அதேபோல் தனது வழித்தோன்றலாலே தனக்கு அழிவு என்பதை முன்னமே தெரிந்து கொண்ட சியஸின் தந்தை, அடுத்தடுத்து சிசுக்களை விழுங்கி விட, இவரிடம் இருந்து தனது குழந்தைகளை காக்க முடியாமல் தவிக்கும் தாய், கிருஷ்ணனின் தாய் தேவகியைப் போலவே குழந்தை சியஸை இடம் மாற்றி விடுகிறாள்.

ஒரு கட்டத்தில் தந்தையுடன் மல்லுக்கு



நிற்கும் சியஸ், தந்தையின் வயிற்றில் எட்டி உதைக்க, அதுவரை தந்தை விழுங்கி இருந்த அத்தனை குழந்தைகளும் வெளியேறி, சியஸை வாழ்த்துகின்றனர். தந்தை மரணம் அடைகிறார். தங்களுக்கு சாபவிமோசனம் தந்த சியஸை அனைவரும் தங்கள் அரசனாக ஏற்றுக் கொள்ள, அது முதல் சியஸ் தேவன் திருவிழா நடத்தப்படுகிறது.

இப்படி உருவானதுதான் சியஸ் தேவன் சிலை என்கிறார்கள். தேவர்களுக்கெல்லாம் அரசன் என்பதால் கம்பீரமான சிம்மாசனம் ஒன்றை உருவாக்கி அதன்மீது அமர்ந்திருப்பது போல சிலை உருவாக்கப்பட்டு, அதன் வலதுகையில் கிரேக்க வெற்றி தேவதையான 'நைக்'கின் வெற்றிச் சின்னமும் பொறிக்கப்பட்டது.

இதுவே பின்னாளில் ஒலிம்பிக் போட்டியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டது.

-ராதா.

இல்லை. பாத்திரம் தேய்த்தாள், துணி துவைத்தாள், அம்மாவுக்கு சமையலில் உதவினாள். மற்ற நேரம் புலம்பித் தீர்த்தாள். அவ்வளவுதான்.

ஹரி கார்மெண்ட்ஸ் வேலை, டியூஷன் எடுப்பது, கணக்கு எழுதுவது என்று ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் உழைக்கும் மிஷினாய் மாறிப் போயிருந்தான். இதில் யாராலும் குருவைத் தனிப்பட கவனிக்க முடியாமலே போனது. ஆரம்பத்தில் கூட துளசி குருவை நாலைந்து முறை கவுன்சிலிங்கிற்கு அழைத்துப் போனாள்.

"இது கொஞ்சம் பொறுமையா கையாள வேண்டிய விஷயம்மா. தலைவலியா? இந்தா மாத்திரை போட்டுக்கோ, ஜுரமா? இதைச் சாப்பிடுனு உடல் பாதைகளுக்கு சட்னு மாத்திரை கொடுப்பது மாதிரி, மனம் சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கையாள முடியாது. நிதானமா, பல சிட்டிங்குகள் இவரை நீங்க அழைச்சுக்கிட்டு வரவேண்டி வரும். பேசிப் பேசித்தான் இவரை வழிக்குக் கொண்டு வர முடியும். ஷாக் ஆகி ஸ்தம்பிச்சுப் போயிருக்காரு. பொறுமையா கையாண்டா குணப்படுத்திடலாம். ஆனா, டயமெடுக்கும்... அடுத்த வாரம் அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கிக்கிட்டு திரும்ப வாங்க" என்று சொன்ன டாக்டரைப் பார்த்து திரு திரு என விழித்தாள் துளசி.

பின் மெல்ல "சரி... டாக்டர்" என்று கூறி விட்டு அவனை அழைத்துக் கொண்டு வீடு திரும்பியவள் தான், அம்மாவிடம் புலம்பித் தீர்த்தாள்.

"இது ஒத்து வரும்னு தோணலைம்மா. நாலைஞ்சு தடவை அந்த டாக்டரைப் பார்த்தாச்சு. ஒவ்வொரு தடவையும் டாக்டர் பீஸ், மாத்திரை, ஆட்டோனு செலவு ஆயிரம் ரூபாய் கிட்ட வந்துடுது. இனியும் பல தடவை வரணும், குணமாக நாளாகும்னு தான் டாக்டர் சொல்றாரு. ஹரியும் தான் எத்தனை செலவழிப்பான்."

அம்மாவுக்கும் மகள் சொல்வது நியாய மாகவேப் பட்டது.

"இவன் தலையெழுத்து இப்படி ஆகணும்னு எழுதியிருந்தா யார் என்ன செய்ய முடியும்? ஏதோ டிகிரி முடிச்சுட்டான். இருக்கற அறிவுக்கு ஒரு அரசு தேர்வு, வங்கி தேர்வுனு எழுதி கைநிறைய சம்பாதிக்க ஆரம்பிச்சுடுவான். ஹரியோட பாரம் குறைஞ்சு நாம நிம்மதியா இருக்கலாம்னு நினைச்சேன். என் தலையெழுத்து. இப்படி எவ பின்னாடியோ சுத்தி சீரழிஞ்சு நிக்கறானே! இவன் விதிப்படி ஆகட்டும். வேற என்ன சொல்ல?"

இந்த விரக்தியில், ஹரி எத்தனை சொல்லியும் கேட்காமல், குரு கவுன்சிலிங் போவது நின்றே போனது. மருத்துவர்கள் கொடுத்த மாத்திரை தயவோ என்னவோ, மெல்ல குளிப்பது, சாப்பிடுவது என்பதை மட்டும், தானே செய்யத் துவங்கியிருந்தான் குரு. மற்றபடி, ஜடம் போல் எப்போதும் பாயில் சுருண்டு கிடப்பான் அவன். பார்வை வெறித்து சூனியத்தை வெறிக்கும். பெற்றவளும் உடன்

பிறந்தவர்களும் அவனைப் பார்த்துப் பார்த்து கலங்கித்தான் போனார்கள். வேறு என்ன செய்ய முடியும்?

வாழாவெட்டியாய் அக்கா, காதலால் மூளை ஸ்தம்பித்த தம்பி, இந்தச் சூழலில் ஹரிக்கு ஒரு திருமணம் செய்ய வேண்டும் என்று அம்மாவுக்கு எப்படித் தோன்றும்? இல்லை, ஹரிக்குத்தான் கல்யாணம் பற்றி நினைக்க முடியுமா? அப்படியும்... காதலில் விழுந்தான்.

குடும்பச் சூழலும், பொறுப்பும் உணர்ந்த ஹரியையே ஒரு அசைப்பு அசைத்து விட்டது என்றால், இந்தக் காதல் பொல்லாதது தானே!

ஃ ஃ ஃ

## 10

**ந**ண்பனிடம் நூறு ரூபாய் கடன் வாங்கிக் கொண்டு வனிதாவிற் காக அந்த உணவகத்தில் காத்திருந்தான், ஹரி. காலையில் தான் வனிதா "வீட்ல நிலவரம் என்ன?" என்று கேட்டிருந்தாள்.

என்னவென்று சொல்வான்? ஒன்றும் பிரமாத முன்னேற்றம் இல்லை என்று எப்படிச் சொல்லப் போகிறான்?

கிட்டத்தட்ட ஆறு வருடங்களாய்க் காதலிக்கிறார்கள்.

வனிதா அப்போது தான் வங்கியில் புது ஊழியராய் வேலைக்குச் சேர்ந்திருந்த சமயம். வீட்டு பாரம் முழுதும் தோளில் அழுத்த போதாக்குறைக்கு குரு காதல் தோல்வியில் பித்துப் பிடித்தது போல் ஆன சமயம் தான் அவளை சந்தித்தான் ஹரி.

வழக்கமாய் அலுவலக விஷயமாய் வங்கிக்குப் போகும் அக்கவுண்டன்டின் அஸிஸ்டென்ட் அன்று விடுப்பு என்பதால், இவன் சென்றான்.

தன் முதலாளி கொடுத்திருந்த செக்கை என்கேஷ் செய்ய இவன் சொல்ல, வேலைக்குப் புதிதான அவள் அதை டெபாசிட் செக்குகளுக்கான பெட்டியில் போட்டு விட, ஏக களேபரமானது. மேனேஜர் வரை விஷயம் போய், பெட்டி திறந்து இவன் செக்கை எடுத்து கேஷ் கொடுத்து இவளுக்குக் கொஞ்சம் மண்டகப்படியும் கிடைத்தது.

கண் கலங்கி நின்ற அவள் பரிதாபமுகம் அவன் கோபத்தை விரட்டி விட, விஷயத்தைப் பெரிதுபடுத்தி விட்டோமோ என்று கூட தோன்றியது.

இரண்டு நாட்கள் ஓடி அவன் அவளை மறந்தே விட்ட ஒரு நாள். ஓடி வந்து நெரிசலான பஸ்ஸில் தொற்றி கஷ்டப்பட்டு மேலே வந்து 'அப்பாடா' என்று நின்று பெருமூச்சு விட்டபோது, "சார் நீங்களா? நீங்க போய் பஸ்ல வந்து..." என்ற குரல் கேட்க, முதலில் யாரோ யாரிடமோ பேசுகிறார்கள் என்று தான் நினைத்தான். அலட்சியமாய்த் திரும்பிய போது தான் அவளைப் பார்த்தான். தன்னிடம் தான் பேசுகிறாள் என்பதையும் உணர்ந்தான்.

அவள் கேட்டது புரியாமல், "ஏன் பஸ்ல நான் வர்றதில் என்ன இருக்கு? தினம் இந்த பஸ் தான்..." என்றான்.

"நீங்க எதுக்கு சார் பஸ்ல வரணும். ஒரு கார் இல்லாட்டி இன்னொன்னு..."

அவள் தன்னை கேலி செய்கிறாளோ என்று ஆழமாய்ப் பார்த்தான். வீட்டுச் சூழலால் சிரிக்கவே மறந்து எப்போதும் சிடுசிடு என இருப்பவன் இப்போது மேலும் கடுப்பானான்.

"என்னங்க பேசறீங்க?" என்றான் எரிச்சலாய்.

"பேங்க்ல உங்க செக் விஷயத்துல தப்பு செஞ்ச போது, மேனேஜரே ஓடி வந்தாரே... 'வேல்யுபிள் கஸ்டமர்'னு பேசிக்கிட்டாங் களே! அதான், அவ்வளவு பணக்காரர் இப்படி சிம்பிளா பஸ்ல வர்றீங்களேனு..."

பேருந்தில் கும்பல் சூழ இருப்பதை மறந்து அவன் பகபக என சிரித்து விட்டான். அவள் புரியாமல் பார்த்தபடி விழித்தாள்.

"லட்ச ரூபாய் ஒரே செக்ல வித்டிரா பண்ணினதால என்னை பெரிய ஆளுனு நினைச்சுட்டீங்களா? என் கம்பெனிக்காக முதலாளியோட பணத்தை எடுத்தேன். மத்தபடி நான் இந்த பஸ்ல போய் வர்ற சாதா ஆளு."

அவள் முகத்தில் அசடு வழிந்தது.

அதன்பின் அந்த வழியே போகும் போதும் வரும் போதும் இருவரும் அடிக்கடி சந்தித்தார்கள். மாதம் பத்து தேதிக்கு மேல் சிங்கி அடிக்கும் தன்னை குபேரனாய் நினைத்து அவள் அசடு வழிந்ததை நினைத்து நினைத்து அவன் சிரித்தான். அதன் தொடர்பாய் அவளைப் பார்க்கும் போதெல்லாம் தன்னை அறியாமல் பிரகாசமாய் சிரித்தான்.

சிடுமூஞ்சி என்று பெயரெடுத்திருந்தவன், சிரிப்பு என்பதையே மறந்திருந்தவன்,

அவளுடன் பேசும் போதெல்லாம் தன்னை மறந்து சிரித்தான். அவனுக்கு அந்த மாற்றம் பிடித்திருந்தது. வருத்தமும் அழுகையும் சோகமுமாய் டி.வி. சீரியல் குடும்ப மாய் இருக்கும் தன் வீட்டுச் சூழலிலிருந்து மாறுபட்டிருந்தது அவளுடன் பழகும் சூழல். அந்த மாற்றம் அவனுக்குத் தேவையாய் இருந்தது.

"எப்படி எப்பவும் இப்படி சிரிச்சுக்கிட்டே இருக்கிங்க? சிரிக்கச் சிரிக்கப் பேசறீங்க?" வியப்பாய் அவளிடம் கேட்டான்.

"ஏன்? இதுதான் என் இயல்பு. சிரிக்கப் பேசறது பெரிய சாதனையா என்ன?"

அவனைப் பொருத்தவரை அது பெரிய பிரயத்தனம் தான். அவள் குடும்பச்சூழல் அதற்கு ஏற்ப வசதியாய் இருக்கும் போல் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டான்.

"வாழறது ஒரு முறை ஹரி. அதில் ஒவ்வொரு நிமிஷத்தையும் அனுபவிச்சு வாழ்ந்துட்டுப் போயிடுவோமே..."

அவள் சொல்லும் போது கேட்க நன்றாகத் தான் இருந்தது. வேலைக்குப் பிறகு கணக்கு எழுதும் வேலை. பின் டியூஷன். அதற்குப் பிறகு வீட்டு நிலைமை பற்றி அம்மா அல்லது துளசியின் புலம்பல். இதில் எதை அவன் அனுபவிப்பது? ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வாழ்பவர்கள் வேறு ஜாதி. பணக்கார ஜாதி. தன்னைப் போன்ற பணப் பற்றாக்குறையில் பஞ்சப்பாட்டு பாடும் கும்பல் மகிழ்ச்சியாய் அனுபவிக்க முடியாது என்று நினைத்துக் கொண்டான்.

"நாமும் சந்தோஷமா இருந்து மத்தவங் களையும் சந்தோஷமா வெச்சுக்கறதே பெரிய விஷயம் தெரியுமா?" என்றாள் அவன் மன ஓட்டம் புரியாமல்.

உண்மைதான். சந்தர்ப்ப சூழல் இருப்பவர்களுக்கு அதற்கான மனமும் இருப்பது பெரிய விஷயம் தான் என்று நினைத்துக் கொண்டான்.

ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ

ஒரு நாள் திடீரென்று, "நாளைக்கு சாயந்திரம் என் வீட்டுக்கு வர முடியுமா?" என்றாள்.

"ஏன், என்ன விஷயம்?"

"வாங்களேன். எங்க வீட்ல டின்னர் சாப்பிடலாம்" என்றாள்.

அவனுக்குத் தயக்கமாய் இருந்தது. ஆனாலும், வழக்கமான மிஷின் வாழ்வில் எங்கும் போகாமல் உழலும் மனம் இந்த மாறுதலை ஏற்கக் கெஞ்சியது.

"சரி" என்றான் கடைசியில் ஒரு வழியாய்.

ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ

மறுநாள் மாலை டியூஷனுக்கும் கணக்கு வேலைக்கும் விடுப்பு சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான். இருப்பதிலேயே சற்று சுமாரான நல்ல சட்டையை போட்டுக் கொண்டான். தலையை வரட், வரட் என்று மூன்று நான்கு முறை வாரிக் கொண்டான்.

என்றும் இல்லாத அளவில் இன்று மகன் செய்து கொள்ளும் அலங்காரம் கண்களை உறுத்த, "எங்கடா கிளம்பிட்ட?" என்றார் அம்மா.

"பிரெண்ட் வீட்ல சின்ன விருந் தும்மா" என்றவன் அதற்கு மேல் நின்று கேள்விக்கணையில் சிக்காமல், கிளம்பி விட்டான்.

இனிப்புக் கடையில் ரொம்ப மண்டையை உடைத்துக் கொண்டு, கால் கிலோ முப்பது ரூபாயைத் தாண்டாத இனிப்பாய்த் தேர்ந்தெடுத்து வாங்கிக் கொண்டான்.

அவள் உற்சாகமாய்ப் பேசிய விதத்திலிருந்து சற்று உயர்நிலை நடுத்தர வர்க்கம் என்று நினைத்திருந்தான். அவளுக்கு ஒரு அண்ணன். சொந்தமாய் கடை வைத்திருக்கிறார் என்று மட்டும் தெரியும். வயதான பெற்றோர் உண்டு.

ஆனால், அவள் வீடு அவன் நினைத்தது போல் மிகப் பெரிதாய் இல்லை. அவன் வீட்டைப் போல் ஒண்டுக்குடித்தனமாய் இல்லாமல் ஒரளவு பிரமாதமாய் இருக்கும் என்று நினைத்திருந்தான். ஆனால் சிங்கிள் பெட்ரூம் பிளாட்தான். இருந்தும் சின்ன இடம் நேர்த்தியாய் பராமரிக்கப்படுவது புரிந்தது.

"வாங்க தம்பி. வனி சொல்லிச்சு, நீங்க வருவீங்கனு" வாய் நிறைய சிரித்தபடி வரவேற்றார் அவள் அப்பா, நாராயணன்.

உள்ளே சமையலறையிலிருந்து கமகம வாசம் முதலில் வர பின்னாலேயே சிரித்த முகமாய் வனிதாவும் வந்தாள்.

"வாங்க, உட்காருங்க" என்றாள்.

அவன் இனிப்புப் பொட்டலத்தை நீட்டினான், சற்று கூச்சத்துடனேயே. அவள் இயல்பாய் பெற்றுக் கொண்டாள்.

"இதுதான் அப்பா. அம்மா உள்ளே இருக்காங்க. வாங்க பார்க்கலாம்."

அவன் அவளைத் தொடர்ந்து உள்ளே போனான். அவள் அம்மா ஏதோ வேலையாய்

உள்ளே இருப்பார் என்றுதான் நினைத்தான். ஆனால், அவர் படுத்த படுக்கையாய் இருந்தார்.

“பெராலிஸிஸ். ரெண்டு வருஷமா அம்மா இப்படித்தான் இருக்காங்க...” என்றபடி அம்மாவிடம் குனிந்து மெல்ல இவனை அறிமுகப்படுத்தினாள். புரிந்து கொண்டது போல் அவர் கண்கள் மட்டும் அசைந்தன. வாய் சிரிப்பது என்று காட்ட கோணியது.

“அம்மா, இவரை சாப்பிட கூப்பிட்டிருந்தேன். போய் சாப்பாடு போட்டுட்டு வரட்டா?” என்றாள். அதற்கும் கண்கள் அசைந்தன.

“வாங்க...” என்று அவனை அழைத்துக் கொண்டு வெளி ஹாலுக்கு வந்தாள்.

“அப்பா சாப்பிட வாங்க” என்றழைத்தவள் இருவருக்கும் பரிமாறத் துவங்கினாள்.

“உங்க... அண்ணன்?...” அவன் தயக்கமாய் இழுத்தான்.

“அண்ணனும் அண்ணியும் கடையை மூடிட்டு வர ராத்திரி பத்து மணி ஆயிடும்.”

சமையல், வடை பாயசத்தோடு எளிமை யான விருந்தாய் இருந்தது. சுவையாய் இருந்தது. கோஸ் பொரியல், கேரட் துருவலில் கொத்தமல்லி தூவி எலுமிச்சை பிழிந்து ஒரு சாலட், முள்ளங்கி சாம்பார், மிளகு ரசம்.

“சமையல் பிரமாதம், வனிதா” என்றான்.

“என் மக, மருமக ரெண்டு பேருமே நல்ல கைமணத்தோட சமைப்பாங்க. எளிமையா ஆரோக்கியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்வாங்க” என்ற நாராயணன், “ரெண்டு பொரியல் இல்லாம சமைக்க மாட்டாங்க. ரொம்ப எண்ணெய் சேர்க்க மாட்டாங்க. என்ன, இன்னைக்கு வனி பிறந்த நாள். நீங்க வந்திருக்கீங்க. அந்த ரெண்டு காரணத்தினால், வடை...” தன் போக்கில் பேசிக் கொண்டு போனார்.

“என்னங்க? உங்க பிறந்தநாளா? சொல்லவே இல்லையே!” என்றான் ஆதங்கக் குரலில்.

அவள் மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

“இப்படி வெறும் கையோட வந்திருக்க மாட்டேனில்ல.”

“அதான் ஸ்வீட் வாங்கி வந்திருக்கீங்களே. அதை விடவா?”

“இருந்தாலும்...” அவன் தர்மசங்கடத்தைப் பார்த்துச் சிரித்தவள், “எதுக்கு இப்படி கவலைப்படறீங்க? உங்க வருகையே பெரிய





பரிசா நான் பார்க்கிறேன்."

சொன்னவள் அவனை ஆழமாய்ப் பார்த்தாள். அந்தப் பார்வை வீச்சின் அர்த்தம் ஏதேதோ சொல்ல, அவன் தன் பார்வையை விலக்கிக் கொண்டான். இந்தப் பெண் மனதில் ஏதோ ஆசையை வளர்த்துக் கொண்டிருக்கிறாளா? தன்னிடம் கூட ஒருத்திக்குக் காதலா? சேச்சே, இருக்க முடியாது. தான் பரிசு வாங்கி வரவில்லை என்ற குற்றஉணர்வை தவிர்க்க ஏதோ ஆறுதலாய் பேசியிருக்கிறாள். அவ்வளவு தான்.

அவன் கிளம்பும் போது, அவள் அண்ணனும் அண்ணியும் வந்தார்கள். அண்ணனின் கையில் கைத்தடி. இவன் கைநீட்டிய போது தடுமாறியதில் தான் அவருக்குப் பார்வை இல்லாததே புரிந்தது. இயல்பாய் வீட்டிற்குள் நடமாடினார்.

"என் பேர் கோபி. வனியோட அண்ணா. இது கீதா. என் மனைவி... நீங்க வந்ததில் ரொம்ப சந்தோஷம். வனி உங்களைப் பத்தி நிறைய சொல்லி இருக்கா." இவன் இருக்கும் திசையை குத்து மதிப்பாய் கணித்து கையை நீட்டினார் அவர். அவன் அவர் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

"உங்களைப் பத்தியும் வனிதா சொல்லி இருக்காங்க. கடை கூட வச்சிருக்கீங்கனு..." என்று இழுத்தான்.

"ஆமாம், பி.எஸ்சி. படிச்சேன். அரசாங்க சலுகையில் ஒரு எஸ்.டி.டி. பூத் ஆரம்பிச் சேன்... முதல்ல எல்லோரையும் போல வேலை தேடித்தான் அலைஞ்சேன். ஆனா, என் தங்கை தான் இந்த ஐடியாவை சொன்னா. பிஸினஸ் நல்லா போக ஆரம்பிச்சுது. எனக்கு நானே ராஜா. கீதா என் தங்கையோட தோழிதான். ரொம்ப சேவை மனப்பான்மை உள்ளவங்க. காலேஜ்ல எனக்காக ஸ்ஞ்ரைப்பா, அதாவது நான் சொல்லச் சொல்ல எனக்காக பரீட்சை எழுதி இருக்காங்க... ரெண்டு பேர் கிட்டயும் பேசி, எங்க கல்யாணத்துக்கும் காரணமா இருந்ததும் என் தங்கை தான். கீதாவுக்கு டி.டி.பி. எல்லாம் தெரிஞ்சதால, சின்ன எஸ்.டி.டி. பூத்தா இருந்ததை விரிவு படுத்தி, இப்ப நாலு கம்ப்யூட்டர், ஜெராக்ஸ் மிஷின் எல்லாம் வாங்கிப் போட்டு நாலஞ்சு பேரை வேலைக்கும் வெச்சு கொஞ்சம் விஸ்தரிச்சுட்டோம். தங்கையும் வங்கி வேலைக்குப் போய், என் வியாபாரமும் இப்ப நல்லா நடக்குது. அம்மாவுக்கு நல்லா வைத்தியம் செய்ய முடியுது. அதைத் தவிர, கொஞ்சம் சிக்கனமாவே இருந்து பணம் சேர்க்கறேன் தங்கை கல்யாணத்துக்கு. ஒரு நல்லவர் கையில் அவளை ஒப்படைச்சுட்டா பெரிய பொறுப்பு முடிஞ்சுடும்." அவரிடம் நம்பிக்கை ஒளிர்ந்ததை அவனால் உணர முடிந்தது.

அண்ணன் சின்ன உரையாய் தன்னைப் பற்றி சொல்லி முடிக்க, கடைசி வரிகளில் சற்று நாணத்தோடு தலைகுனிந்த வனிதா நிமிர்ந்த போது பார்த்த பார்வையில் அவனுக்கு ஆயிரம் செய்திகள் இருந்தன.

வீடு திரும்பும் போதும் பிரமிப்பாய் அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டு வந்தான். ஏதோ துளிக் கூடப் பிரச்சினையே இல்லாதவள் போல் தானே அவள் நடந்து கொண்ட விதம் இதுவரை இருந்துள்ளது. ஆனால், அவள் பின்னாலும் எத்தனை சோகங்கள்!

தனியாரில் அதிக சம்பளம் இல்லாமல் குமாஸ்தாவாய் இருந்து ரிடையரான அப்பா. கண் தெரியாத அண்ணன். பக்கவாதத்தில் படுத்து விட்ட அம்மா... தன்னை விட சற்றே சற்று உயர்ந்த பொருளாதாரம். அவ்வளவு தான். அதுவும் அவள் அண்ணன் சொல்வது போல் இப்போது தான் அவளும் வங்கி வேலையில் சேர்ந்து அவர் வியாபாரமும் உயரத் துவங்கிய பின் தான் இந்த வசதிகள் கூட வந்திருக்கும்!

"என் தங்கை தான் சார் இந்த வீட்டோட நம்பிக்கை நட்சத்திரம். எந்த மோசமான சூழல்லயும் ஒரு வெளிச்சப் பகுதியைக் கண்டு பிடிச்சு, எல்லோரையும் உற்சாகப்படுத்தி சாதிச்சுடுவா!"

எவ்வளவு பெருமையாய் அவள் அண்ணன் அவளைப் பற்றிப் பேசினார்! உண்மைதானே. சாதா தலைவலிக்கே வீடு இருண்டு போகும் பல இடங்களில். ஆனால், நோயாளியும் உடல் ஊனமுற்றவருமான வீட்டு உறுப்பினர்களை எப்படி கவனிக்கிறாள். படுத்திருக்கும் அம்மாவிடமும் எல்லா வீட்டு விஷயங் களையும் பேசி, டி.வி.யில் வரும் சின்ன அசைவையும் அண்ணனுக்கு விளக்கி, சிரிப்பும் கும்மாளமுமாய் பேசி வீட்டுச் சூழலை கலகலப்பாய் வைத்துக் கொண்டு, சில அற்புத பிறவிகள் நம்மோடு சாதாரண மாய் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்!

இந்தப் பெண்ணைக் கைப்பிடிப்பவன் நிச்சயம் கொடுத்து வைத்தவன். கைப்

பிடிப்பவன்?.... யார்? யார் அந்த அதிர்ஷ்டசாலி?

அவள் திருமணப் பேச்சை அவள் அண்ணன் எடுத்தவுடன் தன்னை ஒரு பார்வை பார்த்தாளே, அதற்கு என்ன பொருள்? தன்னை மட்டும் பிறந்த நாளுக்கு ஏன் அழைத்தாள்?

அவனை பல புதிர்கள் சூழ்ந்தன.

சீக்கிரமே இந்த வினாக்களுக்கு விடை கிடைத்தது.

ஃஃஃ

**வா**ழ்க்கை சிலருக்கு மட்டுமே வரமாய் இருக்க, பலரை சோதித்து ஒரு வழி பண்ணி விடுகிறது என்றுதான் வனிதாவை சந்திக்கும் வரை ஹரி நினைத்திருந்தான். ஆனால், எல்லோருக்குமே ஏதோ வரமும் சோகமும் சோதனையும் வாழ்வில் இருக்கத்தான் செய்கிறது. அதை எதிர்கொள்ளும் பக்குவம் தான் மாறுபடுகிறது என்பதை அவள் தான் அவனுக்கு உணர்த்தினாள்.

அவள் வீட்டிற்குச் சென்று வந்தது முதல் அவன் தன் போக்கிலும் சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டான். கடனே என்று செய்த வேலைகளை ரசனையோடு செய்யத் துவங்கினான். டியூஷன் எடுக்கும் போதும் சிடுசிடுக்காமல் சற்று நகைச்சுவையோடு தவறுகளைச் சுட்டிக் காட்டத் துவங்கினான். வீட்டிலும் அம்மா அக்காவிடம் கடுகடு என்று பேசிய விதத்தை மாற்றி பொறுமையைக் கையாளத்துவங்கினான். அக்கா குழந்தைகளை பூங்கா, பீச் என்று அழைத்துப் போவதை கடமையாய் செய்யாமல் அனுபவித்துச் செய்யத் துவங்கினான்.

அவனுள் வந்த மாற்றம் அவனைச் சுற்றியும் பிரதிபலிக்கத் துவங்கியது. வேலை செய்யும் இடத்தில் இயந்திரம் போல் இயங்கியவன் இணக்கமாய் மாறியதில் சில நல்ல நட்பு கூட கிடைத்தது. நன்றாக கற்பித்தாலும், கடுகடு என்று ஹரி இருந்ததால், இதுவரை அவன் வந்தாலே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்ட மாணவன் இப்போதெல்லாம் அவன் வரவிற்காக ஆவலாய் எதிர்பார்க்கத் துவங்கினான். வீடும் தீவிர முகம் களைந்து சற்று இளகியது.

நீ பார்க்கும் கண்ணோட்டத்தில் தான் உலகம் உன்னைப் பார்க்கிறது என்பதை அவன் நன்றாகவே புரிந்து கொண்டான். நீ சிடுசிடுத்தால், அதுவும் தொற்று நோய் போல் உன்னைச் சுற்றிப் பரவுகிறது. நீ கலகலவென்று இருந்தால் அதுவும் கலகலப்பாக மாறுகிறது. சிடுசிடுப்பதை விட கலகலப்பு சூழலை இதமாக்குகிறது. அவன் மாற்றம் பொருளாதார ரீதியில் ஏற்றம் தரா விட்டாலும், மூச்சு முட்டும் சூழல் மாறி காற்றோட்டமாகியது.

அவளை சந்தித்த போது மறக்காமல் இந்த மாற்றம் பற்றி சொன்னான்.

"எந்த சூழலையும் பாஸிடிவ்வா பார்க்க உங்ககிட்டயிருந்து கத்துக்கிட்டேன். இறுக்கம் குறைஞ்சு இலகுவாய்ப் பழகக் கத்துக்கிட்டேன். வாழ்க்கை பூரா உங்க நட்பை நான் பொக்கிஷமா பாதுகாக்கணும், வனிதா..."

அவன் உணர்ச்சி வசப்பட்டுப் பேச, அவள் அமைதியாய், "நான் உங்களையே எனக்கு கிடைச்ச பொக்கிஷமாப் பார்க்கறேன், ஹரி" என்றாள்.

இதை சற்றும் எதிர்பார்க்காதவன், ஒரு நொடி பேச்சற்றுப் போனான்.

"என்ன இருக்கிறது என்னிடம்?"

"என்ன இல்லை, ஹரி? பண்பு இல்லையா, நல்ல குணம் இல்லையா? அலுக்காம உழைக்கறீங்க. குடும்பத்துக்காக அவ்வளவு அக்கறைப்படறீங்க. ஒரு கெட்ட பழக்கம் கிடையாது... படிப்பிலும் சுட்டிதானே..."

"போதும் போதும், வனிதா" அவன் கூச்சத்தில் நெளிந்தான்.

"ஹரி, உண்மையைத் தான் சொல் றேன். இந்தக் காலத்தில் பணக்காரன் கணவனா கிடைச்சுடலாம். படிச்ச மேதாவி கிடைச்சுடலாம். ஆனால், ஒரு நல்லவன் கணவனாக் கிடைப்பது தான் கஷ்டம், ஹரி" என்றவள் சின்ன இடைவெளி விட்டு மெல்லிய நாணம் இழையோட, "அதனால தான், எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சுப் போச்சு... உங்க மனசுல எனக்கு ஒரு இடம் கிடைக்குமா?" தன் மனதை இதுதான் சாக்கு என்று கொட்டிவிட்டாள்.

அவன் உடனே பதில் பேசவில்லை. அவனுக்குப் பேச்சு வரவில்லை. தன்னை ஒருத்தி நேசிப்பதில் ஆச்சர்யம் கலந்த அதிர்ச்சி.

"ஹரி..." அவளே மெல்ல அழைத்தாள்.

"வனிதா, எனக்கு என்ன பேசறதுனு

தெரியலை. உங்க நட்பு கிடைச்சதே பெரிய விஷயம்னு நான் நினைச்சுக்கிட்டிருக்கேன். என்னைப் போய்..."

"ஹரி, உங்களுக்கு என்ன குறை?"

"என் குடும்பம் இருக்கும் சூழலில் நான் காதல், கல்யாணம் பத்தி எல்லாம் நினைச்சே பார்க்க முடியாது... வனிதா."

"அதுக்காக இப்படியே பிரம்மச்சாரியா இருந்துடப் போறீங்களா? பிரச்சினையே இல்லாதவன் தான் கல்யாணம் செஞ்சுக் கணும்னா, இந்தியா முழுசும் பிரம்மச் சாரிகளால் தான் நிறைஞ்சு இருக்கும். அடுத்தவேளை சாப்பாட்டுக்கு இல்லாதவன் கூட, கல்யாணம் செஞ்சுகிட்டு குடும்பம் நடத்தறான்."

"ஆனா... என் அக்கா, தம்பி நிலைமை..."

"இப்படியே இருந்துடப் போகுதா? தம்பி இன்னும் ரெண்டு மூணு வருஷத்துல குணமாயிடலாம். அக்கா வாழ்வில் திருப்பம் வராமலா போகப் போகுது. உங்ககிட்ட வசதிகளை நான் எதிர்பார்க்கலை. அன்பைத் தான் எதிர்பார்க்கறேன். பதிலுக்கு நானும் உங்க குடும்பத்தின் மேல் பாசத்தைப் பொழிய முடியும். ரெண்டுபேருக்கும் இடையே நல்ல புரிதல் இருக்கும்போது என்ன பிரச்சினை வரப்போகுது? என் குடும்பத்துக்கும் உங்ககிட்டயிருந்து அன்பு கிடைக்கும். வேற என்ன வேணும்?"

அவள் பேசப் பேச அவன் ஆசை மனம் மெல்ல மொட்டவிழ்ந்து மலரத் துவங்கியது. அவனும் மனிதன் தானே!

"உங்களுக்கு என்னைப் பிடிக்கலைனு சொல்லுங்க... உங்க வாழ்விலிருந்து நான் ஒதுங்கிடறேன். ஆனா, உப்புச்சப்பு இல்லாத காரணங்களைச் சொல்லி என்னை தவிர்க்கப் பார்க்காதீங்க. உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா, சொல்லுங்க?"

அவளை நிமிர்ந்து ஆழமாய்ப் பார்த்தான். இறைஞ்சும் அந்த வெள்ளந்தி விழிகள், மலர்ந்து சிரிக்கும் அந்த செவ்விதழ்கள்... பொதுவாய் கண்களும் உதடுகளும் சிரிக்கும். மூக்கின் நுனி கூட சிரிக்குமா என்ன? பார்வையை அவளிடமிருந்து நகர்த்தியவன் வேறு எங்கோ வெறித்தபடி சொன்னான்.

"உங்களை யாருக்காவது பிடிக்காமப் போகுமா?"

"நேரடியான பதில் வேணும். உங்களுக்கு என்னை பிடிக்குமா, பிடிக்காதா?"

"பிடிக்கும்."

"அப்புறம் என்ன?" அவள் முகம் மலர்ந்தது.

"உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும், வனிதா. அதனாலதான், என்னை விட உசத்தியான இடத்தில் உங்களுக்கு வசதியான வாழ்க்கை அமையணும்னு ஆசைப்படறேன்." அவன் கம்மிய குரலில் மனமார சொன்னான்.

அவள் கண்கள் பனித்து விட்டன.

"இந்த குணத்துக்காகத்தான் ஹரி உங்களை ரொம்ப நேசிக்கிறேன். தாயுமாகி நிக்கற ஆண்கள் எண்ணிக்கை ரொம்ப கம்மி. வசதியை எப்ப வேணும்னாலும் சம்பாதிச்சுக்கலாம். ஆனா, உங்களை மாதிரி ஒரு நல்லவரை அடையறதுதான் கஷ்டம்."

அவள் பிடிவாதமாய் நின்றாள். அந்த அன்பில் அவன் வைராக்கியமும் கரைந்தது. அம்மாவையும் இவள் தன் அன்பால் மாற்றி விடுவாள் என்று தான் எண்ணினான்.

ஆனால் எங்கே? ஐந்து வருடங்களாய் முயன்று கொண்டுதான் இருக்கிறார்கள்...

ஃ ஃ ஃ




வனிதாவின் வீடு இவர்கள் காதலை புரிந்து கொண்டது. வரவேற்றது.

"எங்க பொண்ணுக்கு ஒரு நல்ல பையன் கிடைக்கணும்னு நினைச் சோம் தம்பி. அது நிறைவேறிடுச்சு. ஐயோ, இனிமே தம்பினு எல்லாம் சொல்லக் கூடாது

இந்த படத்தில் உள்ளதுதான் உலகிலேயே மிக விலை உயர்ந்த குளியல் தொட்டி. இதன் விலையினால் பிரமாண்டமான ஒரு மாளிகையையே கட்டலாம். செல்வந்தர்களுக் கென்றே இந்த தொட்டியை பிரேசில் நாட்டின் அமேசான் பிரதேசத்தில் கிடைக்கும் பிரத்யேக வெள்ளை நிற ஸ்படிக கல்லினால் தயாரித்து உள்ளார்கள்.

7 அடி நீளமும், 2 அடி ஆழமும் உள்ள இந்த குளியல் தொட்டியின் விலை 3.76 கோடி ரூபாய்.

இந்த தொட்டியை லண்டனில் நைட் பிரிட்ஜ் நகரத்தில் உள்ள ஹார்ட்ஸ்

இல்லையா? மாப்பிள்ளைனு சொல்லணும்" என்று அப்பா குதூகலித்தார்.

"எப்ப கல்யாணத்தை வெச்சுக்கலாம்னு சொல்லுங்க. அவளுக்குனு இருபது பவுன் நகை இருக்கு. கொஞ்சம் பணம் சேர்த்து வச்சிருக்கேன். மண்டபம் பார்க்கணும். சமையலுக்கு ஏற்பாடு செய்யணும்..." அண்ணன் அடுக்கினார்.

"டேய், டேய். முதல்ல அவங்க வீட்ல சம்பந்தம் பேசணும்டா. ஒரு நல்ல நாள் பார்த்து நாம அவங்க வீட்டுக்குப் போய் பேசுவோம். அவரே போய் இந்த விஷயத்தை அவங்க அம்மாவிடம் சொல்ல முடியாது. அதனால நாமளே போய் அவங்களிடம் பேசுவோம்."

❀ ❀ ❀

**ந**ல்ல நாளில் ஹரியின் வீட்டிற்கு அப்பா, மகன், மருமகள் எல்லோரும் பூ பழம் வெற்றிலை பாக்கு இனிப்பு என்று வாங்கிக் கொண்டு மணம் பேசப் போனார்கள்.

இதை தேவகி சற்றும் எதிர்பார்க்கவில்லை.

எடுத்தவுடன் மகனைப் பார்த்து, "என்னடா இதெல்லாம்?" என்றார்.

வந்தவர்கள் எதிரே அம்மா இப்படி அதட்டுவார் என்று சற்றும் அவன் எதிர்பார்க்கவில்லை. வனிதாவின் வீட்டினர் வரும் முன் இது விஷயமாய் அம்மாவிடம் தானே பேசி விட வேண்டும் என்றுதான் ஹரி நினைத்திருந்தான். ஆனால், எப்படித் துவங்கி எப்படி பேசுவது என்ற தயக்கத்திலேயே விட்டுவிட்டான். வனிதாவின் அப்பாவும் பக்குவமாய்த்தான் பேசினார். ஆனால், தேவகியால் இதை ஏற்க முடியவில்லை. மற்ற இரண்டு குழந்தைகளும் ஒவ்வொரு விதத்தில் கஷ்டப்படும் போது ஹரிக்குத் திருமணம் என்ற விஷயம் பற்றி நினைக்கவே இல்லை அவர். அதிலும், ஏற்கனவே அவனுக்குப் பழக்கமான பெண் அப்படியென்றால் காதலா? ஹரி காதலிக்கிறானா? அதை எப்படி அவரால் ஏற்க முடியும்? அதுவும் தங்கள் ஜாதி கூட இல்லை.

"காதலா? அந்த இழவெல்லாம் இந்த வீட்டுக்கு சரிப்படாதுனு உனக்கு தெரியாது?" மகனை அதட்டியதில் அவரிடம் கொப்பளித்த கோபத்தைப் பார்த்த நாராயணன், "அம்மா, நீங்க நினைக்கறா மாதிரி தப்பா எதுவும் இல்லை. உங்க மகனோட நல்ல குணம் பிடிச்சுப் போய் நாங்கதான் இது கல்யாணத்துல முடிஞ்சா நல்லா இருக்கு மேனு..." என்று பேசியவரை 'நிறுத்துங்க' என்பது போல் கைகாட்டினார் தேவகி. "ஏன் சார், இப்படி பேச உங்களுக்கு அசிங்கமா இல்லை? பசங்க நல்லது கெட்டது தெரியாம காதலிச்சா, நாம தான் எடுத்துச் சொல் லணும். அதை விட்டுட்டு ஜாதி விட்டு ஜாதி சம்பந்தம் பேச வந்து நிக்கறீங்களே. இது சரியாப்படுதா?"

"இந்தக் காலத்துல நல்ல பையன், நல்ல பொண்ணு கிடைக்கறது தாம்மா அபூர்வமா இருக்கு. ஜாதி பார்த்து நல்ல சம்பந்தத்தை விட்டுடக் கூடாது இல்லையா?"

"எங்க குடும்பத்துல அப்படி ஒரு அவல நிலை இன்னும் வரலை. நல்ல பொண்ணுக்கு பஞ்சம் ஏற்படலை. நீங்க வேற இடம் பார்த்துக்கோங்க."

வந்தவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கூடக் கொடுக்காமல் முகத்தில் அடித்தது போல் பேசி அனுப்பி விட்டார் தேவகி.

ஹரி தவித்துப் போனான். அம்மாவின் உணர்வுகளை ஓரளவு புரிந்து கொண்டுதான் இருந்தான். ஆனால், வந்தவர்களை இப்படி அநாகரீகமாக நடத்துவார் என்று அவன் நினைக்கவில்லை.

பொறுக்க மாட்டாமல், "என்னம்மா, இப்படியா அநாகரீகமா நடந்துப்ப" என்று தான் கேட்டான்.

அவ்வளவுதான் பத்திரகாளியாய் மாறி விட்டார் தேவகி. "வீட்ல கூடப் பிறந்தது ரெண்டும் இப்படி கிடக்கு. உனக்கு என்னடான்னா, கல்யாணம் கேட்குதோ?

### உலகிலேயே விலை உயர்ந்த
## குளியல் தொட்டி



கலைக்கூடத்தில்காட்சிக்காகவைத்துள்ளார்கள்.

- சாமி.

நீ நடந்துக்கறது அநாகரீகமா, நான் நடந்துகிட்டது அநாகரீகமா?"

அவன் அப்படியே அடங்கிப் போனான். கூசிப் போனான். பதினாறு வயது முதல் இந்த வீட்டிற்காக ஒரு சினிமா, டிராமா கூட போகாமல் உழைத்து ஓடாய்த் தேயும் தன்னைப் பார்த்து அம்மா என்ன கேள்வி கேட்டு விட்டாள். அவனுக்கு வெறுத்துப் போனது.

"இங்க பாரு, உனக்குக் கல்யாண ஆசை இருந்தாச் சொல்லு. நானே ஒரு நல்ல பெண்ணாப் பார்க்கறேன்" என்ற அம்மாவை வெறுப்பாகப் பார்த்து விட்டு வெளியேறினான் விருட்டென்று.

ஃஃஃ

## 13

**சொ**ன்னபடி தேவகி இரண்டு மூன்று வரன் களை கொண்டு வந்தார்.

"இந்த பொண் ணோட அப்பா மளிகைக் கடை வச்சிருக்காரு. நாலு பொண்ணுங்க. இவ தான் கடைசி. பத்து பவுன், கையில ஒரு லட்சம் கொடுத்துடறதா சொல்றாரு. இது... பொண்ணு ரெயில்வேல ஏதோ வேலை செய்யுதுனு சொன்னாங்க. அப்பா ரிடையராயிட்டாரு. அடுத்தது..."

"போதும்மா... இங்க யாரும் கல்யாணத்துக் காக நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு அலையலை. எனக்குக் கல்யாணமே வேண்டாம்."

"ஓஹோ! அவ இல்லாட்டி உனக்குக் கல்யாணமே வேண்டாம்... அப்படித்தானே."

"அப்படியே வச்சுக்கோ. கஷ்டத்துல அடிபட்டு அடிபட்டு மரத்துப் போயிட்ட. உண்மையான அன்பையெல்லாம் புரிஞ்சுக்கற நிலையில நீ இல்லை."

"ஆமாம்டா. இப்படி யாரையோ கல் யாணம் செஞ்சுக்க நினைக்கறியே... பெத்தவ மனசு என்ன பாடுபடும்னு நினைக்காத நீ அன்பைப் புரிஞ்சுக்கலையா, நான் புரிஞ்சுக்கலையா?" என்று சீறியவர், சும்மா இருக்கவில்லை. இவனிடம் என்ன கேட்டுக் கொண்டு இருப்பது? பெண்ணைப் பார்த்து நான் 'தாலி கட்டுடா' என்றால் கட்ட வேண்டும். அவ்வளவு தானே என்ற வீம்பு எழுந்தது.

ஒன்று விட்ட அண்ணன் மகள் உறவு முறையில் ஒரு பெண் இருப்பது தெரிய வர, உடனே அங்கு ஓடினார்.

"அண்ணே நல்லா இருக்கீங்களா? பார்த்து எவ்வளவு வருஷமாச்சு" என்று உருகி, அண்ணியை ஐஸ் மழையில் குளிப்பாட்டி, பேச்சுவாக்கில் மகன் பற்றிய பிரதாபம் பாடி...

"அவரு போன பிறகு அவ்வளவுதான்னு நினைச்சேன். குடும்பத்தையே தூக்கி இல்ல நிறுத்திட்டான். நல்ல சம்பாத்தியம். அவனுக்குத் தான் இப்பப் பொண்ணு பார்த்துகிட்டு இருக்கேன்..." என்று பொடி வைத்து நிறுத்தி...

அப்போது தான் அண்ணன் மகளைப் பார்ப்பது போல் பார்த்து, "அட, நம்ம சுலோசனாவா இது? என்னம்மா வளர்ந்துட்டா... நான் இன்னும் அவளைப் பத்து வயசுப் பாப்பாவாவே கற்பனை செஞ்சுகிட்டு இருக்கேன்... ஏண்ணே, வரன் பார்க்க ஆரம்பிச்சுட்டீங்களா?" என்று வந்து நிறுத்தினார்.

"நல்ல சம்பந்தமா இருந்தா முடிச்சுடலாம்னு பார்க்கறேன் தங்கச்சி" என்று அவரும் தூண்டிலை போட்டார்.

"என் மகனெல்லாம் உங்க கண்ணுக்குத் தெரிவாங்களா? பையன் அரசாங்க உத்தியோகமா பார்ப்பீங்க. இல்ல..."

"அட, என்னம்மா இப்படி சொல்லிட்ட. நல்ல பையனா இருந்தாப் போதும். உன் மகன்னா கேட்கணுமா? எப்ப முறைப்படி பொண்ணு பார்க்க வர்றீங்கனு சொல்லு..."

"ஞாயிறு தான் அவனுக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும்."

"சரி, இந்த ஞாயிறு வாங்களேன்..."

சந்தோஷமாகத் தலையாட்டி விட்டுக் கிளம்பினார்.

ஃஃஃ

"**எ**ன்னம்மா சொல்ற நீ?" என்று குதித்தான் ஹரி.

"எங்க அண்ணன், என் கால்ல விழாத குறையா என் மகளை உன் மகனுக்குத்தான் கட்டணும்னு சொல்லிக் கேட்கும்போது, எப்படி தட்ட முடியும்?"

"என் நிலைமை தெரியுமில்ல?"

"என்ன பெரிய நிலைமை? எவளையோ காதலிச்சு குரு கிறுக்குப் பிடிச்சு உட்கார்ந்திருக்கானே. அப்படித்தான் நீயும் அலையப் போறியா?"

"அம்மா, தெரிஞ்சுதான் பேசறியா இல்ல

விதண்டாவாதம் செய்யறியா? நான் விரும்பற பொண்ணு நல்லவம்மா."

"கல்யாணத்துக்கு முன்னாடியே உன்னை மயக்கிக் கைக்குள்ள போட்டுக்கிட்டவ எப்படிடா நல்லவளா இருக்க முடியும்? நீ வராட்டிப் போ. போய் எவளை வேணு மானாலும் கட்டிக்க. நான் வீட்டை விட்டுப் போறேன்."

பளிச்சென எழுந்து புடவையை உதறி இடுப்பில் சரியாகச் செருகிக் கொண்டவர் விடுவிடு என வாசல் பக்கம் போனார்.

"டேய், பொண்ணுதானே பார்க்கப் போற. கல்யாணமேவா முடிவாயிடுச்சு. சரி சொல்லு. அம்மாவை சமாதானம் செய்..." என்று துளசி கிசுகிசுக்க, சட்டென ஹரி இளக வேண்டி வந்தது.

"சரிம்மா. நீ எங்கேயும் போக வேண்டாம். நான் உன்கூட வரேன் பெண் பார்க்க" என்றவன் அதற்கு மேல் அங்கு உட்காரப் பிடிக்காமல், மாடிக்குப் போனான்.

தென்னங்கீற்றிலும் மேகத்திடையேயும் நிலா ஒளிந்து ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தது. காற்று சில்லென்று வீசியது. உடலுக்கு இதமாக இருந்தாலும், எரியும் மனதுக்கு இதமாக இல்லை.

ஃ ஃ ஃ

மாமா வீடு இவர்களை விட கொஞ்சம் தான் வசதி கூடுதலாக இருந்தது. பெண்ணை நன்றாக அலங்கரித்து இருந்தார்கள். கருப்பாய் களையாய் இருந்தாள். ஹரி நிமிர்ந்து பார்க்கவே இல்லை. எதுவும் பேசவும் இல்லை.

தேவகி தான் வாய் ஓயாமல் பேசினார்.

"நல்லாப் பார்த்துக்கோடா. அப்புறம் பொண்ணைச் சரியா பார்க்கலைனு சொல்லக் கூடாது" என்று மகனைச் செல்லமாய் இடித்த போது, ஹரி அம்மாவை முறைத்தான்.

"அதனால என்ன, மாப்பிள்ளை திரும்ப வரட்டும். நம்ம வீடு தானே... எப்ப வந்தா என்ன, எத்தனை தடவை வந்தா என்ன?" மாமாவும் தேவகியின் பேச்சில் சேர்ந்து கொண்டு சிரித்தார்.

ஹரிக்கு எழுந்து ஓடிவிடலாம் போல் இருந்தது.

இதுபற்றி வனிதாவிடமும் சொல்லி இருந்தான். அவள் இதற்கும் சிரித்தாள்.

"ம்... அவ என்னை விட நல்லா இருந்தா சரின்னு சொல்லிடு" என்றாள்.

மேலும் கடுப்பானான் ஹரி.

"என்ன விளையாடறியா? நானே மனசொடிஞ்சு போய் பேசறேன்."

"எதுக்கு இவ்வளவு டென்ஷனாகறீங்க? அம்மா தன் பங்குக்கு அவங்க பக்கம் ரெண்டு வரனைப் பார்க்கறாங்க. பார்க்கட்டுமே. அதுல உள்ள நல்லது கெட்டதும் புரிபடுமே."

"அதுல உள்ள கெட்டது எதையும் அவங்க மண்டையில் ஏத்திக்கறதா இல்லை. புரியுதா?"

"என் காதல் மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. அந்த கடவுள் மேலயும் நம்பிக்கை இருக்கு. பொண்ணு பார்க்கத்தானே போறீங்க. போயிட்டு வாங்க."

அவள் சுலபமாய்ச் சொல்லி விட்டாள்.

அவனோ இங்கே புழுவாய்த் துடிக்கிறான்.

அம்மாவோ வக்கணையாய் பதார்த்தங் களை ருசி பார்க்கிறார்.

"என்ன தேவகி, உன் மக வாழ்வு தான் சோபிக்கலைனு கேள்விப்பட்டேன்..."

"அட, அதை ஏன் கேட்கறீங்க அண்ணே. அவன் சரியில்லை. குடி கூத்தியானு சீரழியறான். குழந்தைங்க அதைப் பார்த்து வளர்ந்தா எங்கே உருப்படும். அதான் நம்ம வீட்டோட வெச்சுக்கிட்டேன்."

"அது சரிதான். இன்னொரு மகன் உண்டு இல்ல உனக்கு? என்ன செய்யறான்?"

சட்டென தேவகி முகம் சிறுத்தது. மனதில் எண்ணி வைத்திருந்த பதிலை பக்குவமாய் சொல்ல முடிவெடுத்து அவர் ஆரம்பிக்கும் முன், பளிச்சென ஹரி முந்திக் கொண்டான்.

"ஒரு காதல் தோல்வியால், மனம் பேதலிச்சுப் போயிருக்கான். சிகிச்சை ஓரளவு கொடுத்தோம்... இனி, கடவுள் விட்ட வழி..."

சாலை விபத்தில் மண்டையில் அடிபட்டு இப்படி ஆகிவிட்டான் என்று சொல்ல இருந்த தேவகியே பளிச்சென்று மகன் விஷயத்தைப் போட்டு உடைத்ததில் அரண்டு போனார்.

மாமா முகம் விழுந்து போயிற்று. அதன் பின் அவ்வளவு சுரத்தாக அவர் பேசவில்லை.

"எப்பண்ணே நிச்சயதார்த்தம் வெச்சுக் கலாம்?" என்று ஆவலாய் தேவகி கேட்ட போது கூட, "ஆகட்டும்மா சொல்லி அனுப்பறேன். வீட்ல பெரியவங்ககிட்ட எல்லாம் கலந்து பேசணுமில்ல" என்று சற்று விலகினாற் போலத்தான் பேசினார்.

அப்போதே தேவகி மனதில் அபாய மணி ஒலித்தது. முகம் வாடித்தான் கிளம்பினார்.

ஒரு வாரம் போல் ஓடியது. அவர்களிட மிருந்து எந்தத் தகவலும் இல்லை. பொறுக்க

முடியாமல் தேவகியே தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

"என் மனைவியோட அண்ணன் வீட்ல, பொண்ணுக்கு இருபது பவுன் போட்டு கல்யாணச் செலவை அவங்களே ஏத்துக்கிட்டு என் மகளைக் கட்டிக்கறதா சொல்றாங்க. வயசான மாமனார் இருக்கார். தட்ட முடியலை. மன்னிச்சுடும்மா... ஹரிக்கு என்ன, நல்ல சம்பந்தமா அமையும். கவலையேப் படாதே!" என்று கழண்டு கொண்டு விட்டார்.

தேவகி நொறுங்கிப் போனார்.

தங்களை விட பொருளாதார நிலையில் பின் தங்கிய வேறு ஒரு பெண்ணைப் பார்த்தார். அவர்களும் குருவின் நிலை அறிந்து பின் வாங்கினார்கள்.

"மனநிலை சரியில்லாட்டி, ஆயுசுக்கும் என் மகளுக்கு பாரமா இருப்பான். ஏதாவது வம்சா வழியா வர்ற வியாதியா இருந்து தொலைச்சா... எதுக்கு வம்பு? பைத்தியக்கார கொழுந்தனை கவனிச்சுக்கிட்டு பைத்தியக்கார பிள்ளைய வேற பெத்துக்கணுமா? அதுக்கு அவ கல்யாண மாகாமலே இங்கே சவுகரியமா வாழ்ந்துட்டு போகலாம்" என்று வெளிப்படையாய் இந்த சம்பந்தம் பேசிய உறவினரிடம் பெண்ணின் அப்பா பேசி விட, இதை அறிந்து தேவகி துவண்டு போனார்.

வாழாவெட்டி மகளும், மூளை கலங்கிய மகனும் ஹரியின் வாழ்வில் குறுக்கீடுகள் என்பதைப் புரிந்து கொண்டார்.

மனம் தளர்ந்தாலும், வனிதா விஷயத்தில் மனம் இளகவில்லை. மகனுடன் மல்லுக் கட்டுவதிலேயே குறியாய் இருந்தார். பேச்சு வளர்ந்தது... வருடங்கள் உருண்டன. ஆனால், இருபக்கமும் சமாதானம் தான் எட்டவில்லை.

ஆனால், எத்தனை வருடங்கள்தான் பெண்ணைப் பெற்றவர் காத்திருப்பார் பாவம்!

"ஹரி, உங்க நிலைமை புரியாம இல்லை. வனிதாவும் காலம் பூராவும் உங்களுக்காகக் காத்திருக்கத் தயார். ஆனா, வருஷம் கூடிகிட்டே போகுது. போன இளமை திரும்பாது. அதது காலாகாலத்துல நடக்க வேண்டாமா? பெண்ணைப் பெத்தவன். 'கட்டிக் கொடுக்காம பெண்ணை இப்படியே எத்தனை காலம் வீட்ல வச்சிருக்கப் போற. சம்பாதிக்கற பொண்ணை கட்டிக் கொடுக்க மனசில்லையா'ன்னு பேசறானுங்க. பேசறவங்க ஏதோ பேசிட்டுப் போறானுங்க. விடுங்க... ஆனா, வயசு போன பிறகு பிள்ளை குட்டி பெத்துக்கறதெல்லாம் கஷ்டமாப் போயிடும். யோசிங்க." நாராயணன் நயமாய்ப் பேசியது ஹரியை அதிகம் யோசிக்க வைத்தது.

அம்மாசொல்லுக்குக்கட்டுப்பட்டுநடப்பது நல்ல பிள்ளைக்கு அழகு தான். ஆனால், அம்மா புரிந்து கொள்ளாமல் பிடிவாதம் பிடிக்கிறாள். அந்த அசட்டுப் பிடிவாதத்திற்கு, அன்பு வைத்த ஒரே குற்றத்திற்காக வனிதாவுக்கு தண்டனை கொடுப்பது முறையா?

"நான் கூடிய சீக்கிரமே ஒரு நல்ல முடிவைச் சொல்றேன், மாமா" என்று கூறி விட்டான்.

அன்று மாலையே அம்மாவை அழைத்துப் பேசினான்.

"அம்மா, நம்ம வீட்ல என் கூடப் பிறந்தவங்க ரெண்டு பேர் வாழ்க்கையும் நல்லா இல்லை. உண்மை. இந்த நிமிஷம் வரை உங்க எல்லோருடைய நன்மைக்காக மட்டுமே உழைச்சுக்கிட்டிருக்கேன். என்

## சேவல்களின் கால்பந்தாட்டம்

**தென் ஆப்பிரிக்காவில் உலக கோப்பைக்கான கால்பந்து போட்டிகள் நடந்ததை முன்னிட்டு, சீனாவில் நடத்தப்பட்ட சேவல்களின் கால்பந்தாட்டம் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களை ஈர்த்துக் கொண்டது.**

**சீன நாட்டைச் சேர்ந்த ஜாங்லிஜுன் என்ற பெண் கால்பந்தின் தீவிர ரசிகை. அவர் தான் பிரியமாக வளர்த்து வரும் இரண்டு சேவல்களுக்கு கடந்த மூன்று ஆண்டுகளாக கால்பந்து ஆட்டத்தில் பயிற்சி அளித்தார். லியாவோனிங் மாநிலத்தில், ஷென்யாங் நகரத்தின் தெருக்களில் இந்த சேவல்களின் கால்பந்து ஆட்டத்தை ஏற்பாடு செய்தபொழுது பல்லாயிரக்கணக்கானோர் காண**



வந்தார்கள். இறகுகளை படபடவென்று வீசிய படியே கால்களால் பந்தை முன்னுக்கு உதைத்து வீரசாகசம் செய்து பார்ப்பவர்களை அவை கவர்ந்தன.

- சாமி.

வறுமையோட சேர்த்து என்னை ஒருத்தி தெரியாத்தனமா நேசிக்கறா. பாலைவனமா போய்க்கிட்டிருக்கற என் வாழ்க்கையில் ஒரு சின்ன வசந்தமா அவ வரவு இருக்கும்னு ஆசைப்படறேன். இது உனக்குத் தெரியும். கடைசி தடவையா உன்கிட்ட இதைப் பத்தி பேசறேன். உன் சம்மதம் எனக்கு வேணும்மா. ப்ளீஸ்..."

"கொடுக்காட்டி?"

"உன் குழந்தைங்க எங்க யாருக்குமே மணவாழ்க்கை ராசி இல்லைனு நினைச்சு, இப்படியே வாழ்ந்துட்டுப் போயிடறேன். அவ்வளவு தான். அதுதான் உன் ஆசையா?"

தேவகி மௌனமாய் மகனை வெறித்தார்.

"வருஷக்கணக்கா இதப்பத்திப் பேசிட்டோம். இன்னும் ரெண்டு நாள் டயம் எடுத்துக்கோ. ஒரு முடிவைச் சொல்லு. எத்தனை வருஷம் தான் அந்தப் பொண்ணு வீட்லயும் காத்திருப்பாங்க?"

"கேடு கெட்ட வெட்கமில்லாத குடும்பம். பெண்ணை வருஷக்கணக்கா ஒரு பையனோட சுத்த விட்டுட்டு வேடிக்கை பார்த்திட்டிருக்காங்க. சே!"

"அம்மா, ப்ளீஸ்... அவ பழகறது உன் பையனோட. அப்ப உன் பையன் மோசமானவனா?"

"அப்படித்தானே மாத்திக்கிட்டு வராங்க."

"அம்மா, ப்ளீஸ். எனக்குத் தேவை உன் சம்மதம். சாபமில்லை. ரெண்டு நாள்... ரெண்டே நாள் டயம்..."

விருட்டென எழுந்து போனான்.

ஆயிற்று, இன்றோடு அந்த கெடு முடிகிறது. காலை வரை அம்மா வாயே திறக்கவில்லை. என்ன சொன்னார்களோ என்ற ஆர்வத்துடன் ஓட்டலில் வனிதா இதோ காத்திருக்கிறாள்! என்ன சொல்லப் போகிறான்?

ஃஃஃ

14

எதிரே வைக்கப் பட்டிருந்த உணவு வகைகள் ஆறிக் கொண்டிருந்தன. ஹரி சிந்தனை வயப்பட்டு உணவில் கவனமில்லாமல் இருந்தான். வனிதாவோ சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவன் சாப்பிடாமல் வெறிப்பதைப் பார்த்தவள் அவன் கைகளைத் தட்டி,

"ம், என்னாச்சு?" என்றாள்.

"அம்மா என்ன சொல்வாங்களோனு ரொம்ப டென்ஷன்... வனி"

"அதுக்கு? இப்படி சாப்பிடாம உட்கார்ந் திருந்தா சம்மதிச்சுடுவாங்களா?"

"அப்படி இல்லை. பிரச்சினை..."

"பிரச்சினை இருந்துகிட்டே தான் இருக்கும். இப்ப சாப்பிடுங்க."

"பேசாம நீ என் வீட்டுக்கு வந்து அம்மாகிட்ட பேசறியா?" கேட்டபடி, அவன் மெல்ல உண்ணத் துவங்கினான். அவள் மறுப்பாய் தலையாட்டினாள்.

"ஹரி, அம்மா சம்மதிக்க ஒரு சின்ன ஷாக் டிரீட்மெண்ட் தரீங்களா?"

"என்ன?"

"நீங்க சம்மதிக்காட்டி, நான் வீட்டை விட்டுப் போய் அவளைக் கட்டிக்கறேன்னு சொல்லுங்க. அவ்வளவுதான்."

"ஐயோ!" அவன் கையில் எடுத்த உணவை கீழே போட்டான். அவளை ஆழமாய் வெறித்தான்.

"என்ன?" என்று சிரித்தவள், "அம்மா, பிள்ளையை பிரிக்கப் பார்க்கிறாளேனு நினைக்கறீங்களா? அப்படி ஒரு எண்ணம் இருந்திருந்தா இத்தனை வருஷம் நான் காத்திருக்க வேண்டாமே! சின்ன ஷாக் தானே கொடுக்கச் சொன்னேன்."

"யோசிக்கிறேன்" என்றான் ஹரி.

இதே நேரம் துளசி அம்மாவிடம் பேசிக் கொண்டிருந்தாள். சாப்பிட அழைத்தும் தேவகி வர மறுக்க, துளசி கண்டிப்புடன் "அம்மா, உன் பிடிவாதத்தைக் கொஞ்சம் தளர்த்து. அதுதான் நல்லது" என்றாள்.

"என்னடி நீயும் அவனை மாதிரியே பேசறே? எவளோ ஒருத்தி இந்த வீட்டுக்கு மருமகளா வர்றதுக்கு, நான் ஆரத்தி எடுக்கணுமா?"

"இங்கபாரு, இங்கேகொட்டிக்கிடக்கலை... உன் சொத்துக்கு ஆசைப்பட்டு, ஒருத்தி உன் மகனை வளைச்சுப் போட. நானும் குருவும் இப்படி இருந்தா, அது எங்க விதி. அதுக்காக ஹரி கல்யாணமே செஞ்சுக்காம நிக்கணுமா?"

"தாராளமா செஞ்சுக்கட்டுமேடி. நம்ம ஜனத்துல பொண்ணா இல்லை?"

"கல்யாணம் ரெண்டு பேரு புரிஞ்சுகிட்டு வாழ வேண்டிய பந்தம்மா. நம்ம ஜனம்னு பூரிச்சுப் போய்த்தான் என்னைக் கட்டிக் கொடுத்தே. என்னாச்சு?"

"அதுக்காக, எவளோ ஒருத்தியை நான் எப்படி என் மரும..."

"நிறுத்தும்மா. எவளோ ஒருத்தி எவளோ ஒருத்தினு ஏன் பார்க்கறே? நல்ல ஒரு பொண்ணா அவளைப் பாரேன். மோசமான பொண்ணா இருந்திருந்தா ஆறு வருஷமா இப்படி உன் சம்மதத்துக்குக் காத்திருக்க மாட்டா. உன் மகனை எப்பவோ வெளியே இழுத்துப் போய் தாலி வாங்கி குடும்பம் நடத்தி இருப்பா... புரியுதா?"

"என்னடி சொல்றே?"

"ம், வெங்காயம்! வயசு ஆனா கொஞ்சம் பந்தபாசவிலங்கிலிருந்து விலகக் கத்துக்கணும். ஜாதி, சம்பிரதாயம், மூடநம்பிக்கைனு ஏன் அடுத்தவங்களை கஷ்டப்படுத்தணும்?"

"அத விடுடி. வேற ஏதோ சொன்னியே..."

"அம்மா, சின்ன வயசிலிருந்து ஹரி இந்த வீட்டுக்காக மாடா உழைச்சு ஓடாத் தேயறான். வாழ்க்கையில் என்ன சுகத்தைக் கண்டான். ஏதோ ஒரு பெண்ணைக் காதலிக்கறான். சரினு அட்சதை தூவி ஆசீர்வதிச்சா, அந்த பொண்ணு இங்க வாழ வரும். வங்கி வேலை. நல்ல சம்பளம். நம்ம நிலை கொஞ்சம் உயரும். நீ ரொம்ப வறட்டுப் பிடிவாதம் பிடிச்சா அவங்களும் தான் எத்தனை பொறுமை காப்பாங்க. ஹரி வீட்டை விட்டுப் போய் அவளைக் கட்டிக்கிட்டா, இந்த வீட்டோட கதி?"

தேவகி அரண்டு போய் விழித்தபடி அப்படியே உட்கார்ந்து விட்டார்.

"சேச்சே, நம்ம... நம்ம ஹரியா? அப்படியெல்லாம் செய்ய மாட்டான்டி."

"செய்ய மாட்டான்தான். ஆனா, அவனும் மனுஷன் தானேம்மா. இந்தக் கால இளைஞர்கள் அனுபவிக்கற எந்த சந்தோஷத்தை அனுபவிக்க, நம்ம வீட்டு சூழல் அவனை அனுமதிச்சிருக்கு? மிஷின் மாதிரி தானேம்மா உழைக்கறான். இந்த ஆறு வருஷமாத்தான் அவன் முகத்துல ஒரு சிரிப்பைப் பார்க்க முடியுது. சுபாவம் இனிமையா மாறி இருக்கு. அந்த அளவு அந்த பொண்ணு அவனை பாதிச்சிருக்கா. ஆறு வருஷமா அவளுக்காக உன்கிட்ட போராடிக்கிட்டு இருக்கான்னா, அவளை அவன் எவ்வளவு தூரம் நேசிக்கணும்? அந்த நேசத்தையும் உன் பிடிவாதத்தையும் சீர்தூக்கிப் பார்த்தா, எது ஜெயிக்கும்? எல்லாப் பொறுமைக்கும் எல்லை உண்டும்மா. நீ அவன் பொறுமையை ரொம்ப சோதிக்கற. அவ்வளவுதான் சொல்வேன். காலையிலேயே யாரும் சாப்பிடலை. எனக்குப் பசிக்குது. மிளகு ரசம், சுட்ட அப்பளம் தான். வரியா சாப்பிட?"

மகள் சொன்னவை அதிகமாய் பாதிக்க, கீ கொடுத்த பொம்மை போல் எழுந்து போய் கடமைக்காக சாப்பிட்டார் தேவகி.

அம்மா யோசிக்கட்டும் என்று அதற்கு மேல் எதுவும் பேசாமல் தன் வேலைகளில் மூழ்கினாள் துளசி.

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

## 15

ஹரி மாலை வீடு திரும்பும் போது பல் வேறு உணர்வுகளின் பிடியில் சிக்கி இருந்தான். தன் வாழ்வில் பணம் தான் கைக்கு எட்டாமல் இப்படிப் போக்குக் காட்டுகிறது என்றால், காதல் கூடவா கண்ணாமூச்சி ஆட வேண்டும். இந்த அம்மாவிற்கு எதற்கு இத்தனை பிடிவாதம்? வனிதா சொல்வது போல் அம்மாவை

மிரட்டியா அடிபணிய வைப்பது? மனம் ஏதேதோ எண்ணி கலங்கியது.

அம்மா சரியாகப் பேசாததால் இரண்டு நாட்களாய் வீடே அழுது வடிகிறது. நேரத்திற்கு சரியான சாப்பாடு கிடையாது. துளசியின் குழந்தைகள் கூட சூழலை உணர்ந்தது போல் அதிகம் சேட்டை பண்ணாமல் இருக்க, வீடே மயான அமைதியில் திளைத்தது. இன்று மாலையும் அப்படித்தான் இருக்கும் என்று நினைத்துக் கொண்டு வீட்டில் நுழைந்தவனுக்கு இன்ப அதிர்ச்சியாய் சூழல் மாறி இருந்தது.

துளசி சுவாமி படத்திற்கு விளக்கேற்றி ஊதுபத்தியை பற்ற வைக்க, அதன் மணத்தோடு சமையலறையில் அம்மாவின் காபி டிகாஷன் மணம் போட்டி போட்டது.

அவன் எதுவும் பேசாமல் கை கால் கழுவி உடை மாற்றி வந்தான்.

"இன்னைக்கு டியூஷனுக்கும், கணக்கு எழுத கடைக்கும் போகலையா?" துளசி விபூதியை தம்பியின் நெற்றியில் தீட்டியபடி கேட்டாள்.

"இல்லை... தலைவலி" என்றவன் சேரை மின்விசிறியின் அடியில் இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

தேவகி சுடச்சுட காபியை கொண்டு வந்து நீட்டினார்.

மௌனமாய் வாங்கிக் கொண்டான்.

"இன்னியோட நீ சொன்ன கெடு முடியுது" என்றார் அம்மா தானே கறார் குரலில்.

"ம்..." காபியை மெல்ல உறிஞ்சினான்.

"உன் இஷ்டப்படியே கல்யாணம் பண்ணிக்கோ."

அம்மா சொன்னதைக் கேட்ட வேகத்தில் மளுக்கென்று காபியை ஒரு வாய் சூடாய் விழுங்கி விட்டான். சரியாகத் தான் தன் காதில் விழுந்ததா? தன் கற்பனையா? ஆறு வருடங்களுக்குப் பின் அம்மா மனம் இளகி விட்டதா?

"ஆனா, கல்யாணத்துக்கு நாங்க யாரும் வரமாட்டோம்." சொல்லி விட்டு வேகமாய் உள்ளே போய் விட்டார் அம்மா.

அவன் அப்படியே உட்கார்ந்து விட்டான். சற்று முன் மலர்ந்த முகம் கூம்பியது.

அவன் தோள்களை இதமாய்ப் பற்றினாள் துளசி.

" என்னக்கா அர்த்தம் இதுக்கு?"

"இங்க பாரு, அம்மா சம்மதிச்சுட்டாங்க. அதுதான் முக்கியம். பொண்ணு வீட்ல சொல்லி பேசாம சிம்பிளா ஒரு கோயில்ல வச்சு கல்யாணத்தை முடி. அவ வீட்டுக்கு வந்த பிறகு அம்மா மனசு கொஞ்சம் கொஞ்சமா மாறிடும்."

அரை மனதாய் தலையாட்டினான்.

❀ ❀ ❀

"வனி, உன்கிட்ட கொஞ்சம் பேசணும்" தொலைபேசியில் அவளிடம் சொன்னபோது, ஹரிக்கு தொண்டையை அடைத்தது.

"எங்கம்மா நம்ம கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டாங்க" என்ற சந்தோஷ செய்தியை ஆர்வமாய் சொல்லும் நிலையிலா அவன் இருக்கிறான்.

அவள் கொஞ்சம் பதறித்தான் போனாள்.

"என்ன... அம்மா சம்மதிச்சுட்டாங்களா?"

"ம்..."

"அதை ஏன் சுரத்தே இல்லாம சொல்றீங்க?"

"அதான் நேர்ல பேசணும்னு சொன்னேனே."

"வழக்கம் போல் லஞ்ச் டயத்தில் ஓட்டலுக்கு வரட்டா?"

"இல்ல, உடனே பேசணும். கொஞ்சம் பர்மிஷன் போட்டுட்டு வாயேன். முடியுமா?"

சற்று யோசித்தவள், "சரி, ஒரு அரைமணி நேரம் கழிச்சுத்தான் கிளம்ப முடியும். எங்க வரட்டும்?"

"கற்பகாம்பாள் கோயில்"

"ம், சரி"

❀ ❀ ❀

மௌனமாய் தரிசனம் முடித்து கோயிலை வலம் வந்தார்கள் இருவரும். பின், முருகன் சந்நிதிக்கு எதிரே மண்டபத்தில் அமர்ந்தார்கள்.

"என்ன விஷயம் சொல்லுங்க. ரொம்ப படபடப்பா இருக்கு" என்றாள் வனிதா அதற்கு மேல் பொறுக்க முடியாதவளாய்.

"அம்மா கல்யாணத்துக்குச் சம்மதிச்சுட்டாங்க. ஆனா, என் பக்க மனுஷங்க யாரும் கல்யாணத்துக்கு வர மாட்டாங்களாம்." சொல்லும் போதே விரக்தியும் வேதனையுமாய் குரல் தழுதழுத்தது.

அவளும் இதை எதிர்பார்க்கவில்லை.

"அவங்க வராம கல்யாணம் செய்யறதானால், எப்பவோ செஞ்சிருப்போமே!"

"புரிஞ்சுக்கவே மாட்டேங்கறாங்க. கல்யாணம், தான் சொன்னபடி நடக்கலைனு ஒரு ஈகோ. காதல் என்ன அவ்வளவு தப்பான விஷயமா?"

அவன் குமுறினான்.

"சரி, இவ்வளவு தூரம் இறங்கி வந்திருக்காங்க. இன்னும் கொஞ்சம் பொறுத்துப் போவோம்."

"எதுக்கு? அறுபது வயசாகவா? ஒரேயடியா அறுபதாம் கல்யாணம் செஞ்சுக்கிடலாம்."

அவள் மெல்ல சிரித்தாள்.

"அப்ப என்ன செய்யப் போறீங்க?"

"இந்த வரை சம்மதம் கொடுத்துட்டாங்க இல்ல. பேசாம போய் ஒரு கோயில்ல வெச்சு வனிதா குடும்ப மனுஷங்க முன்னாடி தாலி கட்டிடு. பிறகு அவ நம்ம வீட்டுக்கு வந்த பின்னாடி அம்மா மனசு கொஞ்சம் கொஞ்சமா மாறிடும்'னு அக்கா சொல்றாங்க."

"உங்க மனசுக்கு சரினு படுதா?"

"சரினு படலை. ஆனா, அதுக்காக இன்னும் எத்தனை வருஷம் உன்னை இப்படி காக்க வைக்க முடியும்? உங்க அப்பா எவ்வளவு தவிச்சுப் போய் இருக்கார். அதையும் நாம கவனிக்கணும் இல்லையா?"

"அப்ப கோயில்ல வெச்சு, உங்க மனுஷங்க இல்லாமலேயே, கல்யாணத்தை முடிச்சுடலாம்னு சொல்றீங்களா?"

"வேற வழி?"

"எங்க வீட்லயும் பேசறேன், ஹரி"

"நீ மட்டும் தனியா போய் பேச வேண்டாம். இன்னைக்கு ஈவ்னிங் நானும் உன் கூட வரேன். போய்ப் பேசுவோம்."

"சரி"

இருவரும் கற்பகாம்பாள் மெஸ்ஸில் லைட்டாக டிபனை முடித்துக் கொண்டு அவரவர் அலுவலகத்திற்குப் போனார்கள்.

❀ ❀ ❀

மாலை அவளுடைய வங்கிக்கு அவன் வந்தான். கையில் இனிப்பு, பழம் எல்லாம் வாங்கி வந்திருந்தான்.

"எதுக்கு இதெல்லாம்?"

"இனிப்பு தானே. நல்ல விஷயம் பேசப் போறோம். அதான்..."

ஜோடியாய் இருவரும் வருவார்கள் என்பதை நாராயணன் எதிர்பார்க்கவில்லை என்பது அவர் தடுமாறிய விதத்தில் புரிந்தது.

"வா... வாங்க மாப்பிள்ளே. என்ன, வழியில சந்திச்சீங்களா? ரெண்டு பேரும் ஒண்ணா வர்றீங்க!"

வனிதாவின் அம்மா நிலைமையும் எவ்வளவோ முன்னேறி இருந்தது. பேசக் கஷ்டப்பட்டாலும், இயல்பாய் சிரித்தார்.

வரும் போதே வனிதாவின் அண்ணனுக்கும் தொலைபேசி மூலம், தான் முக்கிய விஷயம் பேச வரப் போவதாய் சொல்லியிருந்தான் ஹரி. அதனால் அவரும் தன் மனைவியுடன் வந்து விட்டார்.

இதையெல்லாம் பார்த்து ஏதோ விஷயம் என யூகித்துக் கொண்டார் நாராயணன்.

"என்ன விஷயம்?" என்றார் ஆர்வமும் கவலையுமாய்.

"முக்கியமான விஷயம்னு சொன்னீங்களே" என்றார் கோபி.

இனிப்பு பழப் பையை வனிதாவின் அப்பாவின் கையில் கொடுத்தவன், "நல்ல விஷயம் தான். அம்மா இந்த கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டாங்க" என்றான்.

ஒரே நொடியில் ஆயிரம் வாட் பல்பை தட்டிவிட்டது போல் பளீரென எல்லோர் முகமும் ஒளிர்ந்தது.

"நல்ல விஷயம்... நல்ல விஷயம்" என்றார் நாராயணன்.

"ஐயரைப் பார்த்து தேதி குறிக்கணும். சம்பந்தி வீட்டுக்கு போய் பேசணும். மண்டபம் பார்க்கணும்..." அவள் அண்ணன் அடுக்கினார்.

ஹரியின் முகம் சிறுத்தது.

"இ... இல்ல ஒரு சின்ன..." எப்படி சொல்வது என்று தடுமாறினான்.

சட்டென வனிதா இடைபுகுந்து, "பெத்த அம்மாவுக்கு எத்தனையோ எதிர்பார்ப்பு இருக்கும். அவங்க சம்மதம் கொடுத்ததே பெரிய விஷயம் இல்லையா?" என்று இழுத்தாள்.

"என்னம்மா சொல்ல வர்றே?"

## தீக்குச்சிகளால் ஆன டைட்டானிக் கப்பல்

மிகப்பெரிய கப்பலான டைட்டானிக் மூழ்கி கிட்டத்தட்ட 100 வருடங்கள் ஆன போதிலும் அதன் மேல் உள்ள ஆவல் மக்களிடையே குறையவில்லை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

லெபனான் நாட்டு கைவினை பொருள் கலைஞர் அசாத் தாரெஹ் தீக்குச்சிகளினால் தயாரித்த டைட்டானிக் கப்பலின் மாதிரி வடிவமான இக்கப்பல் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெற்றது. இதனை அந்நாட்டில் உள்ள பீரூட் நகரத்தில் மக்கள்

"இல்லப்பா. அவங்க சம்மதம் மட்டும் தான் கொடுத்திருக்காங்க. கல்யாணத்துக்கு இவர் பக்க மனுஷங்க யாரும் வரப் போவதில்லை."

சட்டென ஒரு மவுனம் சூழ்ந்தது அங்கே. பின் மெல்ல நாராயணன் கேட்டார். "இதுக்கு என்ன அர்த்தம், மாப்பிள்ளே. அவங்க வராம கல்யாணம் செய்யவா இத்தனை வருஷம் காத்திருந்தோம்."

அவன் பெருமூச்சு விட்டான்.

ஆசைப்பட்டு பெரியவர்களின் சம்மதத் திற்காகப் போராடும் இந்த இரு இளம் உள்ளங்களை வாழ்த்த அந்த அம்மா ஏன் இவ்வளவு பிகு செய்ய வேண்டும் என்று சின்ன எரிச்சல் கூட எழுந்தது நாராயணனுக்கு.

ஹரியால் அவர்களை நிமிர்ந்தே பார்க்க முடியவில்லை. அவனின் பரிதாப நிலை அவர்களுக்கு மேலும் அவன் மேல் பச்சாதாபத்தை ஏற்படுத்தியது.

"சரி, நாங்க வந்து அம்மாகிட்ட பேசறோம்" என்றார்.

ஹரி பதறினான். "ஐயையோ!"

"ஏன்?"

"இல்ல. ஏற்கனவே அவங்க உங்களை சரியா நடத்தலை..."

"அதெல்லாம் பார்த்தா முடியுமா? இது என் மகளோட வாழ்க்கை பிரச்சினை. அவங்க வராம கல்யாணம் செஞ்சா, உங்களால சந்தோஷமா தாலி கட்ட முடியுமா? சரி, சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமா நீங்க அப்படி செய்ய முன் வரலாம். ஆனா, நாளைக்கு பெரியவங்க நீங்க வந்து மரியாதைக்குப் பேசினீங்களா?னு ஒரு வார்த்தை வந்தா... என் மக இல்ல காலத்துக்கும் தலைகுனிஞ்சு நிக்கணும். முறைப்படி நாங்க வந்து கல்யாணம் பேசி, அவங்களை அழைக்கறோம். அதுக்கு மேல அவங்க இஷ்டம்."

"அவங்க மரியாதை இல்லாம ந..."

"எப்படி நடத்தினாலும் கவலை இல்லை. இந்த கல்யாணம் முறைப்படி நல்லா நடந்து நீங்களும் வனிதாவும் சந்தோஷமா வாழணும். அவ அந்த வீட்டுக்குள் முறைப்படி கால் வைக்க நான் வழி ஏற்படுத்தித் தரணும். ஏதோ வேண்டாத எங்க வீட்டுக் குப்பையை உங்க வீட்ல தள்ளி விட்டா மாதிரி யாரும் நினைக்கும்படி ஆகிடக் கூடாது."

சட்டென தலை நிமிர்ந்த ஹரி, "அவளைக் குப்பை மாதிரி யாரும் நடத்த நான் விடவும் மாட்டேன், மாமா"

"தெரியும் மாப்பிள்ளே. அதனால தான், உங்க இத்தனை வருஷ போராட்டத்துக்கும் நான் துணை நிக்கறேன். இல்லாட்டா, எப்பவோ என் மகளுக்கு வேற இடம் பார்த்திருப்பேன். ஒரு தங்கமான மருமகனை நான் இழக்க விரும்பலை."

அவர் பேசப்பேச அவனுக்குத் தொண்டை அடைத்தது.

"இந்த வெள்ளிக்கிழமை உங்க வீட்டுக்கு வரோம். நாள் நல்லாத்தானே இருக்கு, பாரும்மா" என்றார் மருமகள் சீதாவிடம். அவள் நாட்காட்டியைப் பார்த்து விட்டு, "அமாவாசைனு போட்டிருக்கு மாமா" என்றாள்.

"பிரமாதம். அப்ப வெள்ளிக்கிழமையே வந்துடறோம்."

என்ன நடக்கப் போகிறதோ என்று உள்ளூர பயம் அவனுக்கு.

இனிப்பு, காபி என்று முடித்துக் கொண்டு கிளம்பினான்.

ஃ ஃ ஃ

## 16

இந்த முறை அவர்கள் வரப் போவதை முன் கூட்டியே அம்மாவிடம் சொல்லி விட்டான்.

"எதுக்கு வர்றாங் களாம்?" என்று தேவகி நொடித்தார்.

"இதென்னம்மா கேள்வி? கல்யாணத்துக்கு நீ சரி சொல்லிட்ட. முறையா பேச வராங்க." என்றாள் துளசி.

"ஆமாம், முறையாய் நடக்கற கல்யாணம்



கண்டுகளிக்க வைக்கப்பட்டுள்ளது.

- சாமி.

பாரு" என்று கடுகடுத்தார்.

துளசி அம்மாவை முறைத்தாள்.

"அந்த பொண்ணு இங்கே தானே வந்து வாழப் போகுது? இல்ல, உன் வறட்டு கவுரவம் காரணமா உன் மகனையும் மருமகளையும் 'நீயும் வேண்டாம் உன் பணமும் வேண்டாம்'னு தனியா வைக்கப் போறியா?" சுளீரென துளசி கேட்க, தேவகி கப்பென அடங்கினார்.

அவர்கள் வருவதாய் சொன்ன வெள்ளிக்கிழமை அன்று துளசி தான் வீட்டை சரி செய்தாள். இனிப்பு, காரம், பூ பழம் என்று வாங்கி வந்தாள். புதிதாய் டிகாஷன் இறக்கினாள். இது எதிலும் பட்டுக் கொள்ளாமல் ஓரமாய் உட்கார்ந்து மவுனமாய் நடப்பவற்றை பார்த்துக் கொண்டிருந்தார், தேவகி. துளசியோ தம்பி குருவிற்கு சற்று நல்ல சட்டை, பெர்முடா போட்டு விட்டு வாசலில் அழகாய் வண்ணக் கோலமிட்டாள். தானும் நல்ல புடவையாய் அணிந்து கொண்டாள். பாயை விரித்து விட்டு, ஊதுபத்தி ஏற்றி வைத்தாள். குழந்தைகளையும் நன்கு அலங்கரித்தாள்.

ஹரியும் சீக்கிரமே வந்து விட்டான். முகம் கழுவி சற்று நல்ல சட்டை, வேட்டி அணிந்து கொண்டான். விளக்கு வைக்கும் நேரம், நாராயணன் மகன், மருமகளுடன் மூவராய் வருவதற்கு பதில் நால்வராய் வருவது நல்லது என்று வயதான உறவினர் ஒருவரோடு வந்தார்கள்.

துளசியும் ஹரியும் வாய் நிறைய வரவேற்றார்கள். தேவகி அந்த இடத்தை விட்டே அசையவில்லை. எதையும் பொருட்படுத்தாமல், வந்தவர்கள் கலகல வென பேசிக் கொண்டு வந்து அமர்ந்தார்கள். வாங்கி வந்த இனிப்பு, பழங்களை கீதா தேவகியிடம் கொடுக்க வந்தாள். அம்மா உதாசீனம் செய்து விட்டால் நன்றாக இருக்காது என்பதால் குறுக்கே புகுந்து துளசியே "எதுக்கு இவ்வளவு வாங்கி வந்திருக்கீங்க?" என்று சம்பிரதாயமாய்க் கேட்டுக் கொண்டே அவற்றை வாங்கிக் கொண்டாள்.

"நல்ல விஷயம் பேச வந்திருக்கோம். இனிப்பு, பழம் தானே..."

துளசி உள்ளே சென்று அவற்றை வைத்து விட்டு, தான் வாங்கி வைத்த பழம் இனிப்பு கார வகைகளைத் தட்டில் நிரப்பினாள். குழந்தைகள் ஓடி ஓடி அவற்றை வந்தவர் களிடம் கொண்டு வைத்தன. ஹரி மாமாவுக்குக் கல்யாணம் என்ற குஷி அவர்களுக்கு! காபி கோப்பைகளோடு துளசி வந்தாள்.

"என்னம்மா, தம்பிக்குக் கல்யாணமா?" என்றபடி காபியை எடுத்துக் கொண்டார் நாராயணன்.

"ஆமாம்... வந்துகிட்டே இருக்கு."

அவர் தேவகி பக்கம் திரும்பி நிதானமாக சிரித்தபடி ஆரம்பித்தார்.

"அம்மா... சொல்லுங்க. நீங்க கல்யாணத்துக்கு சம்மதிச்சுட்டீங்கனு மாப்பிள்ளை சொன்னாப்பல. என்ன எதிர்பார்க்கறீங்க? எப்படி கல்யாணத்தை நடத்தலாம்? பெரியவங்க உங்க விருப்பப்படி எல்லாம் செஞ்சுடலாம். எங்களுக்கு இருப்பது ஒரே பொண்ணு... பொண்ணு பார்க்க எல்லோரும்..."

பளிச்சென எழுந்தார் தேவகி. அவர் முடிக்கும் முன் குறுக்கே புகுந்து, "உங்களுக்கு ஒரு பொண்ணோ, ஒன்பது பொண்ணோ, எனக்குக் கவலை இல்லை. இந்த கல்யாணம் என் விருப்பப்படி நடக்கலை..." என்றார்.

"ஆமாம், உங்க மகனுக்காகத் தான்..."

"இவ்வளவு தூரம் இறங்கி வந்திருக்கேன்... எல்லாம் என் பிள்ளைக்காகத்தான்... அவ்வளவு தான்! இதுக்கு மேல என்னால தரம் தாழ முடியாது. பொண்ணு பார்க்க வந்து, கல்யாணத்துல முன்னாடி நிக்கறதெல்லாம் என்னால முடியாது. அவன் பார்த்தாச்சு. தாலி கட்ட வேண்டியவன் அவன். குடும்பம் நடத்தப் போறது அவன். அவன் மாப்பிள்ளையா கல்யாணத்துக்கு வருவான். இதுக்கு மேல என்னை இதுல இழுக்காதீங்க" என்றவர் அவிழ்ந்த தலைமுடியை இழுத்து முடிந்துக் கொண்டு கொல்லைப்பக்கம் போய் விட்டார்.

ஒரு நொடி எல்லோரும் ஸ்தம்பித்துப் போனார்கள். ஹரி தலைகுனிந்தான். துளசி இது போல் ஏதாவது நடக்கும் என்று எதிர்பார்த்திருந்தாள். சட்டென சுதாரித்து, சமாளித்தது அவள் தான்.

"இங்க பாருங்க... ஹரி, வனிதா பத்தி என்கிட்ட சொல்லி இருக்கான். ஒரு நல்ல பொண்ணு இந்த வீட்டுக்கு வரப் போவதில் சந்தோஷம். ஆனா, அம்மா அந்தக் கால மனுஷி. காதல் கல்யாணம் எல்லாம் அவங்களால சுலபத்துல ஜீரணிக்க முடியாது. ஹரி ஆசைப்பட்டபடி அவங்க சம்மதிச்சுட்டாங்க. இப்போதைக்கு அது

போதும். நீங்க சிம்பிளா ஒரு கோயில்ல கல்யாணத்தை நடத்துங்க. வனிதா வந்த பிறகு, அம்மா மாறிடுவாங்க. மனசைப் போட்டுக் குழப்பிக்காதீங்க..."

வனிதா வீட்டினரால் எதுவும் பேச முடியவில்லை. கடைசியில் ஒருவாறு சமாளித்து, "நாத்தனாரா நீங்களாவது..." என்றார் கோபி.

"அம்மாவை எதிர்த்துகிட்டு இப்ப நான் கல்யாணத்துக்கு வர்றது அவ்வளவு நல்லா இருக்காது. நல்லபடி கல்யாணம் நடக்கட்டும். அப்புறம் எல்லாமே நல்லதா நடக்கும். சரியா?"

அவர்கள் சம்மதித்தார்கள். வேறு வழி?

ஃ ஃ ஃ

## 17

"வீட்டுக்கு வந்து அம்மாகிட்ட நீயே பேசறியா'னு கேட்டீங்க ஹரி. நான் பேசினா அம்மா கல்யாணத்துக்கு வருவாங்கன்னு நம்பித் தானே கேட்டீங்க. ஆனா, தாலி கழுத்துல ஏறாம உங்க வீட்ல நான் கால் எடுத்து வச்சா எனக்கு சுத்தமா மதிப்பு இருக்காது. இப்பவும் உங்க வீட்டு மனுஷங்க வராம நம்ம கல்யாணம் நடக்கறது வருத்தமாத்தான் இருக்கு. ஆனா, நம்ம கல்யாணத்துக்குப் பிறகு நிச்சயமா அம்மா மனசை என்னால ஜெயிச்சுட முடியும்னு நம்பறேன்."

வனிதாவின் பேச்சு ஹரிக்கு தெம்பைக் கொடுத்தது.

ஆனாலும் அம்மா, அக்கா, தம்பி என்று எல்லா உறவும் இருந்தும், யாரும் இல்லாத அனாதை போல் வனிதா கழுத்தில் தாலி கட்டும் போது நெஞ்சை அடைத்தது அவனுக்கு. அலுவலக நண்பர்கள் இருவரைத் தவிர அவன் பக்கம் யாரும் இல்லை. அவள் பக்கம் அப்பா, அண்ணன், அண்ணி தவிர, மாமா குடும்பம், சித்தப்பா குடும்பம் என்று பத்து இருபது பேர் வந்திருந்தார்கள். அது தவிர சில நெருங்கிய நண்பர்கள் வேறு!

அம்மன் சந்நிதியில் ஐயர் மந்திரம் ஓதி தாலியை எடுத்துக் கொடுக்க, வனிதா கழுத்தில் தாலி கட்டினான் ஹரி. மாலை மாற்றிக் கொண்டு கோயிலை வலம் வந்தார்கள். நல்ல தரிசனம் முடிந்த பின், பக்கத்தில் இருந்த ஓட்டலில் விருந்து உண்டார்கள்.

அங்கிருந்து மற்ற உறவுகளும் நண்பர்களும் அகல, ஹரியையும் வனிதாவையும் அழைத்துக் கொண்டு, நாராயணன், கோபி, கீதா மூவரும் முதலில் தங்கள் வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். அவள் அம்மாவின் காலில் விழுந்து வணங்க, அந்த மூதாட்டியின் சுருங்கிய கண்களில் ஆனந்தக் கண்ணீர். முன்பு போல் படுத்த படுக்கையாய் இல்லாமல், வீட்டுக்குள் சக்கர நாற்காலியில் இயங்கும் அளவு முன்னேறியிருந்தார். ஏதோ பேசக் கூட ஓரளவு முடிந்தது. திக்கித் திணறி "நல்... நல்லா இருங்க" என்றார்.

அங்கு பாலும் பழமும் கொடுத்த பின் ஹரியின் வீட்டிற்கு அழைத்துப் போனார்கள்.

வாசலில் உட்கார்ந்திருந்த தேவகி இவர்கள் காரிலிருந்து இறங்குவதைப் பார்த்தவுடன் விருட்டென எழுந்து உள்ளே போனார். துளசி தான் ஆரத்தி கரைத்து எடுத்து வந்தாள். வந்தவர்களுக்கு குளிர்பானம் வாங்கிக் கொடுத்தாள். மகளுக்கான சீர் வகைகளை இறக்கி வைத்து விட்டு கண்களில் நீர் மல்க வனிதாவின் உறவினர் விடைபெற்றார்கள்.

சமையலறையில் புகுந்து கொண்டிருந்த தேவகி அதுவரை வெளியிலேயே வரவில்லை.

துளசியின் உதவியோடு இரவு எளிமையாய் ஒரு பாயசத்தோடு சமையல் செய்தாள் வனிதா. தேவகி மட்டும் சாப்பிடவில்லை.

ஒரே ஒரு அறையும் சமையல் பகுதியும் கொண்ட இருநூறு சதுரடி வீடு அது. புதுமணத் தம்பதியை எங்கு படுக்க வைப்பது என்று புரியாமல் துளசி கையைப் பிசைந்து கொண்டு நின்றாள். தேவகி தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் பாயைப் போட்டுப் படுத்துக் கொண்டார். ஹரி நெளிந்தான்.

வனிதா அலட்டிக் கொள்ளவே இல்லை. சமையல் அறையைச் சுத்தம் செய்து விட்டு, ஹரிக்கும் தனக்குமாய் பாயை அறையின் ஓரத்தில்விரித்தாள். துளசியின்குழந்தைகளுக்கு கதை சொல்லியபடி, ஏதோ அந்த வீட்டில் ரொம்ப வருடங்களாய் புழங்குபவள் போல் இயல்பாய்ப் படுத்து விட்டாள்.

துளசி மெல்ல ஹரியிடம், "வீட்ல இடம் போதலையே. ஓட்டல்ல ஏதாவது ஏற்பாடு செஞ்சா..." என்று முடிக்கும் முன், "அப்புறம் தொடர்ந்து ஓட்டல்லயே படுக்க முடியுமா அண்ணி? கொஞ்ச நாள் தள்ளிப் போடறதில் தப்பில்லை. ஆமாம், ஒரு அறை கூடுதலா இருக்கறா மாதிரி போர்ஷன் ஒண்ணு இங்கயே

வாடகைக்கு வருதுனு உங்க தம்பி சொன்னாரே. அதை வேணும்னா நமக்கு பார்க்கலாமா?" என்றாள் இயல்பாய்.

"வந்த அன்னைக்கே தனிக் குடித்தனத்துக்கு வழி போட்டாச்சா, பேஷ்!" என்றார் தேவகி.

எல்லோருமே ஒரு நொடி திடுக்கிட்டுப் போனார்கள்.

மெல்லிய குரலில், "தனியாப் போகணும்னு சொல்லலை அத்தை. எல்லோருமா அந்த போர்ஷனுக்கு மாறிடலாம்னு சொன்னேன். குழந்தைகளும் வளர்ந்துகிட்டு வர்றாங்க. படிக்க தனியா ஒரு இடம் இருந்தா நல்லது. பகல்ல அவங்க அங்கே படிச்சுக்கலாம். என்ன, ஒரு ஐந்நூறு ரூபாய் கூட ஆகும். என் சம்பளமும் இனி இங்கே தானே பயன்படப் போகுது. சமாளிச்சுக்கலாம்" என்றாள்.

"சம்பாதிக்கற திமிரைக் காட்டியாச்சு இல்லையா, நிம்மதியா இனி எல்லோரும் தூங்கலாம்."

அம்மாவின் குத்தலுக்கு துளசி பதில் தர வாயைத் திறக்கும் முன் புன்னகை மாறாமல் வனிதா, "ஆமாம், அத்தை. இனி நிம்மதியாத் தூங்கலாம்" என்றாள் பளிச்சென்று.

யாருமே எதிர்பாராத பதிலில் கப்பென ஒரு அமைதி சூழ்ந்தது.

"குட் நைட்" என்று கண்களை மூடிப் படுத்த வனிதா, அடுத்த ஐந்தாவது நிமிடம் தூங்கிப் போனாள்.

ஃஃஃ

அடுத்த வாரமே முன் போர்ஷன் வீட்டுக்குக் குடி போனார்கள். இருநூறு சதுரடியில் கூடுதலாய் ஒரு அறை மட்டுமல்ல காற்றும் வெளிச்சமும் கூட இலவசமாய்க் கிடைத்தன. முன் பக்க போர்ஷன் என்பதால் வாசல் சற்று பெரிதாய், புழங்க வசதியாய் அமைந்தது. ஒரே அறையில் உண்டு உறங்கி படித்து சமைத்து பழகியவர்களுக்கு இந்த வீடு மிகப்பெரிய மாறுதலாய் அமைந்தது. வெளிப் புழுக்கம் குறைய மனப் புழுக்கமும் குறைந்தது போல் இருந்தது.



அன்று இரவு துளசி எளிமையாய் அறையை அலங்கரிக்க அவர்களின் முதல் இரவு ஏற்பாடானது. தேவகி வழக்கம் போல் தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்பது போல் ஒதுங்கினாலும், வார்த்தைகளைக் கொட்ட மட்டும் தயங்கவில்லை.

"அஞ்சாறு வருஷமா ஒண்ணாச் சுத்தினவங்களுக்கு இதுதான் முதல் ராத்திரியாமா?" என்றபடி தன் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

ஹரியும் துளசியும் முகம் சிவந்தார்கள். ஹரியால் தலை நிமிர முடியவில்லை. ஆனால் வனிதாவோ "ஒரு பேரனோ பேத்தியோ பெத்துக் கொடுத்துட்டா, கல்யாணத்துக்கு நீங்க சுலபமாச் சம்மதிச்சுடுவீங்கனுதான் நாங்க கூட நினைச்சோம். என்ன பண்றது, அத்தை. நேரம் காலம் கூடி வர வேண்டியிருக்கே! இதுவரை நடக்காத நல்லது இனியாவது சீக்கிரம் நடக்கணும்னு ஆசீர்வாதம் பண்ணுங்க, அத்தை" என்றவள் தேவகியின் கால்களைத் தொட்டு வணங்கி விட்டு சிட்டாய்ப் பறந்து அறைக்குள் புகுந்து கொண்டாள்.

தேவகியோ விக்கித்துப் போய் உட்கார்ந்து விட்டாள். என்ன சொல்கிறாள் இவள்? இது வரை நடக்காத நல்லது என்றால் இவர்கள் சேர முடியாததைக்



குறிப்பிடுகிறாளா அல்லது குழந்தை பாக்கியத்தைப் பற்றிச் சொல்கிறாளா?

வார்த்தையைக் கொட்டி அவள் நிம்மதியைக் கெடுக்க நினைத்தால், அதே வார்த்தைகளை வைத்து அவள் தன் நிம்மதி யையும் தூக்கத்தையும் அல்லவா கெடுத்து விட்டாள். இவளிடம் இனி ஜாக்கிரதையாய்ப் பேச வேண்டும்!

ஏதேதோ நினைத்து இரவு முழுதும் தூக்கத்தைத் தொலைத்தார் தேவகி.

ஃ ஃ ஃ

18

"குருவை டாக்டர் கிட்ட காட்டலையா?" பூவைத் தொடுத்தபடி தன் நாத்தனாரிடம் கேட்டாள் வனிதா.

"எல்லாம் காட்டி னோம். உடம்பு நல்லாத் தான் இருக்கு. அதாவது மூளையில் எந்த பாதிப்பும் இல்லை. மனசு பாதிச்சதுல இப்படி இருக்கான். தொடர்ந்து தெரபி கொடுக்கணும்னு சொன்னார். ஒரு தடவை கொடுக்கவே ஆயிரம் ரூபாய் பக்கமா ஆகுது. விதிப்படி ஆகட்டும்னு விட்டுட்டோம்" என்றாள் துளசி.

"இப்படியே ஆயுசு பூரா விட்டுட முடியுமா?"

அரிசியில் கல்லைப் புடைத்து எடுத்துக் கொண்டே மகளும் மருமகளும் பேசுவதைக் கேட்டபடி இருந்த தேவகி சட்டென, "ஏன் ஆயுசுக்கும் உங்க தலையில பாரம் ஏறிடும்னு பயமா?" என்றார், குத்தலாக.

"பெத்த மனசுல ஏறிக் கிடக்கும் பாரத்தை விடவா?" என்று எழுந்த வனிதா, காய்ந்த துணிகளை எடுக்க வெளியே போனாள்.

"வார்த்தைகளைக் கொட்டிட்டு வாங்கிக் கட்டிக்கணும்னு உன் தலையில் எழுதி இருக்கும்மா" என்றாள் அடிக்குரலில் மகள்.

"உன்னை மாதிரி வாயை மூடிக்கிட்டு அடிமையா என்னால இருக்க முடியாது."

"நான் ஊமை அடிமைன்னா, நீ வார்த்தைகளைக் கொட்டற அடிமை. அவ்வளவுதான் வித்தியாசம்" என்றபடி பூச்சரத்தோடு உள்ளே எழுந்து போனாள் துளசி.

"நீயும் பேச ஆரம்பிச்சுட்ட இல்ல" என்று ஆற்றாமையோடு கத்தினார் தேவகி.

"அம்மா, ஆண்டான் அடிமை பேதம் பார்க்க, இது வேலை செய்யும் புற இடம் கிடையாது. வீடு. வீட்டில் அன்பைக் கொடுத்து அன்பை வாங்கப் பழகு. ஹரி கொலைக் குத்தம் செஞ்சுடலை. விரும்பி ஒரு பெண்ணை மணந்திருக்கான். இப்படியே நீ வார்த்தையைக் கொட்டினா, அவன் வெறுப்புக்குத்தான் ஆளாக வேண்டி வரும்."

ஃ ஃ ஃ

அடுத்த இரண்டு தினங்களில் அலுவலகத்திலிருந்து சீக்கிரமே வந்தாள் வனிதா.

"அண்ணி, குருவை தயார் பண்ணி நீங்களும் சீக்கிரம் கிளம்புங்க. என் அலுவலக நண்பரோட அண்ணன் ஒரு சைக்கியாட்ரிஸ்ட். அவரோட அப்பாய்ண்ட்மெண்ட் கிடைச்சிருக்கு. குருவை காட்டிடலாம்."

"அ... அதுக்கெல்லாம் ரொம்ப செலவாகுமே, வனி."

"இப்ப என் வருமானமும் வருதே, அண்ணி. சமாளிச்சுக்கலாம். இப்படியே இவரை வெச்சிருந்தா நல்லதில்லை. சாதிக்க வேண்டிய ஒரு இளைஞரை இப்படி முடக்கி வெச்சா, சமுதாயத்துக்கே நாம துரோகம் செய்யறா மாதிரி. வாங்க."

மூவரும் கிளம்புவதை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார் தேவகி.

ஃ ஃ ஃ

"உடலோட அத்தனை பாகங்களையும் கூறு போட்டு அலசிடுச்சு அறிவியல் உலகம். ஆனா, இன்னும் பல வகையில் புதிராய் இருக்கும் ஒரு விஷயம் மனித மூளைதாம்மா. ஒரு காதல் தோல்வியை 'டாக்டர் பொண்ணு நோ சொன்னா, நர்சு பொண்ணைக் காதலி'னு ஈஸியா எடுத்துக்கறவங்க இருக்காங்க. 'எங்கிருந்தாலும் வாழ்க'னு தன் வேலையை கவனிக்கப் போறவங்க ஒரு ரகம். 'பழி வாங்கறேன்', 'வாழ விடறேனா பார்'னு பொங்கி எழற தீவிரவாத இனம் ஒரு விதம். உங்க குரு மாதிரி மனம் பாதிக்கற அளவு கலங்கிப் போறது ஒரு ரகம்" என்று பொதுவாய் ஒரு விளக்கம் தந்த டாக்டர் சில மருந்துகளை எழுதினார்.

"நான் அதிகம் மருந்து கொடுக்கப் போறதில்லை. கவுன்சிலிங் மூலமாகவே இவரை குணப்படுத்திடலாம். இத்தனை வருஷம் நீங்க டிரீட்மெண்ட் கொடுத்திருந்தா எப்பவோ குணமாகியிருப்பார். எனிவே, பெட்டர் லேட் தேன் நெவர். வீட்டில் ஜடம் மாதிரி முடக்கி வைக்காதீங்க. காற்றோட்ட

மான இடங்களுக்கு அழைச்சுக்கிட்டுப் போங்க. கொஞ்சம் பேசங்க. நிறைய அன்பை வெளிப்படுத்துங்க. அந்தப் பெண்ணோட நிராகரிப்பும் தாழ்வு மனப்பான்மையும் தான் இவரை இப்படி உறைஞ்சு போக வச்சிருக்கு. அதுக்கு ஈடு செய்யறா மாதிரி அன்பைக் காட்டுங்க. மீதியை நாங்க பார்த்துக்கறோம். சீக்கிரமே இவர் குணமாகிடுவார்."

வீட்டில் ஹரியும் தேவகியும் விஷயத்தைக் கேட்டுக் கொண்டார்கள்.

"இதையேத் தான் முதல்ல பார்த்த அந்த டாக்டரும் சொன்னாரு. பார்க்கலாம் குணமானாத் தான் நிச்சயம்" என்றார் தேவகி நொடிப்புடன்.

ஆனால், அதை யாரும் சட்டை செய்ய வில்லை!

இந்த மருத்துவம் போதாது என்று ஹோமியோபதி டாக்டர் ஒருவரிடம் அழைத்துப் போனாள் வனிதா. அவர் சில மருந்துகளைப் பரிந்துரைத்தார்.

"ஒரே சமயத்துல ரெண்டுவித மருந்து களைக் கொடுக்கக் கூடாது" என்று கறாராகச் சொன்னார் தேவகி.

"அப்படி இல்லை, அத்தை. ஹோமியோபதி டாக்டர் கிட்ட அல்லோபதி டிரீட்மெண்ட் பத்தி சொல்லிட்டுத்தான் மருந்து வாங்கி இருக்கு. அல்லோபதி கூட ஹோமியோபதி மருந்தை சில சமயம் கொடுக்கலாம். சைட்-எபெக்ட் ரொம்ப கிடையாது."

"ஏற்கனவே கிறுக்கு பிடிச்சு இருக்கான். உயிருக்கு உலை வைக்காம ஓயப்போறதில்லை போலிருக்கு."

"குணமாயிட்டா?"

"விதண்டாவாதமாப் பேசறதே வழக்க மாயாச்சு. வந்தவளைச் சொல்லி என்ன பயன்? பெத்தது சரியில்லை."

"சரி பண்ணிடலாம், அத்தை. கவலைப் படாதீங்க."

எது சொன்னாலும் பாதிப்படையாமல் அசராமல் பதில் சொல்லும் வனிதாவை ஆச்சர்யமாய்ப் பார்த்தார் தேவகி.

ஃ ஃ ஃ

**தா**னும் கணிசமாய் சம்பாதிப்பதால், ஹரி கணக்கு எழுதுவது டியூஷன் எடுப்பது என்று நேரம் காலம் பார்க்காமல் உழைத்தது போதும் என்று மேல் வேலைகளை நிறுத்தச் சொல்லி விட்டாள் வனிதா.

"அதுல அஞ்சாயிரம் போகும்" என்று கத்தினார் தேவகி.

"அதை விட நாலுமடங்கு நான் சம்பாதிக்கறேன். போதும்."

ஒவ்வொரு கட்டத்திலும் தான் சொல்வது எடுபடாமல் மருமகளின் வார்த்தைகளே கடைசியாய் இருப்பதில் அதிக எரிச்சல் ஏற்பட்டது. அதுவும் இந்த விஷயத்தில் ஹரி மறுபேச்சிற்கு இடமே இல்லாமல் நிம்மதியாக மேல்வேலைகளை கை விட்டான். டியூஷன் பையனுக்கு வேறு ஒருவரை ஏற்பாடு செய்து விட்டே நின்றான்.

ஆறரை ஏழு மணிக்கெல்லாம் வீடு திரும்பி டி.வி. பார்த்து ஒய்வு எடுப்பது பரமசுகமாய் பட்டது அவனுக்கு. இதற்கு முன் பதினொன்று, பன்னிரெண்டு மணி என்று அலுத்துச் சலித்துத் தான் வீடு திரும்பியிருக்கிறான். ஓடாய்த் தேய்ந்த மகனுக்கு ஒய்வு எனும் போது தேவகியாலும் அதற்கு மேல் வற்புறுத்த முடியவில்லை.

வனிதா சொல்வதும் செய்வதும் எல்லாமே ஏற்கக் கூடியதாய் இருந்து விட்டதில் தேவகியால் எதுவுமே பேச முடியாமல் போனது.

ஒன்றுமில்லை, ஒரு பார்க் பீச் என்று கூட இருவரும் தனியே கிளம்பவில்லை.

"அண்ணி, குரு பிள்ளைங்களை தயார் பண்ணிட்டு கிளம்புங்க. எல்லோரும் பீச்சுக்குப் போவாம்" என்று எல்லோரையும் கட்டி இழுத்தாள் வனிதா.

"ஹையா, பீச்சா?" குதி போட்டு குழந்தைகள் கிளம்புவார்கள்.

துளசி மட்டும் நெளிவாள். "ஷ்..." என்று குழந்தைகளை அதட்டி விட்டு "நீயும் ஹரியும் போயிட்டு வாங்க" என்பாள்.

புன்னகை மாறாமல் வனிதா சொல்வாள்.

"குருவை கொஞ்சம் வெளியே கூட்டிப் போய் வரச் சொல்லி இருக்கார் இல்ல டாக்டர். குழந்தைங்களும் சந்தோஷப்படுது பாருங்க. போய் ரெடியாகுங்க. நீங்களும் தான் எங்கே போறீங்க, வர்றீங்க? அத்தை வந்தாலும் சந்தோஷம்."

குழந்தைகள் மகிழ்ச்சி, குருவின் நலம் என்று பேசும் மருமகளை என்ன சொல்லி திட்ட முடியும்? ஆனாலும், ஒட்ட முடியாமல் முறுக்கிக் கொள்வார் தேவகி.

"நான் ஒண்ணும் வரலை. காசுக்குப் பிடிச்ச கேடா, எல்லோரும் ஊர் சுத்தப் போனா வீடு உருப்பட்டாப்ல தான். ஏதோ குழந்தைகளை மட்டும் எப்பவாவது ஹரி கூட்டிப் போவான் வெளியே. அது நியாயம்..."

அவர் பேசுவதைக் காதிலேயே போடாமல் அவரவர் ஆர்வமாய் கிளம்புவதைப் பார்க்க பற்றிக் கொண்டு வரும். அதுவும் வனிதாவாவது 'அத்தை வந்தாலும் சந்தோஷம்' என்றாள். தேவகி பெற்ற மகனோ மகளோ 'நீயும் வர்றியாம்மா?' என்று ஒப்புக்குக் கூடக் கேட்காமல் கிளம்புவதைப் பார்க்க ஆத்திரம் மூளும். காற்றாட போய் வந்தால் நன்றாகத் தான் இருக்கும் என்று சின்ன ஆசை கூட அடி மனதில் எழும். அப்படி எழும் ஆசைக்காக தன்னையே சபித்துக் கொண்டு கொட்டு கொட்டு என்று உட்கார்ந்திருப்பார்.

வீர நாட்களில் முறை போட்டுக் கொண்டு துளசியோ, வனிதாவோ, ஹரியோ அருகில் இருக்கும் பூங்காவிற்கு குருவை அழைத்துப் போய் வந்தார்கள். சொன்னதைச் செய்யும் ரோபோ போல் அவன் இயங்கினான். பொருட்படுத்தாமல் அவனிடம் நிறையப் பேசினார்கள். கவுன்சிலிங், தெரபி என்று அழைத்துப் போனார்கள். தொடர்ந்த முயற்சிகளால் வெறித்த பார்வை மாறி சற்று பேசினால் நிலைத்துப் பார்க்கத் துவங்கினான், குரு.

ஒரு நாள் டி.வி.டி. ஒன்றை வாங்கி வந்தாள் வனிதா. வழக்கம் போல் தேவகி அதற்காக கத்தினாலும், அவள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் ஹரியே, "நம்ம ரெண்டு பேர் சம்பளமும் சேர்ந்தா நல்ல கணிசமான வரவுனு தான் சொல்லணும், வனி. ஆனாலும் இப்ப இருக்கும் நிலையில் இந்த டி.வி.டி. எல்லாம் அவசியமா?" என்றான்.

"காரணமாத்தான் வாங்கறேன், ஹரி. நான் டாக்டர் இல்லை. ஆனாலும், ஒரு சின்ன முயற்சி பண்ணிப் பார்க்கலாமேனு தான்."

"என்ன முயற்சி?"

"சொல்றேன்."

அந்த ஞாயிறு எல்லோரும் மதிய உணவை முடித்துக் கொண்டு ஓய்வாய் சாய்ந்த பொழுது 'ஒரு தலை ராகம்' படத்தை டி.வி.டி.யில் ஓட விட்டாள்.

"குழந்தைங்க குட்டிச் சுவராப் போகப் போகுது" என்றார் தேவகி.

"ஹையோ பழைய படமா?" என்றன குழந்தைகள்.

"பாட்டெல்லாம் சூப்பரா இருக்கும்" என்றாள் துளசி.

## எலிகள் நிகழ்த்தும் 'கடல் சாகசம்'

எலிகள் என்ன செய்யும்? பொந்துக்குள் வாழும். வீடுகளிலுள்ள துணிமணிகள், புத்தகங்கள், காகிதங்களை கடித்து போடும். தானியம் நிலுவை வைத்திருக்கும் கிட்டங்குகளில் ஓட்டை போட்டு உணவு தானியங்களை கொள்ளை அடிக்கும்.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஷேன் வில்மட் என்பவர் வளர்த்து வரும் 'ராக்கெட்', 'பீனட்', 'ஸ்கிட்மார்க்', 'பான்ஜாய்' என்ற பெயர்களுடைய நான்கு எலிகள் மட்டும் மற்ற எலிகளுக்கு நேர்மாறாக கடலின் அலைகள் மீது சாகச பயிற்சிகள் செய்கின்றன.

படகுகளை தயாரிப்பதில் நிபுணரான ஷேன்.

"டி.ராஜேந்தரோட முதல் படமில்ல?" என்றான் ஹரி.

எதையும் கவனிக்காமல் குருவையே பார்த்தாள் வனிதா. படம் ஓடிக் கொண்டிருந்தது.

' ஒரு தலை ராகம்
எந்த வகையினை சாரும்?
அவள் இரக்கத்தைத் தேடும்
என் மனம் பாடும்...'

ஜெயச்சந்திரனின் ஐஸ்கிரீம் குரல் உருகியது.

மெல்ல குருவின் கண்கள் பல வருடங்களுக்குப் பின் சின்னத்திரையை நோக்கின. அதில் லயித்தன. வனிதா சின்னதாக புன்னகைத்துக் கொண்டாள்.

## 19

திருமணத்திற்குப் பின் வாங்கிய முதல் சம்பளத்தை மாமியாரிடம் கொண்டு கொடுத்தாள், வனிதா. அதை நேரடியாக வாங்க கவுரவம் இடம் கொடுக்கா விட்டாலும், எங்கே ரொம்ப முறுக்கிக் கொண்டால், 'சரி, நானே வெச்சுக்கறேன்' என்று மருமகள் எடுத்துக் கொண்டு



தான் மிக செல்லமாக வளர்க்கும் இந்த நான்கு எலிகளுக்காக சிறிய சிறிய சர்பிங் படகை செய்துள்ளார். கோல்டு கோஸ்ட் கடற்கரையில் கடல் அலைகளின் மேல் இந்த எலிகள் செய்யும் பயிற்சிகள் நீச்சல் நிபுணர்களையே ஆச்சரியப்படும்படி செய்கின்றன. அந்த எலிகளில் ஒன்று கடல் அலைகளின் மீது 'சர்பிங் போட்'டில் அமர்ந்து சாகசம் புரிவதை படத்தில் காணலாம்.

-சாமி.

விடுவாளோ என்ற பயமும் இருக்க,

"அப்படி சாமிகிட்ட வை" என்றார் தேவகி.

அப்படியே செய்தவள், முகம் கழுவ உள்ளே போனாள்.

"உன் மருமகளை புரிஞ்சுக்கோ" என்றாள் துளசி.

முகவாயைத் தோளில் இடித்துக் கொண்டு உள்ளே போனார் தேவகி.

இரவு உணவு முடிந்த பின், அவரவர் பாயை விரித்து படுக்க முயன்ற சமயம், "உங்க எல்லோர்கிட்டயும் கொஞ்சம் பேசணும்" என்றாள் வனிதா.

துளசியும் ஹரியும் ஆவலாய் வந்து அமர, தேவகி 'நீ என்ன சொல்வது, நான் என்ன கேட்பது?' என்பது போல் பேசாமல் படுத்தார்.

"எண்ணூறு சதுரடியில் இரண்டு படுக்கையறை கொண்ட பிளாட் கிட்டத் தட்ட இருபது லட்சமாகுது. ரெண்டு மூணு பில்டர்களோட வீடுகள் இருக்கு. எல்லோரும் போய்ப் பார்த்து எது பிடிக்குதோ அதை வாங்கிடலாம்."

ஏதோ கடைக்குப்போய் பழம் வாங்கலாம் என்று சொல்வது போல் அவள் சர்வ சாதாரணமாக சொல்ல, விலுக்கென எழுந்தார் தேவகி.

"பணம் என்ன உங்கப்பனா கொடுப்பான்?" என்றார் இளக்காரமாய்.

"அவர் கொடுத்த பணத்தைத்தான் முன் பணமாத் தர வேண்டியிருக்கும் அத்தை. கல்யாணத்துக்கு முன் நான் சம்பாதிச்சது. என் அப்பா, அண்ணன் இவங்க என் கல்யாணத்துக்காக சேர்த்ததுனு ஏழு லட்சத்தை, கல்யாணம் கோயில்ல சிம்பிளா நடந்த காரணத்தால் செலவழிக்காமல், என் பேர்ல அப்படியே டெபாசிட் பண்ணிட்டாங்க. அதை முன் பணமாப் போடலாம். என் வங்கியில் எனக்கு சகாய வட்டி விகிதத்தில் கடன் கிடைக்கும். பதினைஞ்சு லட்சம் வாங்கினா..."

"மாசம் வயத்துல துண்டைப் போட்டுக் கிட்டுத்தான் உட்காரணும்."

"இல்ல, அத்தை. எங்க ரெண்டு பேர் சம்பளமும் சேர்ந்தா முப்பதாயிரத்துக்கு மேல வருதே. பத்தாயிரம் சிக்கனமா வீட்டுச் செலவுக்கு வச்சுப்போம். பத்தாயிரம் குழந்தைங்க படிப்பு, குரு மருத்துவ செலவுக்குனு சரியாப் போயிடும். மீதி பத்தாயிரத்தில் லோன் அடைச்சுடலாமே?"

"பதினைஞ்சு லட்சத்துக்கு பத்தாயிரம் கொடுத்தா போதுமா? என்ன கணக்கு போடற? பேங்க்ல வேலை செய்யறவ போடற கணக்கைப் பாரு."

"மீதி நாலஞ்சாயிரத்துக்கு வீட்டை வாடகைக்கு விட்டா பணம் வருமில்ல..."

"என்னது வீட்டைக் கட்டி வாடகைக்கு விடறதா?"

"ஆமாம். நிலைமை இன்னும் கொஞ்சம் உயரும் வரை அப்படிச் செய்யறது தான் சரிப்படும்."

"அப்ப நிலைமை அப்படி உயர்ந்த பின்னாடி வீடு வாங்கிக்கலாம்."

அதுவரை மாமியார், மருமகள் பேச்சில் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்த ஹரி, "வனி, நான் இப்படி ஒரு விஷயத்தை யோசிச்சேப் பார்க்கலை. நல்ல ஐடியா. சொந்தமா நமக்கே நமக்குனு ஒரு வீடா? நினைச்சுப் பார்க்கவே எவ்வளவு சந்தோஷமா இருக்கு!" என்றான் கண்கள் விரிய.

தான் சொன்னதை சட்டை செய்யாமல் மகன் பரவசப்படுவதில் தேவகிக்கு பயங்கர எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது.

"என்ன நல்ல ஐடியா? வீட்டைக் கட்டிட்டு குடிபோக முடியாம..."

"அது கொஞ்ச காலத்துக்குத் தானேம்மா. நீ சொல்றா மாதிரி நம்ம நிலைமை முன்னேறின

பிறகு வீடு வாங்க நினைச்சா, விலையெல்லாம் எங்கேயோ உச்சாணியில போய் நிக்கும். இப்பவே என்ன விலை விக்குது!" என்றாள் துளசி.

"அப்பா இருந்திருந்தா எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார். எந்த சுகத்தையுமே அனுபவிக்காம போயிட்டாரேம்மா, பாவம்" என்றபோது ஹரியின் கண்கள் கலங்கி விட்டன.

கப்பென அடங்கிப் போனார் தேவகி. கணவர்தான் ஓடி ஓடி உழைத்தும் எந்த சுகத்தையும் அடையாமலே போய்ச் சேர்ந்தார். கஷ்டப்பட்டாலும் சொத்து சுகமென மகனாவது அனுபவிக்கட்டுமே. உள்ளே மனம் இளகினாலும், வெளியே, "என்னவோ சொல் றதைச் சொல்லிட்டேன். அகலக் கால் வைத்து மாட்டிக்காம இருந்தாச் சரி. விரலுக்கு ஏத்த வீக்கம் வேணும். ஆமாம்" என்றார் கறாராக.

மறுநாள் மாலையே எல்லோருமாய் வீடுகளைப் போய்ப் பார்ப்பது என்ற முடிவோடு மகிழ்ச்சியாய் அன்று இரவு தூங்கச் சென்றது அந்தக் குடும்பம்.

ஃ ஃ ஃ

**மா**மியார் கையாலேயே வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுக்க வைத்தாள் வனிதா.

"நான் எதுக்கு? நீங்க ரெண்டு பேருமே பணத்தைக் கொண்டு கொடுங்க" என்று சற்றே பிகு செய்து கொண்டாலும், "அம்மா, வாம்மா" என்ற ஹரியின் ஒற்றை வார்த்தை அதட்டலுக்கு ஆசையாய் கட்டுப்பட்டார் தேவகி.

இவர்கள் தேர்ந்தெடுத்த வீடு கிட்டத்தட்ட கட்டி முடிக்கப்பட்ட நிலையில் இருந்தது. விசாலமான இரு அறைகளும் நீண்ட ஹாலும் பளபள டைல்ஸ் பதித்த தரைகளும் கச்சித மான வசதிகள் கொண்ட சமையலறையுமாய் அப்படியே மனதில் பதிந்தது. தேவகியால் நம்பத்தான் முடியவில்லை. தன் ஆயுளுக்குள் மகனால் இல்லை இல்லை, மருமகளால் சொந்த வீடு என்ற ஒன்றைப் பார்க்கப் போகிறாள். நினைக்கும் போதே கண்கள் பனித்தன. ஒண்டுக் குடித்தன பொந்துக்குள் தன் காலம் முடிந்து விடும் என்று தானே நினைத்திருந்தாள்.

சட்டென தோளில் கரம் போட்டு அணைத்துக் கொண்டான் மகன்.

"என்னம்மா, கண்ணெல்லாம் கலங்குது. கூடிய சீக்கிரமே இந்த வீட்ல வந்து குடியேறிடலாம், கவலைப்படாதே."

"ஒரு நல்ல நாள் பார்த்து சின்னதா கிரஹப்பிரவேசம் செஞ்சுடலாம். அதிக கும்பல் வேண்டாம். நம்ம குடும்பம், வனிதாவோட அப்பாம்மா, அண்ணன் அண்ணி போதும், என்ன?"

"அட்வான்ஸ் கொடுத்துட்டோம். லோன் சேங்க்ஷனாகி பணம் கொடுத்தவுடனே, சாவி தந்துடுவாங்க. அனேகமா நாலு வாரத்துல முடிச்சுடலாம். நல்ல நாள் பாரும்மா."

துளசியின் குழந்தைகள் இரண்டும், "உனக்கு இந்த ரூம்... எனக்கு அந்த ரூம்" என்று பங்கு போட்டுக் கொண்டிருந்தன. அவற்றை அடக்கிய துளசியின் கண்களில் கண்ணீர் திரண்டது.

ஃ ஃ ஃ

**அ**ந்த ஞாயிற்றுக்கிழமை வனிதா 'பம்மல் கே சம்பந்தம்' படத்தை ஓட விட்டாள். குழந்தைகள் விழுந்து விழுந்து சிரித்தன.

"நடுவில் விளம்பரம் வராம முழுசா படம் பார்க்கறதும் நல்லாத்தான் இருக்கு" என்றார் தேவகி இம்முறை.

சிம்ரன் கமலை நிராகரிக்க கமல் உடைந்து போய்வெளியேறும்போது அடிவயிற்றிலிருந்து நெஞ்சை உறையச் செய்யும்படி பாடல் எழுந்தது. 'ஏன்டீ சூடாமணி, கண்டதுண்டோ காதல் வலி?'

சுருண்டு படுத்திருந்த குருவின் விழிகள் மீண்டும் திரையில் லயித்தது. கண்களிலிருந்து சரம் சரமாய் கண்ணீர் வழிந்தது. கை முட்டியை மடக்கி தரையில் குத்தினான்.

திரையில் லயித்து அதன் ஹாசியத்தில் மூழ்கியிருந்த குடும்பம் குருவை கவனிக்கத் தவறியது. ஆனால், வனிதா மட்டும் குறித்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ




**அ**ன்று மாலை துளசி மாடியில் துணிகளை எடுத்துக் கொண்டிருந்த போது வனிதா அங்கு போனாள்.

"ஆபீஸ் விட்டு வந்துட்டியா, வனி. கீழே வந்து காபி தரேன்" என்றாள் துளசி.

"இருக்கட்டும், அண்ணி" என்றபடி துணிகளை எடுத்து தானும் மடிக்கத் துவங்கினாள்.

"ராத்திரி சாப்பாட்டுக்கு பொங்கல்

செஞ்சுடவா? தேங்காய்ச் சட்னிக்கு தேங்காய் மட்டும் நீ துருவித் தா போதும்."

பதில் சொல்லாமல் அவளையே குறுகுறுவென பார்த்தாள் வனிதா.

"என்ன அப்படி பார்க்கற, வனி?"

"ஒண்ணுமில்லை, அண்ணி. இப்படியே எத்தனை காலம் இருக்கப் போறீங்க?"

"ஏன்? என்ன? புரியலை"

"இல்ல, குழந்தைகள் வளர்ந்துகிட்டு வர்றாங்க. அவங்க எதிர்காலம், படிப்புனு எவ்வளவு விஷயம் இருக்கு... பணம் நிறைய வேணுமே..."

மடித்துக் கொண்டிருந்த துணியை அப்படியே மதில் சுவரின் மேல் வைத்து விட்டு வனிதாவை ஆழமாய் நோக்கினாள் துளசி.

'என்ன சொல்ல வருகிறாள் இவள்? அம்மா எதிர்த்த போது கூட நாம்தானே இவளுக்கு ஆதரவு கரம் நீட்டினோம். நல்லவளாய்த் தானே இதுவரை இருக்கிறாள். மெல்ல ஒட்டகம் நுழைந்த கூடாரம் கதையாய் தன்னை வெளியே துரத்தி விட்டு விடுவாளோ?

ஐயோ... குழந்தைகளுடன் நடுத்தெருவில் அல்லவா நிற்க வேண்டி வரும். தம்பி பார்த்துக் கொள்வான் என்று தானே நம்பி இருக்கிறோம். அம்மாவின் கணக்குத்தான் சரியோ?

தனக்கென்று படிப்பிருந்து, ஒரு வேலை இருந்திருந்தால் இப்படி கணவனாலும் பிறந்த வீட்டினராலும் உதாசீனப்படாமல் இருந்திருக்கலாமே.' கண்களில் நீர் திரண்டது.

"என்ன அண்ணி யோசிக்கறீங்க?"

"உங்களை நம்பித் தானே நானும் குழந்தைகளும் இருக்கோம். எனக்குப் படிப்பு இல்லை, வேலை இல்லை, ஆதரவு இல்லை" சொல்லச் சொல்ல அழுது விட்டாள்.

வனிதா அசரவில்லை. "முக்கியமா தன்னம்பிக்கை இல்லை" என்று முடித்தாள்.

முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்த துளசி விலுக்கென நிமிர்ந்தாள்.

"என்ன சொல்றே?"

"என்னை உங்க தம்பிக்கு ஆறு வருஷமாத் தான் தெரியும். ஆனா, பிறந்தது முதல் உங்களைத் தெரியும், அவருக்கு. ஆறு வருஷ உறவுக்காக முப்பது வருஷ உறவை விட்டுடக் கூடியவரா உங்க தம்பி?"

"ஆறு வருஷ உறவு தான் இனி ஆதார உறவா இருக்கப் போகுது."

"எல்லா உறவுகளுமே ஆரோக்கியமா இருந்தாத்தான் குடும்பத்துக்கே நல்லது."

"நீ என்னதான் சொல்ல வர்றே? நான் வீட்டை விட்டே போயிடணுமா?" ஆத்திர மாய்க் கேட்டாள், துளசி.

"என்னைப் பார்த்தா அப்படி சொல்லக் கூடியவளாவா தெரியுது?" முகம் சிறுத்தாலும் புன்னகை வாடாமல் கேட்டாள்.

"வனிதா..." குரல் இளகியது துளசிக்கு.

"அண்ணி, உங்க கணவர் உங்களை விரும்பித்தான் மணந்தார். ஆனா, எவ்வளவு சுலபமா தூக்கி எறிஞ்சுட்டார்."

"அது என் தலையெழுத்து."

"அதை மாத்தி புதுசா எழுதலாம்."

"திரும்ப அவரோட சமரசம் செஞ்சுகிட்டுப் போகச் சொல்லறியா? முடியவே முடியாது."

"அவசியம் இல்லை. ஆனால், ஒரு பொக்கிஷத்தை இழந்துட்டோமேனு அவர் வருந்தும் அளவு நீங்க உசந்து காட்டலாம் இல்லையா. உங்க தம்பி தயவுல ஏதோ உங்க காலம் ஓடுதுனு அவர் உங்களைக் குப்பை மாதிரி நினைச்ச நிலை மாறி ஒரு பிரமிப்பு ஏற்படணும். அதுதான் உங்க வெற்றி. படிப்பு செலவெல்லாம் ஏகத்துக்கு எகிறி கிடக்கு. எத்தனை பேர் சம்பாதிச்சாலும் சரியா இருக்கும்."

"வெறும் ப்ளஸ்டு பாஸ். நான் என்ன சாதிக்க முடியும்?"

தன் கையில் கொண்டு வந்து சுவர் மேல் வைத்திருந்த புத்தகத்திலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து நீட்டினாள், வனிதா.

"அழகழகா நீங்க போடற கோலத்தைப் பார்த்தேன். என்ன அழகு! உங்க குழந்தை களுக்கு பாடத்திற்காக வரைஞ்சு தரும் படங்களில் கூட ஒரு நேர்த்தி இருக்கு. பொழுது போகாம நீங்க வரையும் படங்களையும் பார்த்தேன். இது கம்ப்யூட்டர் வகுப்பிற்கான படிவம். கிராபிக் டிசைனிங் மாதிரி கோர்ஸ்ல சேர்ந்தா உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கும். அதைத் தவிர, எத்தனையோ ஓவிய வகுப்புகள் நடக்குது. சேருங்க. திறமையை வளர்த்துக்கோங்க. இப்ப நம்ம ஊருல ஓவியத்துக்கு நல்ல வரவேற்பு இருக்கு. ஆயிரம் ஆயிரமா.... இல்லை, லட்சங்களில் சம்பாதிக்கலாம்."

ஆசையாய் அந்த நுழைவுப் படிவத்தை வாங்கிக் கொண்டாள் துளசி.

"என்னால முடியுமா, வனி?"

"ஏன் முடியாது அண்ணி? ஆர்வமும் முயற்சியும் தான் முக்கியம். இன்னைக்கு ஆலமரமா தழைச்சிருக்கும் கலாஷேத்ராவை

உருவாக்கின ருக்மணி அருண்டேல் தன்னோட நாற்பதாவது வயசுல தான் பரதத்தைக் கத்துக்கவே ஆரம்பிச்சாங்களாம். சாதனைக்கு வயசு ஒரு பொருட்டில்லை."

பளிச்சென்று அவளைப் பிடித்து இழுத்து ஒரு முத்தத்தைப் பதித்த துளசி, குழந்தை போல் கீழே ஓடினாள் அந்தப் படிவத்துடன்.

ஃ ஃ ஃ

## 21

அன்று 'காதல்' படத்தை டி.வி.டி.யில் போட்டாள் வனிதா. படம் ஆரம்பம் முதலே குருவின் பார்வை திரையில் பதிந்தது.

மருந்து, மாத்திரை, தெரபி, வெளியே அழைத்துப் போவது என்று விடாமல் மேற்கொண்ட முயற்சிகளோ என்னவோ கொஞ்ச நாட்களாகவே வெறித்த பார்வை மாறி யார் பேசினாலும் சட்டென அவர்களை நோக்கத் துவங்கியிருந்தான். கீ கொடுத்த ரோபோ பொம்மை போல் இயங்கி வந்தவன், பேசத் தெரியாத குழந்தை நிலைக்கு மாறியிருந்தான்.

இன்று ஆர்வமாய் அவன் படத்தைப் பார்ப்பதை கவனித்தாள் வனிதா. பரத்தையும் சந்தியாவையும் பிரிக்கும் காட்சியில் மீண்டும் அவன் கண்களில் கரகரவென கண்ணீர் வழிந்தது. பரத் பைத்தியமாய்த் திரியும் இடத்தில் "நோ..." என்று பெரிதாய் அலறியவன் அப்படியே மயங்கிச் சரிந்தான்.

குடும்பமே ஸ்தம்பித்தது.

ஃ ஃ ஃ

"ஒன்னும் பயம் இல்லையே, டாக்டர்?" பதற்றத்தோடு கேட்டான் ஹரி. அருகே கையைப் பிசைந்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள் வனிதா.

"நோ, நத்திங் டு ஒர்ரி. இப்ப செடேட்டிவ் கொடுத்திருக்கு. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கட்டும். அப்புறமா நீங்க போய்ப் பாருங்க."

"இவ ரொம்ப பயந்துட்டா. கொஞ்ச நாளா காதல் தோல்விப் படங்களா போட்டு அவன் கவனத்தை அதில் திருப்பியிருக்கா. அதனால...."

"சீக்கிரமாப் பலன் கிடைச்சிருச்சுனு வச்சுக்கலாம். நல்ல முயற்சி. விட்டா எனக்குப் போட்டியா மனோதத்துவ டாக்டரா ஆயிடுவாங்க போலிருக்கே உங்க மனைவி. ஷாக்ல உறைஞ்சு போயிருந்த மூளை திடீர்னு இந்தப் படங்களால் தூண்டப்பட்டிருக்கலாம். அப்கோர்ஸ் நாம ட்ரீட்மெண்ட் கொடுத்து வந்ததும் உதவியிருக்கு. உங்க தம்பி நார்மலாப் பேசினார்... அவர் தூங்கி எழுந்த பிறகு பேசிப் பாருங்க, உங்களுக்கேப் புரியும்."

"எப்ப வீட்டுக்குக் கூட்டிப் போகலாம், டாக்டர்?"

"எதற்கும் சில டெஸ்ட் எடுத்துப் பார்த்துடலாம். ரெண்டு நாள் அப்சர்வேஷன்ல இருக்கறதும் நல்லது. இன்னைக்கு வெள்ளிக் கிழமையா? திங்கள், செவ்வாய்ல டிஸ்சார்ஜ் பண்ணிடலாம், ஓகே?"

ஃ ஃ ஃ

குருவை நிறுத்தி வைத்து துளசியும் வனிதாவும் ஆரத்தி எடுத்தார்கள். உள்ளே நுழைந்த மகனைக் கட்டிக் கொண்டு அழுது தீர்த்தார் தேவகி. குருவின் கண்களுமே கலங்கி விட்டன.

## 760 மீட்டர் உயர நாற்காலி கட்டிடம்!

தென் ஆப்பிரிக்காவில் 'கேப்டவுன்' நகரில் நாற்காலி வடிவில் பிரமாண்ட கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இது 760 மீட்டர் உயரம் கொண்டது. சாதாரண நாற்காலியில் 2 பேர் உட்காரலாம். ஆனால் இந்த நாற்காலி கட்டிடத்தில் 50,000 பேர் தங்கலாம். இதற்காக 8,00,000 மீட்டர் இடவசதி செய்யப்பட்டுள்ளது.

நாற்காலிக்கு உள்ளது போன்று இந்த நாற்காலி கட்டிடத்துக்கும் 4 கால்கள். ஒவ்வொன்றும் 25 X 30 மீட்டர் விட்டத்தில் 460 மீட்டர் உயரத்துக்கு கட்டப்பட்டுள்ளது. இந்த நாற்காலி கட்டிடத்தில் அமர்வதற்கு 450X450 மீட்டர் திறந்தவெளியாக விடப்பட்டுள்ளது.

கடலை இதன் மீது அமர்ந்து பார்க்கும் வகையில் பொதுபூங்கா, கால்பந்தாட்ட மைதானமும் உள்ளது. நாற்காலி கட்டிடத்திற்கு பின்புறம் 760 மீட்டர் உயரத்துக்கு குடியிருப்புகள் எழுப்பப்பட்டுள்ளன. இதற்கு இடைப்பட்ட இடத்தில் கடைகள், அலுவலகங்கள், விளையாட்டு வசதிகள், சினிமா, பார்கள், ரெஸ்டாரெண்டுகள் உள்ளன. வீடு இல்லாதவர்களுக்கு தங்கும் இடமாக இந்த நாற்காலி கட்டிடம் திகழ்கிறது. உலகிலேயே 2வது உயரமான

"உங்களுக்கெல்லாம் ரொம்ப தொந்தரவு கொடுத்துட்டேன், இல்லம்மா" என்றான் குரல் தழுதழுக்க.

"இல்லடாம்மா. சுயநினைவு இழந்து கிடந்தியே அதுதான் வயித்தெரிச்சலா இருந்தது. இந்தப் பொண்ணு வந்து உன்னை மீட்டெடுத்தா. ஒரு காதலால், ஒரு பெண்ணால் என் சின்ன பையனைக் கிட்டத்தட்ட இழக்கும் நிலைக்குப் போனேன். இன்னொரு காதலால், நல்ல பெண்ணால், அன்பு உருவால் மகனை மீட்டெடுத்திருக்கேன்."

கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சிய தேவகி மகனை உச்சி முகர்ந்தார். அப்படியே வனிதாவையும் கைப்பிடித்து இழுத்து தன் அருகே அமர்த்திக் கொண்டார்.

"காதலால் இவன் பித்துப் பிடிச்சு கிடந்தான். அப்போ ஹரியும் காதல்னு சொன்னவுடன் பகீர்னு ஆயிடுச்சு. ஆனா, ஒரு பெண்ணால் எவ்வளவு தூரம் சாதிக்க முடியும், அன்பால் வளைக்க முடியும்னு இவ நிருபிச்சுக் காட்டிட்டா. ஹரி சின்ன வயசிலிருந்தே பொறுப்பானவன். சரியான முடிவைத் தான் எடுப்பான். அவன் கல்யாண விஷயத்திலும் அப்படித் தான் நல்ல பெண்ணாய்த் தேர்ந்தெடுத்திருக்கான். நான்தான் ஜாதி வெறி, காதல் வெறுப்புனு கண்மூடித்தனமா இருந்துட்டேன். முன்னாடியே சம்மதிச்சிருந்தா எப்பவோ நீ குணமாகியிருப்ப, குரு. என்னை மன்னிச்சுடும்மா, வனிதா. உன்னை, உன் அருமையை இப்பத்தான் கொஞ்சம் கொஞ் சமாப் புரிஞ்சுக்கறேன்."

பதறிப் போனாள் வனிதா.

"அத்தை, என்ன அத்தை இது? பெரிய பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிக்கிட்டு. நான் உங்க மக மாதிரி. என்கிட்டப் போய்..."

ஹரி சந்தோஷமாய் சிரித்துக் கொண்டான்.

❀ ❀ ❀

அந்த நல்ல நாளில், நல்ல பொழுதில் கிரஹப்பிரவேசம் இனிதே முடிந்தது. ஹரி குடும்பத்தினரும் வனிதா வீட்டினரும் மட்டுமே காலை பூஜையில் கலந்து கொண்டார்கள். மாலை நெருங்கிய உறவினர், நண்பர்கள், அலுவலக சகாக்களை அழைத்து சின்ன கெட்-டு கெதராய் கொண்டாடினார்கள்.

ஹரியின் திருமணம், குருவின் உடல்நலம் தேறியது என்று எல்லா நல்ல விஷயங்களையும் கொண்டாடும் விதமாக விருந்தை தடபுடலாகவே நடத்தி விட்டார் தேவகி.

எல்லாம் நிறைவாய் முடிந்து எல்லோரும் விடைபெற்ற பின் ஓய்ந்து போய் குடும்பத்தினர் அப்படியே தரையில் படுத்தார்கள். துளசியும் வனிதாவும் மட்டும் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி விட்டு வந்தார்கள்.

"எல்லாம் நல்லபடி முடிஞ்சது. பகவானே நன்றிப்பா!"

"இன்னைக்கு ராத்திரி சாஸ்திரப்படி புது வீட்லதான் படுக்கணும்னு ஐயர் சொல்லிட்டுப் போனார்."

"புது வீட்ல படுத்தா கனவு வருமா?"

"புது இடத்துல முதல்ல தூக்கம் வருமா?"

ஆளாளுக்குப் பேசினார்கள்.

"தூங்காமலே எனக்குக் கனவு உண்டு" என்ற துளசி சிறு வெட்கத்துடன், "இந்தியாவிலேயே பெரிய ஓவியரா நான் ஆகிடறேன். டெல்லி,



கட்டிடம் இது.

இந்த நாற்காலி கட்டிடம் நான்கு திசைகளிலும் இருக்கும் மக்களை ஒன்று சேர்க்கும் மையமாக திகழ்கிறது. இதற்கு நாற்காலி கட்டிடத்தின் 4 கால்களும் இணைக்கும் படிகளாக உள்ளன.

அட்லாண்டிக் கடலை பார்க்கும் வகையில் ஏழைகளுக்கு என்றே ஆப்பிரிக்க கண்டத்தில் தெற்கு முனையில் கட்டப்பட்டிருக்கும் இந்த நாற்காலி கட்டிடம் உண்மையிலேயே பிரமிப்பை ஏற்படுத்துகிறது. அதிலும் இரவு நேரத்தில் இதன் ஜொலிப்பு கண்களைப் பறிக்கிறது.

- பாலாஜி.

மும்பைனு என் ஓவிய கண்காட்சிக்கு ஏக மவுசு கூடிடுது. இந்தியாவுக்கு வரமாட்டேன்னு உறுதியா இருக்கும் எப்.எம்.ஹுசேனே 'துளசியோட ஓவியங்களை நான் பார்க்கணும்'னு இந்தியாவுக்கு ஓடி வரார்..." அவள் அடுக்கிக் கொண்டே போனாள்.

"ஒரே மாசம் ஓவிய வகுப்புக்கும், கிராபிக்ஸ் கிளாசுக்கும் போயிட்டு இப்படி பேசறது கொஞ்சம் டூமச்சா இல்லைம்மா?" என்று கலாய்த்தான் துளசியின் மகன், அருண்.

"தப்பென்ன அருண்? இந்த கனவு தான் சாதிக்கத் தூண்டும். கனவு காணச் சொல்லி நம்ம அப்துல் கலாம் சாரே சொல்லலையா?" என்ற வனிதா சட்டென நினைவு வந்தவளாய்,

"குரு, சொல்ல மறந்துட்டேன். டி.வி. சீரியல் டைரக்டர் ஒருத்தர் எங்க வங்கி வாடிக்கையாளர். அவரோட புது சீரியலுக்கு நல்ல தலைப்புப் பாடல் ஒண்ணு வேணும்னு பேசிக்கிட்டிருந்தார். புது கவிஞர் ஒருத்தரை அறிமுகப்படுத்த விரும்பறாராம். நீங்க ஏன் முயலக் கூடாது? உங்களைப் பத்தி அவர்கிட்ட சொல்லியிருக்கேன்."

வினுக்கென எழுந்தான் குரு.

"அண்ணி, என்ன ஏதாவது என்னை வச்சு காமெடி கீமடி பண்ணறீங்களா?"

"இல்ல குரு. சீரியஸா சொல்றேன். அன்னைக்கு வீட்டை ஒழிச்சுக்கிட்டு இருந்த போது, உங்க கல்லூரி நோட்டு, புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தேன். அதில் எத்தனை கவிதைகள் இருக்கு. ரொம்ப நல்லா இருந்தது."

"அது ஏதோ காதல் கிறுக்கு பிடிச்சிருந்த சமயம் எழுதினது அண்ணி" முகம் வாட சொன்னான்.

"உண்மையிலேயே நல்லா இருந்தது, குரு. காதல் கிறுக்கு சமயத்தில் இவ்வளவு அற்புதமா எழுத முடிஞ்சா, இப்ப தெளிவா யோசிச்சு எவ்வளவு எழுத முடியும்! உங்க கற்பனை வளம் நல்லா இருந்தது.

'நிலவுக்குள் ஒரு மின்னல்
என்
காதலியின் புன்னகை.'

இப்படி நிறையக் கவிதைகள் நல்லா இருந்தது. எனக்கு நினைவு வச்சுகிட்டு சொல்லத் தெரியலை."

"மெட்டுக்குப் பாட்டெழுத இதெல்லாம் போதாது, அண்ணி. நிறையத் திறமை வேணும்."

"மறுக்கலை. தேவை, நிறைய முயற்சி குரு. உங்ககிட்ட கற்பனை இருக்கு, நல்ல தமிழ் வளம் இருக்கு. தேவை முயற்சி தான். முயன்று பார்ப்பதில் தப்பில்லையே."

"அண்ணி சொல்றதைக் கேளுடா... உருப்படுவே" என்றார் தேவகி.

அவனுள்ளும் சிறு நம்பிக்கை பூத்தது.

"அடுத்த வைரமுத்து நீதான்னு கனவு காண ஆரம்பி, மாமா" என்றான் அருண் விடாமல்.

எல்லோரும் சிரித்தார்கள்.

"கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்"

மெல்லப் பாடினாள் வனிதா.

"அந்தக் காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தர வேண்டும் - அங்குக்
கேணியருகினிலே - தென்னை மரம்
கீற்று மிளநீரும்...
பாட்டுக் கலந்திடவே - அங்கேயொரு
பத்தினிப் பெண் வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தர வேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா நின்றன்
காவலுற வேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்"

கரகர குரலில் ஹரி எதிர்பாட்டு பாடினான்.

"பாரதியாரைத் துணைக்குக் கூட்டிக்கிட்டு ஹரி மாமா கனவு காணறார் பார்" என்றான் அருண்.

"அதுல கிட்டத்தட்ட எல்லாமே நிறைவேறிடுச்சு ஹரி, உனக்கு" என்றாள் துளசி.

"அதிலும், கடைசி வரியான பாட்டுத் திறத்தால் பெரிய மாளிகை கட்டும் ஆசையும் பூர்த்தி ஆகிடும்" என்றான் குரு விஷமச் சிரிப்புடன்.

"என்னடா சொல்றே?"

"ம்... 'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்'னு பாடினானே! ஹரி அண்ணா பாடினா, பெரிய பெரிய கல்லா விழும். ஒரு மாளிகையே கட்டிடலாம்" குரு சதாய்க்க, ஹரி "ஹேய்..." என்றான்.

எல்லோரும் கலகலவென்று சிரித்தார்கள்.

'இந்த நிம்மதியும் சந்தோஷமும் என்றும் நிலைத்திருக்க வேண்டும்' என்று மனமார வேண்டிக் கொண்டார் தேவகி. அந்த அன்னையின் சின்னக் கனவு அதுதான். மெய்ப்படட்டும்.

**(முற்றும்)**